A 36
N28
180651

# பானக்கிராம் விஷயம்

மொழி பெயர்த்தவர்:—

K. S. ராமச்ச[...]

(பென்ஷன் [...])

8 - FEB 1929
MADRAS

மதுரை ஸ்ரீ ராமகிருஷ்ணா பிரஸ் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

[...], 1928] [விலை அணா நான்கு.

4:36
N28

180651

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 20 | மார்க்கம் | மார்க்கம் |
| 8 | 7 | பூர்வ | பூர்ண |
| 10 | 21 | இவிடம் | இவ்விடம் |
| 13 | 3 | முயற்ச்சி | முயற்சி |
| 14 | 17 | வற்றக் கோ | வற்ற கோ |
| 15 | 19 | துடங்கு | தொடங்கு |
| 20 | 1 | ஸ்வலர்ப | ஸ்வலாப |
| 23 | 5 | சிலவு | செலவு |
| | 16 | அவாக | அவர்க |
| | 25 | அன்பும | அன்பும் |
| 28 | 15 | அதன் | அவன் |
| 29 | 12 | சமுக | சமூக |
| | 18 | சீக்கிறம் | சீக்ரம் |
| | 29 | இச்சி | இச்சை |
| 30 | 2 | சாசுவதவு | சாசுவத |
| | 24 | ஆக்ஷி | ஆட்சி |
| 32 | 23 | பாரமார்த்தீக | பாரமார்த்திக |
| 33 | 7 | சூந்து | சூழ்ந்து |
| 34 | 12 | சன | கன |
| 37 | 20 | பலாபேக்ஷ | பலாபேக்ஷ |
| 38 | 28 | வேறொன்று | வேறுன்று |
| 39 | 12 | போதனை | போதனு |
| 40 | 24 | வினுயடய | வினுடைய |
| 44 | 7 | மெம்மேல் | மேன்மேல் |
| 55 | 10 | பொரு | பொறு |
| 62 | 24 | முரை | முறை |
| 63 | 11 | கோறி | கோரி |
| 64 | 26 | பாஷ்ய | பாஹ்ய |
| 66 | 18 | ஸுவேத | சுவேத |
| | 27 | ஸாயூஜ்ய | ஸாயுஜ்யப்ராப்தி |
| 67 | 3 | கர்ண | கரண |
| | 5 | உத்திஷ்ய | உத்திச்ய |
| | 10 | க்ஷபை | க்ஷமை |
| 68 | 1 | risan | rise |
| | 2 | risan | risen |
| | 13 | யனு | அனு |
| | 16 | ஸாதன் | சநாதன |
| | 16 | செல்கின் | செய்கின் |
| 69 | 12 | அரண்யத்தால் | அரண்யத்தில் |
| | 17 | அந்தர்யாம | அந்தர்யாமி |
| 70 | 9 | விடுப்பார் | விரும்பார் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 71 | 23 | அத்ருஸ்ய | அதிருஸ்ய |
| 72 | 21 | படையை | பயிரை |
| 73 | 9 | ஸ்வாபவம் | ஸ்வபாவம் |
| | 13 | முமுக்ஷூ | முமுக்ஷு |
| 74 | 7 | ஸானுபூதி | ஸ்வாநுபூதி |
| | 10 | ஸ்மர்சி | விமர்சி |
| | 22 | அனைவ்ரதத் | அனவரத |
| 77 | 15 | இருதய | ஹிருதய |
| | | குறையால் | குஹையில் |
| 78 | 17 | வரத | வ்ரத |
| 79 | 21 | வபல | ஸபல |
| | 25 | வேறொன்றாய் | வேறொன்றாமல் |
| 80 | 1 | பழிக்க | அழிக்க |
| | 10 | ஸ்ராத்த | ஸார்த்த |
| | 15 | சரி | சலி |
| 81 | 3 | குறைகள் | குறைகளை |
| | 3 | ஸ்மர்த்தி | ஸமர்த்தி |
| | 16 | பிருகிறுதி | ப்ரகிருதி |
| | 23 | வித்யார்த்த | வித்யார்த்தி |
| | 25 | ஸாகார | ஸாக்ஷாத்கார |
| 82 | 8 | விபத்கார | விபத்கர |
| | 12 | மானது | மானால், |
| | 24 | ஞானோ | மனோ |
| 83 | 16 | இச்சிப்புஹ | ஸ |
| | 25 | உதாவின | உதாவீன |
| 84 | 2 | ப்ரம | பரம |
| | 6 | வஸூய | வஸ் |
| | 13 | குரூர | குரூபன் |
| | 21 | உத்தரத்வ | உத்தத்ருவ |
| 85 | 6 | ஸுரி | ஸூரி |
| | 10 | அறிய | அரிய |
| | 16 | ஞானிக்க | ஞானி |
| 86 | 19 | தர்வி | தளிர் |
| | 24 | வுரிய | உரிய |
| 87 | 8 | கின்றன | கின்றது |
| 88 | 15 | ஐதிஷ்யம் | ஐதிஹ்யம் |
| | 27 | அவஸுய | அவசிய |
| 89 | 17 | உடையவும் | உடைய |
| 90 | 3 | ஸாக்ஷத்திய | ஸாந்நித்திய |
| | 10 | மெனும் | மேனும் |
| | 11 | ஸுரி | ஸூரி |
| | 11 | கேஜஸ் | தேஜஸ் |
| 91 | 6 | ப்ரஹரி | ப்ரஸரி |



இவைகள் அநேக இடங்களில் வருவதால் ஒரு தடவை மட்டும் வரையப்பட்டன.

| பிழை. | திருத்தம். |
|---|---|
| விர்த்தி | விருத்தி |
| முயற்ச்சி | முயற்சி |
| சீக்கிறம் | சீக்கிரம் |
| மனோசக்தி | மனச்சக்தி |
| மனோதத்வம் | மனத்தத்வம் |
| வெளிப்பிரகாரம் | வெளிப்பிராகாரம் |
| ஜாக்கிறதை | ஜாக்ரதை |
| பூறா | பூரா |
| துடர் | தொடர் |
| தவரு | தவறு |
| வேரு | வேறு |
| பெரும்படி | பெறும்படி |
| முரை | முறை |
| ஈஸ்வர | ஈசுவர |
| ஆஸ்ரம | ஆசிரம |

18061

இந்த புஸ்தகம் கிடைக்குமிடங்கள்.

மதுரை பிர்மஞான சபை.

அடையார் பிர்மஞான புஸ்தகசாலை.

மதுரை ஸ்ரீராமகிருஷ்ண அச்சுக்கூடம்.

# தியானக்கிரம விஷயம்.

## ஜனவரி மாதம்.

### மார்க்கம்.

1வ சாந்தியை அடைவதற்கு வழிகாட்டும் மார்க்கத்தில் அடிவைப்பதற்கு முன் அனுசரிக்கவேண்டியது யாதெனில், நம்முடைய பிரக்ஞையை யதார்த்த ஆத்மாவினிடத்தில் ஒப்பிட்டு அது பார்ப்பதுபோல் பார்க்கவும், நிதானிப்பதுபோல் நிதானிக்கவும் முயற்சி செய்வதுதான்.

சாந்தி யடையுமிடம்.

2வ மனிதன் அனேக ஜன்மங்களுக்குப் பிறகு ஓர் குறிப்பிட்ட லக்ஷியத்தை அடைந்ததும், அனேக ஜன்மங்களுக்கப்பால், சன்மார்க்கம் என்று சொல்லப்படும் வழியில் பிரவேசிக்கும்படியான ஸ்திதிக்கு வந்ததும், குருவானவர் முன்வந்து, அந்த மனிதன் கையைப் பிடித்துக்கொண்டு சிஷ்ய மார்க்கத்தில் நடத்தி, ஆத்மாவை அறிவதற்கு வேண்டிய முடிவான போதனைகளைக் கற்பிக்கின்றார்.

ஆத்மாவும் அதன் கோசங்களும்.

3வ தீக்ஷை என்று சொல்லப்படும் நிலைமைக்கு நடத்தி, அத்தீக்ஷை மூலமாக மனிதனின் பூரணத்தன்மைக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் மார்க்கம் ஒன்றுளது.

தீக்ஷா மார்க்கம்.

4வ சன்மார்க்கத்திற்கு வழியானது மனிதனுடைய வாழ்க்கையிலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. ஜீவன் வளர்ச்சியடைந்து பரிபாகமடைய அவசியமான எதுவும் அம்மார்க்கத்திற்செல்ல ஓர் படியாக உபயோகப் படுத்தப்படாமல் அவ்வாழ்க்கையில் இருக்கமாட்டாது.

தீக்ஷாமார்க்கம்.

5வ எதன்றியில் மார்க்கத்தை அடைவது சாத்தியமில்லையோ எல்லாவற்றிலும் அந்த முதல் படியானது "பனித

ஸேவை'' என்ற வார்த்தையில் அடங்கியிருக்கின்றது.

தீக்ஷா மார்க்கம்.

6வ. அந்த மார்க்கமானது வெளிப்பார்வைக்கு ஓர் துறவு மார்க்கம்போல் காணப்பட்டாலும், உண்மையில் அது முன்னிலுமதிகமான ஆனந்தம், சாந்தி, சுகம் இவைகளையுடைய துறவு மார்க்கமாகவே விளங்குகின்றது; ஏனெனில் சாதாரணமாய் நினைக்கிறபடி அது சுகத்தைத் துறந்து துக்கத்தை ஏற்றுக்கொள்வதன்று; ஆனால் நித்தியானந்தத்தை நாடி அற்ப சுகத்தை விலக்கிக்கொள்வதே யாகும்.

வெளிப்பிரகாரம்.

7வ. ஆத்மாவானது சன்மார்க்கத்தில் மேலே செல்லச் செல்ல சந்தோஷம் வரவர அதிகப்படுகின்றது; ஏனெனில் நாம் முதலில் விசனத்திற்கு அக்ஞானம் காரணமாக ஏற்பட்டிருந்ததாகக்கண்டோம். மிகக்கொடிய துன்பமானது நாம் அறிவை அடைவதற்கு முன் அடிக்கடி உண்டாவது உண்மையே. ஆயினும் அது அஞ்ஞானத்தினாலும் அறிவின்மையினாலுமே உண்டாகின்றது.

112
170 L7

வெளிப்பிரகாரம்.

8வ. அக்ஞானத்தில் மூழ்கியிருக்கும் உலகத்தையும் அதன் சுருள்களுக்குள் அவஸ்தைப்படும் மனிதர்களையும் பார்க்கையில், மனிதவர்க்கத்தை உஜ்ஜீவிக்கும்படி செய்யக்கூடிய மனிதர்களின் ஹிருதயங்கள் உலகத்தின் துன்பங்களை உணர்ந்து அதனால் அவற்றை ஒழிக்கும் மார்க்கத்தைத் தேடி உழைக்கும்படி அவர்கள் தூண்டப்படுகிறார்கள்.

வெளிப்பிரகாரம்.

9வ. கண்கள் திறக்கப்பட்டவுடன், அவைகள் மூடியிருந்த பொழுது காணப்பட்டதைப் பார்க்கிலும், நாம் செய்யவேண்டிய வேலையின் மஹிமை நமக்கு அதிகமாய் விளங்குமென்பதை ஞாபகத்தில் வையுங்கள். மார்க்கத்திற் பிரவேசிக்க ஆரம்பித்தவனுக்கு அம்மார்க்கவாயிலின் வெளிப்



பக்கத்திலிருக்கிறவர்களின் மங்கலான கண்களுக்குத் தோன்றுவதைப் பார்க்கிலும், மார்க்கம் மிகவும் உன்னதமாயும் அதிக தூரமுள்ளதாயும் தெரியும்.

வெளிப்பிரகாரம்.

10வ. மனிதர் தாங்களாகவே துன்பப்படுகிறார்கள். அவர்கள் பந்தப்பட்டவர்களல்ல; அதை அறிந்துகொள்ளுவதால் உலகம் பூராவும் அவர்களுடைய திருஷ்டியில் மாறுதலையடையும். மார்க்கத்திலுள்ள எல்லாக் கஷ்டங்களின் நிலைமையும் மாறிவிடும்.

வெளிப்பிரகாரம்.

11வ. மார்க்கத்தின் வெளிவாசலைக் கடந்து உட்சென்றவன் அடையும் அதிகமான லாபங்களில் ஒன்று, இனி ஜனன மரணங்களின் அதிகாரத்தினின்றும் விடுபட்ட சிதறாத ஓர் பிரக்ஞையை அடைந்திருத்தலேயாம்.

வெளிப்பிரகாரம்.

12வ. எல்லா ஜனங்களும் உணரும் மிகக்கொடிய விசனங்களில் இரண்டு, பிரிதல், மரணமடைதல் இவைகளினால் உண்டாகின்றவைகள். ஆனால் மார்க்கத்தின் வாயிலைக்கடந்து உள்ளே சென்றவனுக்கு பிரிதலும் மரணமும் அவன் வெளியுலகத்தில் இருந்தகாலையில் இருந்தாற்போலில்லை.

வெளிப்பிரகாரம்.

13வ. மார்க்கத்தின் வாயிலைக்கடந்து உட்சென்றவர்களுக்கு, அவர்கள் பின்னால் விட்டுவந்த உலகத்தைத் திரும்பி கடைக் கண்ணாலேனும் பார்க்கும்படி செய்யவல்ல இன்பம் அல்லது நம்பிக்கையூட்டுதல் ஏதேனும் அவ்வுலகில் அவர்களுக்குண்டோ?

வெளிப்பிரகாரம்.

14வ. ஏனெனில், நம்முன்பாக நோக்கி யிருக்கும் இச் சன்மார்க்கத்தில் உண்டாகும் துன்பங்கள் உலக இன்பங்களைவிட அதிக மேன்மையுள்ளவையாயும், துக்கங்கள் உலக

வாழ்வில் கிடைக்கக்கூடிய சுகாநுபவங்களைப் பார்க்கிலும் அதிக மஹிமையுள்ளவையாயும் இருக்கின்றன.

வெளிப்பிரகாரம்:

15வ. ஒரு மனிதன் பரம்பொருளிடம் பக்தி செலுத்துகையில், தௌராத்மியமெனும் மாயையைவிட்டு தன்முகத்தைத் திருப்பிக்கொண்டு அப்பரம்பொருளின் சன்னிதானத்தை நோக்கித் தன் திருஷ்டியைச் செலுத்துகிறான். அவன் இன்னமும் தடுமாறி வழியைவிட்டு விலகி அபஜய மடையலாம். ஆயினும் அவன் முகமானது சரியானவழியில் திரும்பிவிட்டது. அவன் வந்த மார்க்கத்தை (வீட்டை) அநுசரித்துச் செல்கிறான். அவனுடைய பக்தியின் வலிமையினால் அவன் நற்செய்கை யுடையோனாகியே தீருவன்.

யக்தியின் மஹிமை.

16வ. நம்முடைய சொந்த சுபாவத்தைத் தெரிந்துகொள்ளப் பிரயத்தனப் படவேண்டும். அதை அறிந்துகொண்டால், ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு நம்மை நடத்தும் மார்க்கத்தை நாம் பார்க்கலாம்.

உபநிஷத்துக்களின் ஞானம்.

17வ. என் சகோதரன் கெட்டவழியை அநுசரிப்பதினாலே அவனை அருவருத்து நிந்திக்கவேண்டும் என்று நான் சொல்லுகையில், அவன் உள் நிலைமையைப் பார்க்காமல் வெளி நிலைமையையே பார்க்கின்றேனல்லவா? எது கெட்ட வழியென்று எனக்குத் தோன்றுகிறதோ அவ்வழியானது அவனுக்கு வேண்டிய அநுபவத்தை யடையத் தேவையான மார்க்கமென்று அவன் ஆத்மாவுக்குத் தெரிந்திருக்கும், அந்த அநுபவ மடையும்வரை அவன் பந்தப்பட்டவன், முயற்சி யடைந்தவனன்று.

உபநிஷத்துக்களின் ஞானம்.

18வ. ஆத்மா உன்னிடம் பேசினால் (நீ உன் உள்ளுணர்வால் விஷயத்தை உணர்ந்தால்) அதை உன் அறிவு ஒப்



புக்கொள்ள வேண்டுமென்று காத்திராதே. அந்த ஈசுவர தல்யமான வாக்கை நம்பு; அத்தெய்வீகத் தூண்டுதலுக்குக் கீழ்ப்படி; ரிஷிகளாலும், தீர்க்கதரிசிகளாலும், ஆசார்யர்களாலும் அநுசரிக்கப்பட்டதும், இக்காலத்திலும் சிஷ்யர்களால் அநுஷ்டிக்கப்பட்டு சரியான இலக்ஷியத்தை அடையும்படி செய்யத் தகுந்ததென்று கண்டு ருஜுப்படுத்தப் பட்டிருப்பதுமான மார்க்கத்தை அநுசரித்து நட.

ஆத்மா நிஜம் என்பதைத் தெரியப்படுத்தும் ருஜுக்கள்.

19வ. நாம் தாமதமாயாவது சீக்கிரமாகவாவது மேலே செல்லலாம்; எல்லாருக்கும் போதுமான கால மிருக்கிறது. மிகச் சோம்பேறிக்குங்கூட போதிய சாவகாச மிருக்கிறது. ஒவ்வொருவனுடைய ஹிருதயத்திலும் ஈசுவரன் வசிப்பதால் ஒவ்வொருவனிடமும் போதுமான சக்தி யிருக்கிறது. நம்முடைய கடைசி முடிவை ஒன்றும் மாற்றமுடியாது; ஒவ்வொருவ னிடமுமுள்ள ஈசுவர சங்கற்பமாகிற இச்சை முடிவில் சித்திபெறுவதை யெதுவும் தடுக்கமுடியாது.

ஜீவர்களின் ஏணி.

20வ. குப்த மார்க்கத்தில் பிரவேசித்தவன், சிலர் செய்வதுபோல், ஈசுவரசங்கற்பத்திற்கு இணங்கி நடக்கும் மார்க்கத்திற்கும், அதற் கெதிரிடையாகச் செல்லும் மார்க்கத்திற்கும் மத்தியில் சஞ்சலப் பட்டுக்கொண் டிருக்கமுடியாது. மார்க்கத்தில் செல்வதற்கு அவன் அடைந்திருக்கும் அபிவிருத்திக் கிரமத்தில் அதை வெகு தூரத்திலேயே விட்டுவிட்டான்.

தீக்ஷாமார்க்கம்.

21வ. மேன்மார்க்கத்தைப் பார்த்தபின் கீழ்வழியிற் செல்ல வேண்டுமென்ற எண்ணம் உதிக்காது. அவன் பிசகமாட்டானென்று நான் சொல்லவில்லை; அவன் நிதானிப்பதில் தவற மாட்டானென்று சொல்லவில்லை; ஆனால் அவன்

எங்கே யதார்த்தத்தைப் பார்க்கிறானோ அதை நிச்சயமாய்ப் பின்பற்றிச் சென்றே தீருவான் என்பதே என் அபிப்பிராயம்.

தீக்ஷா மார்க்கம்.

22௨ சன்மார்க்கத்தை அனுசரிப்பது; ஜீவன் முக்தர்களான குருநாதர்கள் அம்மார்க்கத்தைக் கடந்திருக்கிறார்களென்றும், நீயும் நானும் அவ்விதமே செய்யலாமென்றும் தெரிந்துகொள்வது; அதாவது மனிதன் ஈசுவரனாய் மாறும் ஸ்தானமாகிய மானிட வர்க்கத்தின் அந்த யதார்த்தமான உன்னத பதவியை அடைவது. உன்னுடைய யதார்த்த நிலைமை எவ்விதம் ஆகக்கூடும் என்று தெரிந்துகொள்வது; உலகத்தில் ஜன்மமெடுத்ததின் கருத்தை இவ்விதமாய் நிறைவேற்றுவதுதான்.

குருநாதர்களும் அவர்களை யடையு மார்க்கமும்.

23௨ சன்மார்க்கத்தில் நடப்பதற்கும் ஞானதீக்ஷை யடைவதற்கும் தேவையான குணங்கள் யாவை? எல்லாவற்றிற்கும் முதலாக, நித்திய அநித்தியம் இன்னவை என்றும், யதார்த்தம் மித்தை இன்னவை யென்றும், ஆத்மார்த்தம் உலக சம்பந்தமானவை இன்னவை யென்றும், உன்னைச் சுற்றியிருப்பவைகளிடமும் உன்னிடமும், வாழ்க்கையில் நேரிடும் சந்தர்ப்பங்களிலும், நீ தெரிந்தெடுக்கும் ஒவ்வொன்றிலும், உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ளும் சக்தியை விருத்தி செய்வதுதான்.

குருநாதர்களும் அவர்களை யடையு மார்க்கமும்.

24௨ அந்தந்தக் காலத்தில் உள்ள மனித வர்க்கத்தில் சிஷ்யர்களை குருமார்கள் தேடுகையில், அன்பு நிறைந்த ஹிருதயத்தையே அவர்கள் கவனிக்கிறார்கள். மனித வர்க்கத்தின் சுயநலம் காட்டும் தன்மையான அந்தகாரத்திலும் அதன் போராட்டம் நிறையும் அஞ்ஞான இருளிலும் அந்த அன்புநிறைந்த ஹிருதயமே இருட்டில் பிரகாசிக்கும் தீபம் போல் ஒளி வீசுகின்றது. குருதேவன் அதைப்பார்த்து,



இனி சிஷ்யனாக வரப்போகிறவன் அதோ இருக்கிறானென்று தெரிந்துகொள்கிறார் ........ சன்மார்க்க முறையை அனுஷ்டிப்பதற்கு இந்த அன்பைத்தவிர வேறுவழியில்லை.

குருநாதர்களும் அவர்களை யடையு மார்க்கமும்.

25௨ சன்மார்க்க முறையில் பிரவேசிக்க முயல்பவனின் லக்ஷணம் யாதெனக் கூறுகின்றேன். சுயநலமற்று பிறர்க்குக் கைங்கரியம் செய்வதில் தீவிரமான ஆவலுள்ளவனாயிருப்பான். மற்றவர்களுடைய நன்மைக்காக தன்னுடைய எல்லா உடைமையையும் தியாகம் செய்வதில் சித்தனாயிருப்பான். உலகத்தார் அதிகமாய் மதிக்கும் எல்லாவற்றையும் தனக்கு நியாயமென்று தோன்றும் காரியத்தின் நிமித்தம் அர்ப்பணம் செய்யத் தயாரா யிருப்பான்.

குருநாதர்களும் அவர்களை யடையும் மார்க்கமும்.

26௨ இச்சன்மார்க்கத்தில் முதலில் அதன் லக்ஷியம் அல்லது எல்லையாவது என்னவெனில், முழு பிரக்ஞையுடனே ஈசுவரனுடன் கலத்தலேயாம். ஈசுவரனை ஸ்துதி பண்ணுதல் அல்லது ஈசுவரனுடன் கலக்க வேண்டுமென்ற ஆவலுறுதல்மட்டும் போதாது. ஞானியானவன் ஓரோர் சமயம் மெய்ம்மறந்து இருக்கின்ற நிலைமைமாத்திரம் போதாது. ஆனால் பரமாத்ம ஸாக்ஷாத்காரம் என்ற அகண்டாகாரத் தியான உயர்ந்த அனுபவம் வரும்வரை படிப்படியாய்த் தன் பிரக்ஞையானது மென்மேலும் அகன்று விரிந்துவர வேண்டியது.

குருநாதர்களும் அவர்களை யடையும் மார்க்கமும்.

27௨ ஜீவன் முக்தரான குருநாதன் தெய்வத்தன்மை படைத்த மனிதரே. ஓர் மூத்த சகோதரர் போன்றவர். மற்ற மனிதரைப்போல் அவரும் மனிதரேயாயினும் அவர் விகாசமுறையில் அடைந்திருக்கும் உன்னத பதவியினால் மூத்தவராவர். சன்மார்க்கத்தில் அவர் வெகுதூரம் நடை பெற்றவர். அனேக ஞானதீக்ஷைகள் பெற்றதினால் அவரு

டைய பிரக்ஞையானது அகன்றுளது. அதன் வரம்பில்
இப்பூலோகம் மாத்திரமல்லாமல் ஆத்மா இயங்கும் எல்லா
லோகங்களும் அடங்கியுள்ளன.

குருநாதர்களும் அவர்களை யடையுமார்க்கமும்.

28உ உனக்குள்ளே ஈசுவர அம்சமாகிற மொட்டு
இருந்திராவிடில், நீ ஈசுவரனுகை ஆகும் புஷ்பமாக ஒரு பொ
ழுதும் பிரக்ஞை பூர்வமாக மலர முடியாது; ஆனல் ஒவ்
வொருவனுடைய ஹிருதயத்திலும் ஈசுவரன் வசிப்பதால்
அத்தகைய ஜீவப்ரம்ம ஐக்கியம் சாத்தியமாகிறது. சன்மார்க்
கத்திற் செல்லவேண்டியதின் நோக்கமும், அச்சன்மார்க்கத்
தின் முடிவும் ஈசுவரனுடன் பூரணப் பிரக்ஞையுடன் கலப்
பதுதான்.

குருநாதர்களும் அவர்களை யடையுமார்க்கமும்.

29உ எவன், உலகத்தாரால் அதிகமாய் மதிக்கப்படும்
எல்லா வஸ்துக்களையும், தன் ஹிருதயத்தை ஆகர்ஷித்து
அதிற் குடிகொண்டுள்ள உயர்லக்ஷியத்திற்காகப் புரியும் ஸே
வையுடன் ஒப்பிட்டுப்பார்க்க, அவைகள் பிரயோஜனமற்ற
வைகளென்று கருதுகிருனே, அவன்தான் சன்மார்க்கத்தில்
பிரவேசித்துக்கொண்டிருக்கிற மனிதன் என்று குறிப்பிடத்
தகும்.

குருநாதர்களும் அவர்களையடையு மார்க்கமும்.

30உ நாவை அடக்குவது, சன்மார்க்கத்தை அனு
சரிக்கப் பிரயத்தனப் படுகிறவனுக்கு மிகவும் முக்கியமா
னது; ஏனெனில் கொடூரமான அல்லது பக்ஷமற்ற வார்த்
தையும், அவசரமுள்ள அல்லது பொறுமையற்ற சொற்க
ளும் கைங்கரியத்திற்காக அர்ப்பணம் செய்யப்பட்ட நாவி
னின்றும் வெளிவரல் கூடாது. பகையாளிக்குங்கூட துன்ப
முண்டுபண்ணக்கூடாது; ஏனெனில் அன்பு மயமாய் விளங்
கும் இராஜ்யத்தில் மனம் நோகும் வார்த்தைகள் நடைபெற
இடமில்லை.

குருநாதர்களும் அவர்களை யடையுமார்க்கமும்.



31உ சன்மார்க்கத்தில் எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்
வொருபடியும் முடிவாக எடுத்துக்கொள்ளப்பட்ட படியா
கும். அம்மார்க்கத்தில் அனுபவிக்கப்படும் ஒவ்வொரு துன்
பமும், அதை உணர்ந்தறியும் பக்ஷத்தில், அதனுலுண்டா
கும் பாடத்தினிமித்தம் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளப்
படுகிறது. நாம் சன்மார்க்கத்தில் செல்லுகையில் அக்ஞான
இருள் வர வர நீங்கி ஞானப்பிரகாசம் அதிகமாகின்றது.
துர்ப்பலம் மறைந்து சாந்தி வளருகின்றது. இவ்வுலகின்
சலன சக்திகள் சஞ்சலப்படுத்தவும் அசைக்கவும் சக்தியை
இழக்க இழக்க, அதிக தெளிவு உண்டாகின்றது.

வெளிப் பிரகாரம்.

---

## பிப்ரவரி மாதம்.

## கைங்கரியம்.

1உ. சிலருடைய நன்மையை மட்டும் உத்தேசித்துச்
செய்யாமல், எல்லோருடைய நன்மையையும் உத்தேசித்து
எதைச்செய்கிருயோ, ஈசுவரபாவத்தில் வாழ்ந்துகொண்டு ஈசு
வர கைங்கரியமாக எதைச் செய்கிருயோ, அந்தக்காரியம்
மட்டுந்தான் உன்னை பந்தப்படுத்தாது. ஏனெனில், அது
தியாக ரூபமான காரியம். அதற்கு பந்தப்படுத்தும் சக்தி
யில்லை. அவ்விதமான செய்கையைத்தான் நாம் கைங்கரியம்
என்று சொல்கிறோம்.

பிரம்மஞானியின் கடமைகள்.

2உ கைங்கரியம் (ஸேவை) என்பது மற்றொருவ
ருக்கு அன்பின் நிமித்தம் செய்யப்படுவதுதான். பிரதி
பலனை யுத்தேசித்துச்செய்வது யதார்த்த கைங்கரியம் அல்ல.

பிரம்மஞானியின் கடமைகள்.

3வ நீ பாரமார்த்திக வாழ்வை அநுஸரிப்பாயாகில் நீ
மேலே நோக்குவதுபோல் கீழேயும் நோக்கவேண்டும். ஞானி
யுடன் உன் ஒற்றுமை பாவனையை யுணர்வதுபோல் பாவியி
னிடமும் உணரவேண்டும். ஏனெனில், ஒவ்வொருவரு
டைய ஹிருதயத்திலும் ஒரே மாதிரியாக இருக்கும் ஆத்மா
தான் உன்னை தெய்வத்தன்மையாக்கும் ஒரே வஸ்து. ஆத்
மாவின் தெய்வத்தன்மையில் வித்தியாஸம் கிடையாது.
விகாஸ முறையில் ஏற்படும் படிக்கிரமத்தில்தான் வித்தியாச
முளது.

லண்டன் நகரத்தில் கொடுத்த உபந்யாஸங்கள்.

4வ நாம் சந்திக்கும் எல்லோருக்கும் ஒவ்வொருவ
ருக்கும் நாம் செலுத்தவேண்டிய கடமை ஏற்பட்டிருக்கி
றது. நமது உலக வாழ்வில் நம்மிடம் வரும் மனிதர்களில்
ஒருவருக்காவது நாம் செலுத்தவேண்டிய கடமை ஏற்பட்டி
ராமலிராது. உலகமானது தற்செயலாய் ஆளப்படுவதில்லை.
மனிதர்களின் வாழ்வில் தற்செயலான சம்பவங்கள் நேரிடு
வது கிடையாது.

உயர்வாழ்வின் தர்மம்.

5வ நாம் ஒருவர்க்கொருவர் உதவிசெய்யவும், ஒரு
வரையொருவர் நேசிக்கவும், ஒருவரையொருவர் உயர்த்தவு
மன்னியில் வேறு எதற்காக நாம் இவிடம் இருக்கிறோம்?

உயர்வாழ்வின் தர்மம்.

6வ உன் வாழ்வானது மற்றவர்களுடைய வாழ்வை
எவ்விதம் மாற்றுகிறதென்று கவனி. உன்னுடைய வார்
த்தை மற்றவர்களுடைய வாழ்வை எவ்விதம் மாற்றும் என்ற
விஷயத்தில் கவனமாயிரு. உன்னுடைய நாக்கு மிருதுவா
னதாகவும் உன் வார்த்தைகள் அன்பு மிகுந்ததாகவும் இருக்
கவேண்டும். பாரமார்த்திக வாழ்விற்குக் கருவியாய் ஏற்பட
இச்சிக்கும் மனிதர்களுடைய பேச்சு, கோட் சொல்லுதல்,
வம்புப்பேச்சு, கடினமானபேச்சு, பக்ஷமற்ற கருத்து இருக்



கிறதென்ற சந்தேகம், இவைகளால் அசுத்தப்படாமலிருத்
தல்வேண்டும்.

உயர்வாழ்வின் தர்மம்.

7வ உன்னுடைய வருத்தத்தை நீ உணருவதுபோல்
மற்றவர்களுடைய விசனத்தையும் நீ உணரவேண்டும். உன்
னுடைய ஹிருதயம் வருத்தப்படுவதை நீ உணருவதுபோல்
மற்றவர்களுடைய துன்பத்தையும் நீ உணரவேண்டும்.

தீக்ஷாமார்க்கம்.

8வ கைங்கரியத்தில் ஆவலும், மற்றவர்களை சந்தோ
ஷப்படுத்துவதற்காகத் தன்னிடமுள்ள ஸகலத்தையும் கொ
டுத்துவிடப் பிரியமும் எங்கு காணப்படுகின்றனவோ, என்ன
உதவிசெய்யக் கூடுமென்றும் யாருக்குத் தாங்கள் ஸேவை
செய்யக் கூடுமென்றும் ஸதா நினைத்துக்கொண்டிருக்கும்
மனிதர்களும் எங்கு காணப்படுகிறார்களோ அங்கெல்லாம்
அந்தராத்மாவானது வியக்தமடைந்திருப்பதாக நீ அறிந்து
கொள். இவ்விதமாய் வெளிப்படுவதே அந்தராத்மாவின் சுபா
வம். மனிதர்களுக்கு ஸேவை புரிவதுதான் அதன் யக்ஞம்.

தீக்ஷாமார்க்கம்.

9வ ஸேவைக்காக உன்னையே முற்றிலும் தியாகம்
செய்துகொள்; ஒன்றையும் உனக்கென்று வைத்துக்கொள்
ளாதே. எங்கெங்கே கூடுமோ அங்கெல்லாம் உதவிசெய்;
வேலைசெய்ய சந்தர்ப்பம் நேரிடுகையில் வேலைசெய். உயர்ந்த
லக்ஷியத்திற்கு உன்னை அர்ப்பணம் செய்து விடு.

தீக்ஷாமார்க்கம்.

10வ ஸர்வத்தையும் கொடுப்பதும் பிரதிப் பிரயோ
ஜனத்தை எதிர் பாராததுமான அந்த சுயநலமற்ற ஸேவை
தான் அவசியம் வேண்டற்பாலது என்று அறிந்துகொள்.

தீக்ஷாமார்க்கம்.

11வ வருத்தப்படுகிறவனிடம்போய் நீ அவன் வருத்
தத்தை நிவர்த்திசெய்; ஆனால் அவன் வருத்தத்தை நிவர்த்

திசெய்தல் என்னும் விஷயமானது உன் ஹிருதயத்தை உருக்கி, அவ்வருத்தத்தின் காரணத்தை நீ விலக்குகிறவரையில் அது உன்னிடம் இடைவிடா விசாரமாக் இருக்கட்டும். இதுவே வேற்றுமை பாவத்தை நீக்குவதில் முதல்படியாகும். உலகத்தின் ஸ[illegible]கதுக்கங்களுடன் உன்னை ஒருமைப்படுத்திக்கொள். ஒவ்வொருவருடைய துக்கமும் உன்னுடைய துக்கமாகவும், ஒவ்வெருவருடைய கஷ்டமும் உன்னுடைய கஷ்டமாகவும், ஒவ்வொருவருடைய ஸந்தோஷமும் உன்னுடைய ஸந்தோஷமாகவும் ஆகட்டும்.

குருநாதர்கள்.

12வ. நீ ஓர் இயக்கம் அல்லது சங்கத்தில் பிரவேசிப்பதற்குமுன், "அது அபிவிருத்தி நோக்கத்தோடு கூடிய நிர்மாண காரியங்களைச் செய்யக்கூடியதா?" என்று உன்னைக் கேட்டுக்கொள். அது அப்படிப்பட்டதல்லவாயின் அதில் பிரவேசியாதே. அதின் நோக்கம் அன்புதானா? அதின் நோக்கம் பகை என்று நீ கண்டால் அதை விட்டு நீ விலகிக்கொள். அது ஸகோதர பாவத்திலும், உயர்வு தாழ்வு என்ற வித்தியாச வுணர்ச்சியைக் குறைப்பதிலும், உத்தரவாத உணர்ச்சியை அதிகப்படுத்துவதிலும் நோக்கமுள்ளதாயிருக்கின்றதா? அந்த இயக்கம் அவ்விதம் உள்ளதானால் அதற்காக வேலைசெய். இல்லாவிடில், அதை விட்டு விடு.

காலமும் வேலையும்.

13வ. விகாஸமுறையில் நமக்குக் கீழ்ப்படியிலிருக்கும் தாழ்ந்த வகுப்பிலுள்ள ஜீவராசிகளைப் பழக்குவதற்காகவும், நடத்துவதற்காகவும், அவைகளுக்கு உதவிசெய்வதற்காகவும் நாம் இவ்விடத்திலிருக்கிறோம். குரூரத்தினாலும் கொடுமையினாலும், எவ்வித இரக்கமற்ற தன்மையினாலும் அவைகளுக்கு நாம் தீங்கிழைத்தால், அவைகளுக்குள்ளிருக்கும் ஈசுவரனுக்கே பாபம் செய்தவர்களாவோம்.

சிஷ்ய மார்க்கம்.



14வ. நம்மால் கூடியவரையில் அதிக விவேகத்துடன் வேலை செய்வோமாகில், மனித ஸேவையில் நம்முடைய உன்னதமான எண்ணம், உயர்ந்த முயற்சி இவைகளை அன்பின் நிமித்தம் செலுத்துவோமாகில், அப்பொழுது அதனுடைய முடிவைப்பற்றி நாம் இச்சிக்கிறதில்லை. நம்முடைய அறிவீனத்தாலும் துர்ப்பலத்தாலும் பாதிக்கப்படாமல் உயர்ந்த ஆத்மார்த்த சக்திகள் தடையின்றி வேலைசெய்யக்கூடிய அவகாசத்தை குருநாதர்களுக்கே விட்டு விடுகிறோம்.

பக்தியும் பாரமார்த்திக வாழ்வும்.

15வ. எந்த நிமிஷத்திலாவது நம் முன்பாகத்தோன்றும் மனிதன் யாரோ, அவனுக்கு அந்த வேளையில் நாம் ஸேவை செய்வதற்காககுருநாதனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. அஜாக்கிரதையினாலாவது, அவசரத்தினாலாவது, அலக்ஷியத்தினாலாவது, நாம் அவனுக்குதவி செய்யத்தவறினால் நாம் குருநாதன் கைங்கரியத்தில் தவறிவிட்டவர்களாவோம்.

ஹிருதயத்தின் உபதேச முகவுரை.

16வ. ஒருமனிதன் கைங்கரியத்தினால் போதுமானபடி சிறப்பை அடைகையில் அவன் தன் குருநாதனைக்கண்டு கொள்கிறான்—குருநாதனே இவனைக் கண்டுபிடித்ததாகச் சொல்லலாம். இவ்விதம் அவன் தன் மார்க்கத்தில் போராடிக்கொண்டிருந்த காலங்களிலெல்லாம் குருநாதனின் கிருபாகடாக்ஷம் பொருந்திய கண்கள் இவன் அபிவிருத்தியை கவனித்து வந்திருக்கின்றன. எந்த அநுக்ரஹமானது இந்த ஜன்மத்தில் இவனுக்கு பிரபலமாக ஏற்படப்போகிறதோ அதே அநுக்ரஹமானது முன் பல ஜன்மங்களிலும் இவனுக்கு லபித்திருந்தது.

தீக்ஷாமார்க்கம்.

17வ. ஒரு புருஷன் அல்லது ஸ்திரீ மற்றவர்களுக்கு ஏதாவது ஒருவித கைங்கரியம் செய்வதாக ஸங்கல்பித்துக் கொண்டாலொழிய நம் சங்கத்தைப்போன்ற ஒன்றில் பூரண

மான அஸ்தத்தினாக உண்மையில் ஆகமுடியாது. ஆத்மாவின் ஸ்வபாவம் ஸதா கொடுப்பதாகவே யிருக்கிறது. உன்னிடம் வரும் ஆத்மசக்தியை நானுபக்கத்திலும் நீ அனுப்பினாலன்றி மேலேயிருந்து ஆத்மசக்தி உனக்கு வருமென்று நீ எதிர்பார்க்க முடியாது.

(ஒரு சங்கக்கட்டடத்தின் பிரதிஷ்டை உபந்யாஸம்)
15-10-1919.

18உ உயர் நிலையை விரும்பும் ஒவ்வொருவனுடைய நோக்கமும் மற்றவர்களுக்குக் கைங்கர்யம் செய்யத் தன்னைப் பழக்கிக்கொள்வதும், குருநாதன் அவனுடைய ஹிருதயத்தில் யாதொரு தோஷத்தையும் பாராதபடி தன்னைத்தானே கடுமையாக அப்யஸித்துக்கொள்வதும்தான். அப்பொழுது குருவானவர் அவன் கையைப்பிடித்துக்கொண்டு அவனை மேல் நடத்துகிறார்.

ஹிருதயத்தின் உபதேச முகவுரை.

19உ ஸஹோதரபாவமான அன்பு, பயபக்தி, இரக்கம், இவைகளின் முடிவற்றக் கோர்வைகளுடன் உயர்-நிலை நானுபக்கங்களிலும் பரவுகின்றது. நமக்கு மேலான ஸ்திதியிலுள்ளவர்களை (குருநாதர்களை) நோக்கி, ஆத்மசக்தியை நம்முடைய கைகளில் ஊற்றும்படி நம்முடைய வெறுங் கைகளை நீட்டும்பொழுது நம்முடைய இளைய ஸஹோதரர்களை ஆசிர்வதித்து நாம் நம்முடைய கையிலுள்ளவைகளை விடுவதற்குத்தக்கபடிதான் நம்முடைய வர்க்கத்தின் மூத்த ஸஹோதரர்களால் மறுபடியும் நம்முடைய கைகளில் ஆத்மசக்தியானது நிரப்பப்படுமென்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

லண்டன் நகரத்தில் நடந்த 1921-ம் வருஷத்திய கன்வென்ஷன் முடிவுரை.

20உ வேலையின் மஹிமையையும் வேலை செய்பவர்களின் கஷ்டத்தையும் கண்டறிந்து கொள்வதும், நமக்கு



மேலேயுள்ள குருநாதர்களுக்கும் நமக்குமுள்ள பாந்தவ்யத்தையும் அப்படியே கிரமமுறையில் நமக்குக் கீழேயுள்ளவர்களுக்கும் நமக்குமுள்ள உறவையும் உணர்ந்துகொள்வதுந்தான் நாம் வேலைசெய்வதற்குப் பெரும் ஸாதனமாகிறது.

லண்டன் நகரத்தில் நடந்த 1921-ம் வருஷத்திய கன்வென்ஷன் முடிவுரை.

21உ மனிதன் குருநாதரைக் காணவேண்டுமென்ற ஆவலுடன் தேடியிருந்தும், தன் சக்திக்குத்தக்கவாறு தன் வேலையை அவருக்கு ஸமர்ப்பித்திருந்தும், அவருக்கு அதிகத் திறமையுடன் வேலைசெய்யும்பொருட்டு அவரைக் காணவேண்டுமென்ற ஆவலுடன் வேலைசெய்திருந்தும், மனஸ் நிர்மலத்துடன் தேடின பின்னர், அவனிடம் இன்னும் மீதியாயுள்ள அஞ்ஞான இருளில் பரந்தமான வெளிச்சம் (ஜோதி) உதயமாவதைப் பார்க்கிறான்.

நிஷ்டாமார்க்கம்.

22உ ஞான நிஷ்டாலயத்திற்கு வெளிப் பிரகாரத்திலுள்ள இந்த ஜீவாத்மா, தனக்கு முழுவதும் ஸ்வாதீனப்படாமலிருக்கிற உபாதியைச் சுத்தப்படுத்தி வேலைசெய்யத் தொடங்குகிறது. அன்பு செலுத்துவதிலும் ஏதாவது பிரதியாக வருகிறதாவென்று கேட்காமலும், அதை அங்கீகரிக்கிறார்களாவென்று பார்க்கக்காத்திராமலும் அன்பானது வெளிக்கிளம்பிப் போகும்வரை அது வேலைசெய்கிறது; ஏனெனில், எந்த இடத்திலிருந்து நாம் செலுத்தும் அன்பிற்குப் பிரதி அன்பு கொஞ்சங்கூட வாராதோ அந்த இடத்தில் தான் அன்பு செலுத்தவேண்டிய அவசியம் மிக்க அதிகமாயிருக்கிறதென்றும், தங்களுக்கு உதவிசெய்யும் அன்புக்குப் பிரதியாக தற்காலத்தில் ஒன்றும் கொடுக்காத ஜீவர்களுக்குத்தான் அன்பைப் பிறரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் மிகவும் அதிகமென்றும் அந்த ஜீவாத்மா அறிகிறது.

வெளிப்பிரகாரம்.

23வ கர்ப்பக் கிரஹத்திலிருந்து வெளிக்கிளம்பி வீசும் பரிபூரண அன்பின் கிரணங்களால் பிரகாசம் செய்யப்பட்ட கோவிலின் பிராகாரத்தின் அமைதியான ஆகாயத்தில் எவ்விதமான கோபத்துக்கும் இடமில்லை; ஏனென்றால் பிழை செய்கிறவர்களுங்கூட தன்னுடைய சகோதரர்கள் தான் என்றும், பிழை செய்கிறவர்கள் தங்களால் துன்பப்படுத்தப்பட்ட தங்கள் இனத்தாரைப் பார்க்கிலும் தங்களுடைய பிசகான செய்கையினால் தாங்களே அதிகமாய் வருத்தமடைகிறார்களென்றும் இந்த உயர் நிலைப்பிரியன் இப்பொழுது தெரிந்துகொள்ளவேண்டும்.

வெளிப்பிரகாரம்.

24வ க்ஷரபுருஷனானவன் (ஒரு ஜன்மத்தோடு அழிந்துபோகக் கூடியவன், Lower self) இங்கு கீழுலகத்தில் தன் ஜீவகால முழுவதையும் அந்தக் கைங்கரியத்திலேயே செலவழிக்க வேண்டுமென்றும், தன் அந்தராத்மாவாகிய அக்ஷர புருஷனுக்கு இவ்விடத்தில் சேகரிக்கும் பதார்த்தத்தையெல்லாம் ஸமர்ப்பிப்பதுதான் இவ்வுலகவாழ்வின் நோக்கமென்றும் தீர்மானிக்கின்றான். அநித்தியமான வாழ்வையுடைய தன்னைக்காட்டிலும், நித்தியனாயும் மென்மேலும் அபிவிருத்தி யடைந்துகொண்டும் வருகிற ஜீவாத்மாவின் விகாஸத்திற்கு இவ்விதம் பிரயோஜனமாயு மிருப்பதுதான் தன் வாழ்வின் உத்தேசமென்று தெரிந்துகொண்டு தீர்மானிக்கிறான்.

வெளிப்பிரகாரம்.

25.வ கைங்கரியம் செய்வதாக உறுதியாய் பிரதிக்ஞை செய்துகொண்டவர்களையும், எல்லாவற்றையும் தியாகம் செய்தவர்களையும், கைங்கரியத்துக்கான சுதந்தரத்தை நாடுகிறது தவிர வேறொன்றையும் எதிர்பாராதவர்களையும் தவிர வேறொருவரும் வெளிப்பிரகாரத்தில் இருக்கமாட்டார்கள் என்பதை நீ கவனி.

வெளிப்பிரகாரம்.



26வ கீழே யிருக்கப்பட்ட தன்னினத்தார்களிடமிருந்து தன்னை வேறுபடுத்தும் சுவர்களை இடிப்பதாகிய ஒரு வழி, தான் கோவிலை மூடியிருக்கும் கதவுகளைத் திறக்கும் வழி— வெளிப் பிரகாரத்தில் ஜீவாத்மா கற்றுக்கொள்ளும் பாடங்களில் இது ஒன்று.

வெளிப் பிரகாரம்.

27வ திரஸ்கரிக்கப் பட்டவனும், எளியவனும், நம்பிக்கையற்றவனும், தாழ்த்தப்பட்டவனும் இவர்கள் வேற்றுமை பாவமன்னியில் தன்னிடம் வரும்படி செய்வது பூர்ணம் பெற்றவர்களுடைய உபதேசக் குறிப்புகளில் ஒன்று. அருவருக்கப்படாத அவர்கள் பெற்றுக்கொள்ளும் பச்சாதாபத்தை உணர்கிறார்கள். அவனிடமிருந்து பக்ஷமானது பிரகாசிக்கிறது. அறிந்துகொள்ளும் அன்பு அவனைச் சுற்றிலும் பரவுகிறது. உண்மையில் அவன் பூர்ணஸ்திதியை அடைந்து வருகிறான் என்பதை அக்ஞானிகள் அறியமாட்டார்கள். உயர்த்தும் சக்தியையும் உயிர்ப்பிக்கும் உயிரையும் அவனுடைய ஸந்நதியில் புது சக்தியையும் புது நம்பிக்கையையும் அவர்கள் ஸ்வாசிப்பதாக உணர்கிறார்கள்.

குருநாதர்கள்.

28வ அக்ஞானத்தில் மூழ்கி யிருக்கும் லக்ஷக் கணக்கான நமது சகோதரர்களையும், நம்முடைய வருத்தங்களாலும் போராட்டத்தாலும் தியாகத்தாலும் ஏற்படும் உயர்வான சக்திகளைப் பற்றியும் நாம் நினைப்போமாக. அவர்கள் தெளிவடைய ஒரு படி உயர்த்தியும், அவர்களுடைய வருத்தங்களை ஆற்றியும், அவர்களுடைய அக்ஞானத்தைக் குறைத்தும், தெளிவும் உயிர்வாழ்த் தன்மையுமான க்ஞானத்தை ஞான வழியில் செல்ல அவர்களுக்கு ஒரு பாலமாய் ஏற்படவும் ஆவோம். ஒன்றும் தெரியாதவர்களுக்காக ஸ்வல்ப அறிவை அடைந்த நம்மவர்களில் யார்தான் தியாகம் செய்து கொள்ளாமலிருப்பார்?

பூர்ணமடைந்த மனிதன்.

29௨ நாம் எல்லோரும் துர்ப்பலமுள்ளவர்கள். நம்முடைய பலம் அற்பமானது. நம்முடைய புத்தி குறுகியது. நேசிக்கிறதும் தன்னை தியாகம் செய்துகொள்வதுமான ஹிருதயம் சொல்லுகிறதாவது, "உதவி செய்ய நான் இங்கே இருக்கிறேன். எவ்வளவு ஸ்வல்பமாகிலும் நான் உதவி செய்வேன். மனிதனுக்கு உங்களுடைய உதவிபோய் அடையும்படியாக நான் ஒரு வாய்க்காலாய் ஏற்படட்டும்." அப்படிப்பட்ட ஹிருதயம் ஒருக்காலும் தள்ளுபடி செய்யப்படுகிறதில்லை. அப்படிப்பட்டவனுக்கு வரும் பதிலானது "மனித வர்க்கத்திற்காக எங்களுடன் உழை. உழைப்பில் பங்கிட்டுக்கொள். காரிய பூர்த்தியின் கீர்த்தியிலும் பங்கிட்டுக்கொள்; எங்களுடன் கூட வா; மனித வர்க்கத்தை உயர்த்துவதற்காக நாம் எல்லோரும் சேர்ந்து உழைப்போம்.'

மானவ ரக்ஷகர்கள்.

---

## மார்ச்சு மாதம்.

## தியாகம்.

1௨ சிஷ்யனுடைய ஹிருதயமே ஓர் வேதிகை, அவனது பகவத் பக்தியே அவ்வேதிகைமீது ஜ்வலிக்கும் அக்னி; அவனது காயிக மானஸீக கர்மங்களெல்லாம் அந்த யக்ஞ வேதிகையில் ஹோமம் பண்ணப்படும் ஆஹுதிகள்; அவைகளை அவன் ஒருதரம் ஸமர்ப்பித்த பின்னர், திரும்பவும் அவனுக்கு அவற்றோடு யாதொரு ஸம்பந்தமுமில்லை.

பகவத்கீதையின் முகவுரை.

2௨ மனிதனுடைய நிஜஸ்வரூபம் சிதாத்மா. அந்த நோக்கத்துடன் பார்க்கின், இதரர்களுடைய ஸேவார்த்தமாக ஒருவன் தன் தற்கால போகத்தை த்யஜிப்பதை ஆத்மத்தியாகம் (தன்னைய மறுப்பு) என்று சொல்லப்படாது. அதை ஆத்ம ஸ்வரூப விகாசமெனல் வேண்டும்.

சன்மார்க்க நிலை.



3௨ தேடுப்பது பகவானுடைய ஸ்வபாவமே யொழிய ஸ்வீகரிப்பதன்று; தானை வசப்படுத்துவது பகவானுடைய லோகத் தமேயொழிய பிடிப்பதன்று; மனிதன் மிருக ஸ்வபாவத்தை விட்டு ஆத்ம ஸ்வரூபத்தை உணர உணர, அவன் தெய்வத் தன்மையில் பலப்படுகிறான்.

ஜடமாயாவாதம் பௌதீக சாஸ்திரத்தினால் அறுக்கப் பட்டது.

4௨ 'ஸகலப் பிராணிகளுக்கும் அதீதனையுள்ள ஜைாப் பிராணி யொருவருளர். ஸகல ஆன்மாக்களுக்கும் அதீதனு யுள்ள பரமாத்மா ஒருவருளர்,' என்னும் இந்த அற்புத தத் வார்த்தம் நமது ஸ்வாநுபவ ஸித்தமாகக்கூடியவைக்கமெது? நமது தினசரி வியவகாரங்களில் அற்ப விஷயங்களிற் கூட ஆத்மத்தியாகமான காரியங்களைச் செய்வதினாலேயும், நமது மனோவாக் காய சேஷ்டைகளில் ஒவ்வொருவரிடமும் ஐக்கிய பாவத்தைக் காட்டி அந்தப்படி அனுஷ்டித்து வருவதாலும், ஐக்கிய பாவத்தைக் குறித்துப் பேசுவது மாத்திரமேயல்லா மல் ஒவ்வொரு சமயத்திலும் ஸ்வப்ப புத்தியை நீக்கிவிட்டு பரோபகார புத்தியையே பிரதம கர்த்தவ்யமாக வெண்ணி நடந்து வருவதாலும் அது சாத்தியமாகும்.

உயர்வாழ்வின் தர்மம்.

5௨ தினந்தினம் சம்பவிக்கும் சிறு விஷயங்கள் சிறு சிறு மெல்லிய இழைபோன்ற பந்தங்களால் நம் மனத்தை விஷய நுகர்ச்சியில் ஸம்பந்திக்கும்படி செய்து கட்டுகின் றனவென்பதைக் கவனியாமல் அலக்ஷியம் செய்து, ஏதோ ஒரு பெரிய காரியம் நேரிடப் போகிறதென்றும், அதற்காகப் பெரியத் தியாகம் செய்திட வேண்டுமென்றும், அத்தியா கத்தைச் சரிவரச் செய்து முடித்து நாம் ஆயத்தம் செய்ய வேண்டுமென்றும் ஸாதாரண ஜனங்கள் நினைக்கிறார்கள்.

யோக உபந்யாஸங்கள்.

6வ. தன்னைத்தான் முற்றிலும் மறந்து, ஸ்வலர்பத் தியாகம் சாதாரணமாய் யத்தனமில்லாமலே பிரவர்த்திக்கும் ஸ்திதியே யதார்த்தமான தியாகம் நிரம்பியுள்ள ஜீவியம்.

உயர்வாழ்வின் தர்மம்.

7வ. மஹா புருஷனின் ஜீவிதாம்சம் ஒரு ரீதியாய் ஸாமான்ய மனிதனுடைய ஜீவியத்தில் பிரதிபிம்பிக்கக்கூடும்; எவ்விதமெனின், ஒவ்வொரு காரியத்தையும் தியாக புத்தியோடு செய்தல், அதனால் தனக்குண்டாகக்கூடிய பலனை உத்தேசிக்காமல் இதரர்களுக்கு உண்டாகக்கூடிய பலனையே எண்ணிச் செய்தல், தினசரி வாழ்க்கையில் நடத்தப்படும் ஸாமான்ய தர்மங்கள், காரியங்கள், ஸ்வலாப விஷயங்கள் இவைகளிடம் மனோவிர்த்தியை மாற்றுவதின் மூலம் ஸகலத்தையும் மாற்றுவது ஆகிய இவைகளாலேயே கூடும்.

குப்தமான கிறிஸ்து மதம்.

8வ. பாஹ்ய ஜீவியத்தில் எவ்விஷயத்தையேனும் மாற்ற வேண்டிய அவசியமில்லை. எந்த விர்த்தியிடத்தேனும், தியாகம் அப்பியசிக்கத் தகும். எந்த வெளிப்படையான ஸ்திதியிலும் ஈசுவர ஸேவை செய்யத் தகும். (பலாபேக்ஷையும் அபிமானமுமின்றி ஈசுவரார்ப்பண புத்தியோடு, உலக நன்மைக்காகச் செய்யப்படும் வேலைகளெல்லாம் யக்ஞ ஸ்வரூபங்களே.)

குப்தமான கிறிஸ்து மதம்.

9வ. நாம் உதவி செய்ய விரும்பும் ஜனங்களிடத்தில் நம் ஹிருதயங்கள் அனுதாபத்தால் துடித்துக் கொண்டும், அவர்கள் உணருவதுபோல் நாமும் உணர்ந்துகொண்டும், அவர்கள் பார்ப்பதுபோல் நாமும் பார்த்துக்கொண்டும் இருந்தாலொழிய நாம் அவர்களுக்கு உதவி செய்ய முடியாது. ஏனென்றால், அவ்வுதவியானது நமக்குள்ளிருந்து செய்யப்படுகின்றதே யொழிய நமக்கு வெளியிலிருந்தன்று. ஆகையால் அவர்களுடைய ஹிருதயங்களிலும் மனங்களிலும் நாம் வரவர அதிகமாய் பிரவேசித்து, எந்த உட்பிரதேசத்தி



லிருந்து ஒருவாறு அவர்களிடமில்லாத எதை நாம் அடைந்திருக்கிறோமோ அதை அவர்களுடன் பங்கிட்டுக் கொள்ளச் சாத்தியமாமோ அந்த உட்பிரதேசத்தில் நாம் அதிகமாய் அமர்ந்திருத்தல் வேண்டும்.

ஜகத்குருவின் வருகை.

10வ. தியாகம் என்பது மற்றவர்களுடைய நன்மைக்காக இடைவிடாமல் வேலை செய்யும் சக்தி என்று பொருள்படும். உயர்ந்த உழைப்பாளியாகிய ஈசுவரனால் அவருடைய வேலைக்காரன் மூலமாய் செய்யப்படும் வேலையாகையால் அது ஒருக்காலும் தவறாது.

யோக உபந்யாஸங்கள்.

11வ. நாம் இஷ்டப்பட்டால் இன்றுமுதலே அப்பெரியத் தியாகம் செய்ய ஆரம்பிக்கலாம்; நமது தினசரி வாழ்க்கையில் நம்மைப்போன்ற இதரர்களுடன் நாம் சம்பந்திக்கும் ஒவ்வொருகாரியத்திலும் அதை ஆரம்பித்து நடத்தாவிட்டால், நாம் மலையின் உச்சியிலிருப்பதுபோன்ற மேலான நிலைமையில் இருக்கும்போது மேலான தியாகத்தைச் செய்துவிட முடியாதென்று நிச்சயமாய் நினையுங்கள். தினம் தினம் தியாகம் செய்து, தினம் தினம் அதைச் சிந்தித்து, பெற்றுக்கொள்ளாமல் எப்பொழுதும் பிறர்க்குக் கொடுத்துக்கொண்டிருந்து இப்படிப் பழகிவரும் அப்பியாசத்தினாலேயே உலகத்தாரால் பெரும் தியாகம் என்று சொல்லப்படுவதைச் செய்ய நாம் கற்றுக்கொள்ளலாம்.

உயர் வாழ்வின் தர்மம்.

12வ. இப்படி அனுஷ்டித்து வருகையில், தியாகம் செய்தலென்பது, தான் பட்ட கடனைத் தீர்ப்பதில் ஒருவனுக்குள்ள சந்தோஷத்திலும் அதிகமாகிறது; மனிதனால் கொடுக்கக்கூடிய ஒவ்வொன்றையும் ஆனந்தமாய்க் கொடுப்பதாகின்றது.

சிஷ்ய மார்க்கம்.

13வ. நம்மிடமிருப்பதை யெல்லாம் மிச்சமில்லாமல் பிரயோகம் செய்யும் அளவிற்குத் தக்கபடி ஈசுவரகிருபையா

னது பூரணமாய் நம்மிடம் வந்து சேர்ந்து, முன் நாம்
அடைந்திருந்ததைவிட அதிகமாக அடைய இடமுண்டா
கிறது. ஆகையால் நிவர்த்திமார்க்கத்தின் அடையாளம் தியாக
மாகயிருக்கின்றது. தியாகம்செய்தல் ஜீவஸ்வபாவம், அபஹ
ரித்தல் சரீரஸ்வபாவம்.

உயர்வாழ்வின் தர்மம்.

14௨ அன்பு, தியாகம், சரியான ஞானம் இவைகள்
ஸ்தூல உலகில் ஆத்மாவின் வெளித்தோற்றங்கள். ஏனெ
னில், ஆத்மா ஒரே ஒரு குணமுள்ள வஸ்து அன்று, அது
முக்குண ஸ்வரூபமானது. அன்பு எவ்வளவு முக்கியமோ
அவ்வளவு ஞானமும் முக்கியம்.

ஆன்ம வாழ்வு.

15௨ பொருளுடையவர்கள் தியாகம்செய்யத் தயாராகி
விட்டால், அப்பொழுது ஆகாயத்தில் ஓர் புதுயுகம் உதயமா
வது காணப்படும்; செல்வம், படிப்பு அதிகாரம் இவைகள்
எல்லோருடைய க்ஷேமத்திற்காக நம்பிக்கையாய் வைக்கப்
பட்ட பொருள்களென்று மதிக்கப்படும்போது, ஆஹா! அப்
பொழுதே ஓர் மேன்மையான ராஜாங்கஸ்தாபனம் ஏற்பட்டு
விடும்.

மாறிவரும் உலகம்.

16௨ ஆத்மாவின் இயற்கை ஸ்வபாவமானது, தனக்
கென்ன கிடைக்குமென்று கேட்காமல், பிறர்க்கு என்ன
கொடுக்கலாமென்று சதா கேட்டுக்கொண்டு, தன்னை முற்றி
லும் தியாகத்தில் ஈடுபடும்படி செய்ய ஆசைகொள்வதேயாம்.

ஜீவியத்தின் சில பிரச்னைகள்.

17௨ சமூக முன்னேற்றத்திற்குரிய ஒவ்வொரு இயக்
கத்திலும் உயர்வான நோக்கம் தியாகம்; தாழ்வான நோக்
கம் அன்பும் ஐக்கிய பாவமுமாம்; ஆகையால் எல்லோரும்
ஒன்றுசேர்ந்துகொண்டு, ஒவ்வொருவனும் தன்னால் கொடுக்
கக்கூடியதை கொண்டு வருகிறான். ஒருவனும் மற்றவனை
அலக்ஷியம் பண்ணமாட்டான்; ஏனெனில் ஓர் ஜன நிர்மா



ணத்திற்கு ஒவ்வொன்றும் யாதொரு ஏற்றத்தாழ்ச்சியுமின்றி
அவசியமாகிறது.

மாறிவரும் உலகம்.

18௨ மனிதர்கள் தங்கள் ஐசுவரியத்தை வீணான உலக
சுகத்தில் செலவழிக்காமல், கல்வி கற்பிப்பதில் செலவு செய்
தார்களானால், அப்பொழுது உண்மையான ஆத்ம பரித்தி
யாகம் உண்டாகிவிடும். கலகங்கள் உண்டாகாமல் தடுக்கப்
படலாம். ஏனெனில், மனிதர்கள் தங்களிடமிருந்து பொ
ருள்களை பிறர் எடுத்துக்கொள்ளும் வரை மாத்திரமும்,
சட்டப்படி தங்கள் ஐசுவரியம் அபகரிக்கப்படும் வரை மாத்
திரமும் தாங்களே கொடையளிக்கத் தயாராயிருப்பார்கள்

அதி சமீபகாலம்.

19௨ அவர்கள் பொது ஜனங்களுடன் கலந்து பழகித்
துக் கொள்வார்களானால்—பணத்தைப்பற்றி நான் நினைக்க
வில்லை; தோழமை, ஸ்நேக பாவம், உதவிபுரிதல், நாகரீகம்,
வித்தை ஆகிய இவைகளை அவர்களுடன் பங்கிட்டுக்கொள்ள
வேண்டுமென்கிறேன்—இப்படி அவர்கள் செய்தால், கலகம்
நேரிடுமென்ற பயம் நீங்கிவிடும்; ஏனெனில், பொதுஜனங்
கள் விஷயத்தில் அன்பைக் காட்டியும், அவர்களுக்கு உதவி
புரியும் காரியத்தில் ஈடுபட்டும் இருக்கின்ற ஹிருதயமுள்ள
வர்களுக்கெதிரிடையாக யாரும் கிளம்ப இஷ்டப்படமாட்
டார்கள்.

அதி சமீப காலம்.

20௨ பணமானது உபயோகிப்பதில் அழிவடைகின்
றது, ஆனால் அறிவும் அன்பும், பிறர்க்குக் கொடுப்பதிலும்
மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்வதிலும் அதிகமாய்ப்
பெருகுகின்றன. உங்களிடம் அறிவு இருந்து அதை நீங்
கள் பிறர்க்குக் கொடுத்தால், அதனால் நீங்கள் தாழ்மைய
டைய மாட்டீர்கள். மற்றவர்களுக்குக் கற்பிக்க நீங்கள்
முயற்சித்ததனால், நீங்களே அதிக அறிவுள்ளவர்களாகி
றீர்கள்.

அதி சமீபகாலம்.

21வ. உன்னையே நீ தியாகம் செய்துகொள்வதற்குத் தக்கபடி நீ உன்னை அறிந்துகொள்ளுகிறாய். மற்றவருக்காக உன்னுடைய உயிரை நீ கொடுப்பதனுல் உன்னுடைய சொந்த தெய்வீகத் தன்மையை நீ அறிகிருய்.

அதி சமீபகாலம்.

22வ. கொடுப்பதினுல் உண்டாகும் சந்தோஷத்தை நீ கற்றுக்கொள்ளும்பொழுது மாத்திரம் உன்னுடைய வாழ்வானது வரவர சக்தியுள்ளதாய் ஆவதை நீ காணும்பொழுதும்—ஏனெனில் மற்றவருடைய வாழ்வுக்காக உன்னை நீ தியாகம் செய்துகொண்டபடியால்—அப்பொழுதுதான் மற்றவர்களுக்காக பூர்ணமாய் கைங்கரியம் செய்தலானது பூர்ண சுயேச்சையை அடைகிறதென்றும் நீயறிவாய். தன்னுடைய உயிரை மற்றவர்களுக்காக ஒருவன் கொடுப்பதினுல், மனிதனிடமுள்ள நித்திய ஜீவனுன ஆத்மாவைக் காணுகிருன்.

அதி சமீபகாலம்.

23வ. தியாகமானது அதனுடைய அந்தரங்கமான பாவத்தில் கொடுக்கிறது அல்லது வெளியில் ஊற்றுவதாக பாவிக்கப்படும்; கொடுக்கவேண்டுமென்ற ஆசையினுல் அது தூண்டப்படுகிறது. அதனுடைய கருத்து தன்னிடமிருப்பதை கொடுக்கவேண்டுமென்ற ஆவலில் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டிருப்பவனுக்கு அது முக்கியமாய் இருந்தாலும் மற்றவர்களுக்கு உதவி செய்வதிலும் சந்தோஷத்தை உண்டாக்குவதிலும் தாராளமாய்க் கொடுக்க இஷ்டப்படுகிருன்.

வெளிப் பிரகாரம்.

24வ. வெளித்தோற்றத்தை விட்டு உட்பக்கமாக தியாகத்தைப் பார்க்கும் வழியானது, மற்றவர்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்கவேண்டுமென்ற கருத்துடன் கொடுக்கிறது. அல்லது ஊற்றுவது; ஆசையினுலே தியாகமென்ற செய்கைக்கு முக்கியமானது ஈகையானதால் அதன் கருத்து சந்தோஷமேயல்லாமல் துன்பமல்ல.

வெளிப்பிரகாரம்.



25வ. தியாகத்தின் சட்டம் ஈசுவரி ஸ்வபாவத்தில் ஆதாரமாயுள்ளது. இந்தப் பிரபஞ்சத்தை யுண்டாக்குவதில் ஈசுவரன் தன்னைத்தானே தியாகம் செய்துகொண்டார். அது தான் ஆனந்தம். ஆகையினுல் எல்லாருடைய நோக்கமும் அந்த ஆனந்தத்தைப் பங்கிட்டுக்கொள்ளுவது அல்லது சித றிவிடுவதாய் இருக்கும். அந்த தியாகத்தில் மூலமான்று அநேகர்களை ஈசுவரனுடன் ஒற்றுமைப்படுத்தும் பொருட்டு தன்னைத் தியாகம் செய்துகொள்ளுகிற சந்தோஷமாய் இருக் கிறது. அதனுடைய முடிவு வெளியிடமுடியாத சாந்தம்.

வெளிப்பிரகாரம்.

26வ. கொடுப்பது மிகவும் அதிக சந்தோஷமென்று நாம் அறிந்துகொள்வோம்; ஏனென்றால், அது ஈசுவர ஸ்வபா வத்தின் கருத்தாய் இருக்கிறது. மனிதன் தானாக ஆவதில் அதாவது தன்னுடைய பிரக்ஞை மூலமாகத் தெய்வத்தன் மையை அறிவதை நாம் அடுத்த படியில் தெரிந்துகொள்ளு வோம். அதிகமாக, அதிகமாகத் தான் சந்தோஷமடைவது மன்றி, மற்றவர்களுக்கும் அதிகமான சந்தோஷத்தைக் கொடுக்கிறவனுவான்.

வெளிப்பிரகாரம்.

27வ. அவன் சென்ற காலத்தில் சேகரித்த ஒவ்வொன் றையும், சக்தியாகவும் திறமையாகவும் மாறின வற்றையும் கோவில் வாசற்படியில் தியாகம் செய்வதற்குக் கொண்டுபோ கவேண்டும்; வெறுங் கையுடன் அவ்விடத்திற்குச் செல்லக் கூடாது—அழிக்கத் துணியாமல் இருப்பதற்காக, சுத்தம் செய்து கொள்ளுகிறதென்ற கடினமான வேலையைச் செய்ய வேண்டும். சுயமும் சம்பந்தமான ஒவ்வொன்றையும் அவன் விலக்கி, குணங்களின் சாராம்சத்தை வைத்துக்கொள்ள வே ண்டும்.

வெளிப்பிரகாரம்

28வ. தன்னுடைய லக்ஷியத்துக்குச் சமீபித்து வந்து கொண்டிருப்பதைப்பார்க்கும், தெய்வத்தன்மையை யறிந்து

பரிசுத்தவான்களின் பிரகாசம் தான் உள்ளுக்குள் செல்லுவதற்கு ஏற்படும் தடங்கல் குறைகிறவரையிலும் ஆத்மாவானது ஒரு நிமிஷங்கூட சும்மாயிருக்கக்கூடாது, திருப்தியடையக்கூடாது.

வெளிப்பிரகாரம்.

29௳ ஆகையினால் உலகத்தில் வருத்தமாகத் தோன்றுவதெல்லாம் வெளிப்பிரகாரத்தில் சந்தோஷமாக ஆகிறது. சுத்தப்படுவதில் ஏற்படும் துன்பம் நல்வரவை ஏற்கக்கூடிய சிநேகமாய் இருக்கின்றது.

வெளிப்பிரகாரம்.

30௳ அதுதான் பேச்சின் தவமென்றும், யதார்த்தத் தவமென்றும், மேல் நோக்கும் ஒவ்வொருவரும் அர்ப்பிக்கும் பேச்சின் தியாகமென்றும் சொல்லப்படுகிறது.

வெளிப்பிரகாரம்.

31௳ அவன் சுயேச்சையடைவதில் கட்டாயப்படுத்தப்படும் கட்டுகளை விலக்கிக்கொள்ளுகிறான். அதனால் பூர்ணமான சுயநலம் அற்றதன்மையைகற்றுக் கொள்ளுகிறான். எல்லாருக்கும் நன்மைசெய்வதையே தான் தேடுவதாகத் தெரிந்து கொள்ளுகிறான், எல்லாருக்கும் கைங்கரியம் செய்வதை மட்டும் தான் அடைய விரும்புகிறான்.

வெளிப்பிரகாரம்.

## ஏப்ரல் மாதம்.

## பகுத்தறிவு.

1௳ உண்மையான விவேகத்தையும் உண்மையான பகுத்தறிவையும் நீ அபிவிருத்தி செய்துகொள்வதுடன், உன்னுடைய வாழ்க்கையில் உன்னைச் சூழ்ந்திருக்கும் எல்லாவற்றிலும் உபயோகமுள்ளவைகளின்னவையென்றும், உபயோகமற்றவைகளின்னவையென்றும் அறிந்து கொள்ளவேண்டும். நீ சந்திக்கும் ஸ்திரீ புருஷர்களிடத்தில் வெளிப்படையாய்த்



தோன்றும் கோலம் குற்றங்குறைகள் முதலியவற்றைக் கவனியாது, அவர்களுக்குள்ளிருக்கும் ஈசுவரத் தன்மையை மாத்திரம் அறிந்துகொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும்.

—மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும்.

2௳ ஒவ்வொரு மனிதனிடத்துமுள்ள ஈசுவரத் தன்மையையே பார்த்தும், அவனிடமுள்ள கெடுதலான பாகத்தை நீக்கி மிகவும் நன்மையான பாகத்தைப் பார்த்தும் அவனுக்கு நீ உதவி செய்யும்பொருட்டு அவனுடைய உத்கிருஷ்டமான பாகத்துடன் உன்னை ஒருமைப்படுத்திக் கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும். அவனிடமுள்ள அருவருப்பை விளைவிக்கும் விஷயங்களைக் கண்டு அவனைப் பகைக்கக்கூடாது; ஏனெனில் பகையானது அவனிடமுள்ள கெடுதலான சுபாவத்தை பலப்படுத்தி, அதைவிட்டு மேல் கிளம்புவதற்கு அவனுக்கு அதிகக் கஷ்டத்தை உண்டாக்குகிறது. சோதனை முறையான மார்க்கத்தில் செல்லுகையில் சிஷ்யன் அடையும் முதற் சாதனம் இதுவே.

—மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும்.

3௳ ஒவ்வொரு அனுபவத்திலிருந்தும் அதனாலுண்டாகும் ஞானத்தை கிரகிக்குமுன், அவ்வனுபவத்தில் கொஞ்சம் நாம் பட்டால் போதுமா, அல்லது மறுபடியும் மறுபடியும் அவ்வனுபவத்தை அடைந்தேதான் அந்த ஞானத்தை அடைய விரும்புவோமா என்கிற விஷயத்தில் தீர்மானம் செய்து கொள்வது எப்பொழுதும் நம் ஆதீனத்தில் உள்ளது. மேலான விஷயத்திலிருந்து கீழானதை வேறுபடுத்தக் கற்றுக்கொண்ட பிற்பாடும் கீழ்ப்பட்டதை மனதாரத் தெரிந்து செய்வதுதான் எல்லா மதக் கொள்கைகளிலும் 'பாபம்' என்று சொல்லப்படுவதாகும்.

—பிரம்மஞானச் சுருக்கம்.

4௳ நம்முடைய பலத்தை ஆலோசித்து அளந்து அதற்குப் பொருத்தமாகவே நம் வேலைகளைச் செய்வது ஓர் அவசியமான விஷயமாகும். வேலை எவ்வளவு செய்தோமென்பது

முக்கியமல்ல; ஆனால் நாம் செய்யவேண்டிய வேலையின் அளவிற்கும் அதைச் செய்ய நமக்கிருக்கும் சக்திக்குமுள்ள யுக்தமான விபாகமே முக்கியமாகும்.

—சித்த விருத்தி விஷயம்.

5. சரீர சுகத்தையே பிரதானமாகக் கொண்டுள்ள வாழ்க்கையிலிருந்து மாறி, மனதிற்கு விஷயமான அறிவு வளர்ச்சி முதலியவற்றை முக்கியமாகக் கருதிய வாழ்வை அவலம்பிக்கக் கற்றுக்கொள்கிறவர்களும், மேன்மேலும் அதிக சாசுவதமானவைகளையே நாடிக்கொண்டிருப்பவர்களும் மனித விகாஸ முறைக்கு உதவி புரிந்துகொண்டிருப்பவர்கள்.

—துன்பத்தின் அர்த்தமும் உபயோகமும்.

6. மற்றெல்லாவற்றையும் விட மேலாக, அவன் கைங்கரியத்திற்கே தன்னைத் தகுதியாக்கிக்கொள்கிறான்; ஆகையால், அதன் தன் சக்தியை எவ்விதம் உபயோகப்படுத்துகிறதென்ற எண்ணங்களைத் தெரிந்தெடுத்துக் கொள்வதில் வெளியுலகத்தில் அவைகள் எப்படிச் செய்கைகளாகப் பரிணமிக்கும் என்று கணக்கிட்டு, எவ்வளவு தூரம் அவைகள் உபகாரார்த்தம் வேலைசெய்யும், எவ்வளவு தூரம் அவைகள் மற்றவர்களுக்கு ஆதரவு அளிக்கும், பரிசுத்தத்தை உண்டாக்குவதில் எவ்வளவு தூரம் உதவி புரியும் என்று அறிந்துகொள்கிறான்

வெளிப்பிரகாரம்.

7. அவன் தன் பிரக்ஞையை, நன்மையானவைகளையெல்லாம் ஆகர்ஷித்துக்கொள்ளும் ஓர் காந்தமாக ஜாக்கிரதையுடன் செய்துகொள்கிறான். அதனால் தீமை யெதுவும் அவனைவந்து தட்டித்தாக்கும் பொழுது அது நசித்துப்போகின்றது; நல்லவைகளெல்லாம் அதிக வளர்ச்சியடையும்பொருட்டு அவன் பிரக்ஞையில் வந்து சேர்கின்றன.

வெளிப்பிரகாரம்.

8. உன்னுடைய சரீரத்தை அதற்கு இஷ்டமான காலத்தைத் தெரிந்தெடுக்கும்படி அனுமதிக்காதே. மனதிற்கு



உபயோகமான வேலைக்காரனாக ஆகும் விதமாய், நினைத்தகாலத்தில் தன்படியே கீழ்ப்படியும் படியாக அதைப்பழக்கு. கொஞ்சகாலம் பழகின பிற்பாடு சரியானபடி தெரிந்துகொள்ள வில்லையென்று கண்டால் அதைமாற்று; நீ உன்னுடைய இச்சா சக்தியை பலப்படுத்த முயல்வதால் அதிகக்கடுமையாய் இராதே. சரியாக வேலை செய்யாத விதத்தை மாற்றத் தயாராயிரு; உனக்கு இஷ்டமான காலத்திலும் பூர்ணமான யோஜனையுடனும் அதைமாற்று.

வெளிப்பிரகாரம்.

9. இப்பொழுது அனுஷ்டானத்தில் உன்னுடைய எண்ணங்களைத் திருப்ப நீ விரும்புவாயாகில், அதற்கேற்ற அறிவு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. சமூகச் சீர்திருத்த முறையில் மனம் போனபடி செல்லாதே. ஒரு வருஷத்திற்குப் பிற்பாடும், மற்றொருவருஷத்திற்கு பிற்பாடும், அந்த முறையானது அனுசரிக்கப்படுவதினால் சமூகத்திற்கு சாசுவத நன்மை ஏற்படும்படி யதார்த்தமாய் வேலை செய்கிறதாவென்றுபார்க்காமல் முதல் பார்வையில் இருக்கிற ஸ்திதியை உத்தேசிக்கையில் சீக்கிரம் மாற்றிவிடலாமென்று காணப்படுவதால் மட்டும் மாற்றாதே.

படிப்பும் பழக்கமும்.

10. பிரம்மஞானிகளாகிய நம்முடைய வேலையானது விசால முறையில் உள்ள பெரிய பிரச்னைகளை விளக்குவதிலும், இனிமேலும் அதிக யோஜனையன்னியில் சகோதர பாவத்தை எவ்வளவு தூரம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரக் கூடுமென்று பார்க்க முயற்சிப்பதிலும் இருக்கவேண்டும்.

படிப்பும் பழக்கமும்.

11. நாம் உயர்நிலையடைய வேண்டுமென்ற தீவிர இச்சையின்றி நாம் அபிவிருத்தியடைய மாட்டோமாகையால், அதி உன்னதஸ்தானத்தையடைய நாம் சந்தோஷமாய் இச்சிப்போம். அழியக்கூடியவும் இழிவானதும் அற்பமானதுமான பதார்த்தங்களோடு நம்மைச் சேர்த்துக்கொள்ள பிரியப்

படுவதினால், நாம் முன்னுக்குப் போகாமல் தடுக்கப்படுகிறோம். உயர்வானதும் விசாலமுமான சாசுவதவுமானவைகளுடன் கலந்துகொள்ள இச்சித்து நாம் முன்னுக்கு வரக்கூடாதா?

உள்வாழ்க்கையில் சில சங்கடங்கள்.

12வ உங்களுக்குள் முக்கியமாய் வயதானவர்களுக்குச் சொல்வதாவது, உங்களுக்குக் கீழ்வயதிலுள்ளவர்கள் நினைக்கும் நினைவைத்தடுக்க முயற்சிக்காதேயுங்கள். ஒவ்வொரு தலைமுறையாரும் அதற்கு முந்தின தலை முறையாரைப்பார்க்கிலும் உண்மைவழியில் அதிகமாய்ச் செல்லுகிறார்கள். மூத்தவர்களான நாம் உண்மையைக் கைப்பிடித்துக் கொள்ளவில்லை. அதைக் கற்றுக்கொண்டுமட்டும் வருகிறோம்; நாம் போராட்டத்தின் பேரிலும் வேதனையுடனும் மன உபாதியோடும் கண்டுபிடித்த உண்மைகளை லகுவாய் அடையும்படியான லாபம் நம்முடைய இளையவர்களுக்கு ஏற்படுகிறது.

சுயேச்சையுடைய மார்க்கம்

13வ முக்கியம் அமுக்கியம் இவைகளின் வித்தியாசத்தைத் தெரிந்துகொண்டு, மிருதுவாக இணங்குந்தன்மையையும், இனிமையான மரியாதையையும் முக்கியமற்ற விஷயங்களில் அனுசரிக்க அவன் பழகவேண்டும். காரியமுள்ள விஷயங்களை பூரணமாய் பின் பற்றும்பொருட்டு காரியமில்லாத அற்ப விஷயங்களில் இணங்குவது நல்லது.

தீக்ஷாமுறை

14வ உதவிசெய்யும் கடமைக்கும் ஆக்ஷிசெய்ய வேண்டுமென்ற ஆசைக்கும் உள்ள தாரதம்யத்தை நீ கற்றுக் கொள்ளவேண்டும். அநேக ஜனங்கள் தங்களுடைய சொந்த அபிவிருத்தியைக் கவனிப்பதை விட்டொழித்து மற்றவர்களைக் காப்பாற்றுகிறவர்கள் போல் எண்ணிக்கொண்டு மற்றவர்களுடைய எண்ணங்களிலும் செய்கைகளிலும் எப்பொழுதும் தலையிடுகிறார்கள்.

தீக்ஷாமுறை.



15வ உலகத்தார் பகுத்தறியும் விதமாய் இல்லாமல் குப்த வித்தைக்காரர்கள் பகுத்தறிகிறபடி உண்மைக்கும் பொய்க்குமுள்ள வித்தியாசத்தைப் பகுத்தறியக் கற்க வேண்டும்

தீக்ஷாமுறை.

16வ உன்னைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும் ஒவ்வொருவரிடமும், ஸ்திரமான அம்சத்திற்கும் ஸ்திரமற்றதற்கும், மேல் பூரப்பிலுள்ளதற்கும் பூர்த்தியானதற்கும், சாசுவதமுள்ளதற்கும் அழிவுள்ளதற்கும் உள்ள வித்தியாசங்களை நீ கற்றுக்கொள்ளவேண்டும்.

தீக்ஷாமுறை.

17வ தப்பிதம் என்ற உணர்ச்சியானது ஏற்படுங் காலத்திலேயே அதற்கு இணங்குவதும் சரியான தவறு என்று ஏற்பட்டு விடுகிறது.

தர்மம்

18வ ஈசுவரனிடத்தில் மட்டுந்தான் பூர்ணமான நீதியுண்டு; நாம் விகாஸ முறையில் அடைந்திருக்கும் நிலைமைக்குத் தக்கவாறு நம்முடைய நீதியும் அநீதியும் தாரதம்மியத்துடன் சார்ந்திருக்கிறது.

தர்மம்

19வ ஏற்றுக்கொள்ள முடியாத உன்னதமான லக்ஷியத்தை பக்குவமடையாத ஆத்மாவிடம் வைப்போமானால், அவனுடைய அபிவிருத்தியை நாம் தடுக்கிறோம்.

தர்மம்

20வ அனுபவமானது வாழ்வின் சட்டம். அதுதான் வளர்ச்சியின் சட்டம். நன்மை அல்லது தீமையில் அனுபவம் இருந்தால் ஒழிய நீதி அநீதி இதற்குள் அனுபவம் எப்படி வளரும்?

தர்மம்.

21வ ஒரு மனிதன் அறிந்துகொள்ளக்கூடாத உயர்ந்த விஷயத்தை அவனிடம் நீ சொல்லுவாயானால் ஸாரமில்லாத விஷயத்தைப் பற்றி நீ பேசுகிறாய் என்று அவன் அறிகிறான்;

ஏனெனில், அவன் செய்கிறதற்கு சக்தியில்லாத காரியத்தை
நீ செய்யும்படி அவனை கட்டளையிடுகிறாய்; ஒருவனை அசைக்
காத நோக்கங்களை உன்னுடைய மூடத்தனத்தால் அவன்
முன்பு நீ வைக்கிறாய்.

தர்மம்.

22வ. குப்த வித்தியா மார்க்கத்திலுள்ளவர்களிடம்
குடிகொண்டுள்ள இந்த உண்மைக்குணமானது, அவர்க
ளுக்கு நேரான வழிகாட்டியாகவும் கவசமாகவும் உபயோகப்
படுகிறது. தப்பான வழியிலிருந்து சரியானமார்க்கத்தை
உள்ளுணர்வால் அறிந்துகொள்ள அவர்களுக்கு சக்தியைக்
கொடுக்கிற விஷயத்தில் அது அவர்களுக்கு வழிகாட்டியாக
உபயோகப்படுகிறது; உண்மையென்னும் கவசத்தால் அவர்
கள் மூடப்பட்டிருப்பதால், அவர்கள் செல்லும் பிரக்ஞா
பூமிகளிலுள்ள மருள், தப்புவழி முதலியவைகள் அவர்க
ளுக்கு யாதொரு தீங்கும் செய்ய முடியாமற்போவதால்,
அது அவர்களுக்குக் கவசமாக உபயோகப்படுகிறது.

வெளிப்பிரகாரம்.

23வ. ஏனெனில், எண்ணம், பேச்சு, செய்கை இவை
களில் உண்மையாய் நடந்துகொள்வதினாலேயே அவர்கள்
மாயையின் எவ்விதமான திரையையும் ஊடுருவிச் செல்லும்
படியாகவும், அவ்வுண்மைக்குணத்தை வஞ்சிக்கக்கூடிய
சக்தி பிரகிருதியில் யாதொன்றும் ஏற்படாமலும் செய்யக்
கூடிய பாரமார்த்திக ஞானம் நாளடைவில் அவர்களிடம்
உற்பத்தியாகின்றது.

வெளிப்பிரகாரம்.

24வ. எங்கு பார்த்தாலும் திரைகள் பரப்பப்பட்டி
ருக்கின்றன; இந்த மாயாப் பிரபஞ்சத்தில் எங்கு நோக்கி
னும் வஞ்சனையான தோற்றங்களே காணப்படுகின்றன.
ஆத்மார்த்தஞானம் உண்டாகி, மாறுபடாமலும் நேரான
திருஷ்டியுடனும் இவைகளெல்லாவற்றின் வழியாகவும் ஊடு
ருவிச் சென்று பார்க்கக்கூடிய சக்தி ஏற்படுகிறவரையில் இந்
தத் திரைகள் இருக்கின்றன.

வெளிப்பிரகாரம்.



25வ. இனி வருங்காலத்தின் உபயோகத்திற்காக உற்
பத்தியாய்க் கொண்டிருக்கும் லக்ஷியங்களை நீங்கள் கைக்
கொண்டு, நசித்துக்கொண்டுவரும் பழைய லக்ஷியங்களைப் பிரித்
தறிந்து அவைகளை விட்டுவிடவேண்டும்; அப்படிச் செய்வ
தற்கடையாளமாக, இவ்விரண்டில் எதில் நீங்கள் உங்களது
சொந்த சக்தியையும் முயற்சியையும் அதிக நன்றாய் உபயோ
கித்தீர்களென்று அறிந்துகொள்ளவேண்டும். உங்களைச் சூழ்ந்
துள்ள பெரும் பான்மையான ஸ்திரீ புருஷர்கள் இந்தப் புது
லக்ஷியங்களை அறிந்துகொள்ள முடியாதவர்கள் உங்கள்
முயற்சி வீணாகாமலிருக்கும்பொருட்டு அவைகளின் உருவங்
களை நீங்கள் கண்டறிந்து கொள்வது மேன்மையாகும்.

படிப்பும் பழக்கமும்.

26வ. மனிதர்கள் அறிவின்மையால் தத்தளிக்கிறார்கள்;
அவர்கள் குருடர்களாயிருப்பதால் உதவியற்றவர்களாயிருக்
கிறார்கள்; சாதாரண மனிதர்களைக்காட்டிலும் சீக்கிறமாக
தன் மார்க்கத்தை முடிக்க விரும்பும் மனிதன், ஞானம்,
அன்பு, அறிவு, பக்தி இவைகளை வேண்டுகிறான். அனேக
காலங்களுக்கு முன்னர் அவன் போட்டுக்கொண்ட விலங்கு
களின் வளையங்களை அவன் ஏன் தாமதமாய் விலக்கிக்கொள்ள
வேண்டும்? அவைகளை சீக்கிறத்தில் சேர்த்து, அவனை ஸ்வ
யற்சியாய்ச் செய்வதற்காக தன்படியே நாளடைவில் அவனை
விட்டு நீங்கினால் எப்படியோ, அவ்வளவு நன்றாய் அவைகளை
இவன் சீக்கிரத்தில் விலக்கிக்கொள்ளலாம்.

கர்மம்.

27வ. நாம் தெளிவடையும் பொழுது அதிகமாய் சந்
தோஷமடைய இஷ்டப்படுவதில்லை; அப்படியே வியாகூலத்
திலும் நாம் அதிகமாய் வியஸனப்பட மறுதளிக்கிறோம்; ஆத்
மாவின் உறுதியான பிடியை நமது சுகதுக்கங்களென்கிற இரண்
டும் அசைக்காமலிருக்கும் வண்ணம், முன்னடைந்த சந்
தோஷத்தின் ஞாபகத்தினாலும் இனி அடையப்போகிற சந்
தோஷத்தை எதிர்பார்ப்பதினாலும் தற்காலமுள்ள துன்பமா

மாகிய முள்ளை விலக்கிக்கொண்டு ஒரு அனுபவத்தினால் மற்றொரு அனுபவத்தை சமப்படுத்திக்கொள்கிறோம்.

உள்வாழ்க்கையில் சில சங்கடங்கள்.

28வ மேன்மார்க்கத்திற் குரிய சாதனங்களில் முதலாவது, நித்தியத்திற்கும் அநித்தியத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ளும் பகுத்தறிவாகும். ஒரு குணத்தைப்பற்றித் தியானித்து, அதன் பிறகு அந்தப்படி நடப்பதுதான் திட்டமான அபிவிருத்திக்கு வழியாகும்.

தீக்ஷாமார்க்கம்.

29வ ஞானாலயத்தின் வெளிப்பிராகாரத்திலேயே ஈசுவர பாவத்தை நாம் கண்டறிந்துகொள்ளவேண்டும்; அதை மறைக்கும் திரைகள் எவ்வளவு சனமுள்ளவைகளாயிருந்தாலும் பாதகமில்லை. ஏனெனின், ஆத்மநேத்ரங்கள் அங்கு திறக்கப்படவேண்டியவைகள். அதற்கும் மற்ற மனிதர்களுடைய ஆத்மாவுக்கும் மத்தியில் திரை ஒன்றும் இருத்தல் கூடாது.

வெளிப் பிராகாரம்.

30வ குப்தவித்தையில் பழகுகிறவர்களுக்கு நீதி அநீதி இவைகளைப் பகுத்தறிந்துகொள்ளவேண்டிய அவசியமில்லை; எவ்வளவு நஷ்டமானாலும் எவ்வளவு தியாகமானாலும் நீதியையே கடைப்பிடித்து நடக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஈசுவர சித்தத்தை அனுசரித்த வழிக்கும் அதற்கு எதிரிடையான வழிக்கும் மத்தியில் சிலர் தத்தளிப்பதுபோல் இவர்கள் செய்யமுடியாது.

தீக்ஷாமார்க்கம்.

---

## மேமீ

## வைராக்கியம். (ஆசை இன்மை)

1வ வைராக்கியம் அடையவேண்டுமென்னும் கவலையில் அன்பை ஒழித்துவிடாதே. பேதஞானத்தை அடைந்த



ஆத்மாக்களான நம் ஒவ்வொருவரிடமும் அன்புதான் உயிர்நிலை. பேதஞானமடைந்த ஒவ்வொரு ஆத்மாவையும் அவ்வன்புமற்ற ஆத்மாக்களுடன் சேர்க்கிறது.

யோகபீடிகை.

2. வைராக்கியத்தை அடையும்பொருட்டு தினசரி வாழ்வின் ஒவ்வொரு விஷயத்திலும் நீ அதை அப்பியாஸம் செய்துகொண்டு வரவேண்டும்.

யோக பீடிகை.

3வ அற்ப சுகங்களை விரும்பாமலும் அற்ப துக்கங்களை வெறுக்காமலும் வெளிவிஷயங்கள் வரும்பொழுதெல்லாம் அவைகளை முகமலர்ச்சியுடன் சகித்து சுவல்ப அசௌகரியங்களையும் போஜன சுகங்களையும் ஸ்தூல சரீர சம்மந்தமான போகங்களையும் பாராட்டாமலிருக்கும் உதாஸீநத் தன்மையை நாம் விருத்தி செய்யவேண்டும்.

சாந்தி நிலயம்.

4வ ஒவ்வொரு பற்றும் ஆத்மாவைக் கட்டுப்படுத்தி அந்த ஆசை பூர்த்தி அடையும் இடத்திற்கு அந்த ஆத்மாவை இழுத்துக்கொண்டு போய்விடும்.

சீடமார்க்கம்.

5. குருநாதருடைய ஆச்சரியகரமான பூரண வடிவத்தையும் அழகையும் ஒருதடவை ஒருவன் பார்த்து அவருடைய குண பிரபாவத்தால் பரவசமடைந்துவிட்டால் அவரைப்போல் தானும் கொஞ்சமேனும் ஆகி உலகத்தில் அவருடைய தூதனாக ஆகவேண்டுமென்கிற ஒரே ஒரு ஆசைதான் மீதியாய் நிற்கிறது.

தீக்ஷாமார்க்கம்.

6வ நிவர்த்திமார்க்கத்தில் நடக்க வேணுமென்னும் பேரவா ஒருதரம் உதித்துவிட்டால் அஸத்வஸ்துக்களின் பற்று அற்று விடுகிறது. பூர்ணத்வத்தை நோக்கி தீவரமாய் நாடிப்போகும் மனிதனை அவ் வநித்திய விஷயங்கள் தடைசெய்ய சக்தியுள்ளவையாகா.

தீக்ஷாமார்க்கம்.

7வ. பலனை எதிர்பாராமல் கர்மத்தைச் செய்வதால் மனச்சமாதானமும் ஒவ்வொரு காரியத்திலும் ஏகாக்ரசித்தமும் ஏற்படும்.

சாந்தி நிலயம்.

8வ. அப்பியாஸம் என்ற வார்த்தையை சாதாரணமாய் த்யானம் என்ற அர்த்தத்தில் உபயோகப்படுத்தினாலும் வாஸ்தவத்தில் அது த்யானம் மட்டுமல்ல; மனதைக்கவரும் விஷயங்களுடேயிருந்துகொண்டு அவைகளில் திடமான வைராக்கியத்தை தடங்கலில்லாமல் அடைவதுமே.

யோக பீடிகை.

9வ. காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியம் எனப்படும் அரிஷட்வர்க்கங்களில் ஒவ்வொன்றும் அடக்கப்பட்டு, விஷயங்களில் (இச்சையை உண்டுபண்ணும் பொருள்களில்) கவர்ச்சி நீங்கி, சுற்றிலுமுள்ள வஸ்துக்களோடு மனிதனைக் கட்டுப்படுத்தும் பந்தங்கள் அறுபட்டுப்போகும் நிலைமையை நாம் அடையவேண்டும்.

யோக பீடிகை.

10வ. இவ்விதமான வைராக்கியத்தை அடைவதெப்படி? வெளிப்பொருள்களிடத்திலிருந்து நம்மை (ஜீவாத்மாவை) அவைகளைக்காட்டிலும் அதிக வலிவுள்ள ஆத்மாவின் (பரமாத்மாவின்) ஆகர்ஷண சக்தியினால் மெதுவாகவும் படிப்படியாகவும் இழுத்துக்கொள்வதினாலேதான். ஜீவாத்மா பரமாத்மாவால் எப்பொழுதும் ஆகர்ஷிக்கப் பட்டுக்கொண்டிருக்கிறது.

யோக பீடிகை.

11வ. வைராக்கியமென்ற இந்த மகா சாதனமானது யோக சித்திபெற விரும்புகிற ஒருவனுக்கு முக்கிய அறிகுறியாக இருக்கவேண்டுமானால் அவ் வைராக்கியத்தை பிடிவாதத்துடன் விடாமல் அவன் அப்பியசித்துவந்தாலன்றி எவ்வளவு தீவிரமானாலும் ஒரு சமயத்தில் மாத்திரம் செய்யும் தனி முயர்ச்சி போதாது.

யோக பீடிகை.



12வ. சில வேளைகளில் அணிமாதி சித்தியை அடைய வேண்டுமென்னும் ஆசை சிஷ்யனுக்கு உண்டாகிறது. "எனக்கு சூக்ஷ்ம திருஷ்டிமாத்திரம் கிடைத்துவிட்டால் நான் இன்னும் எவ்வளவோ உபயோகமுள்ளவனாக இருக்கக் கூடுமே. ஸ்தூல பிரக்ஞையை விட்டு நான் வெளியே இருக்கையில் செய்யும் காரியங்களை மாத்திரம் நான் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக் கூடுமானால் மனிதர்களுக்கு நான் எவ்வளவு அதிகமாய் உதவிசெய்யக்கூடும்" என்று எண்ணுகிறான். இது விஷயத்தில் மிகவும் சரியாய் தீர்மானிக்கக் கூடியவர் சிஷ்யனா அல்லது குருவா? தேவை இன்னதென்பதை சீடன் நன்றாய் அறிவானா? குரு நன்றாய் அறிவாரா? அச்சக்திகள் எப்பொழுது விகசிக்கவேண்டும் என்னும் விஷயத்தை குரு கையில் ஒப்புவித்துவிடு.

தீக்ஷா மார்க்கம்.

13வ. வைராக்கியம்—ஆசையின்மை—என்பதை நாம் அவசியம் அடையவேண்டும். ஏனெனில் கீழ் உலகத்தில் (ஸ்தூல பிரக்ஞையில்) மேலான சித்சக்தி பிரகாசிப்பதற்கு வைராக்கியம் இன்றி அமையாத சாதனம்.

உயர்வாழ்வின் தர்மம்.

14வ. "பலாபேக்ஷை இல்லாமலிருப்பது" என்றால் நம்முடைய செய்கைகளினால் உண்டாகும் பயனை கவனித்து அதனால் எப்படி நாம் ஒழுகவேண்டும் என்பதைக் கற்றுக்கொள்ளக்கூடாதென்பதில்லை. அப்படிப் பயனை ஆராய்வதினால் நமக்கு அநுபவமுண்டாகி ஞானம் சித்திக்கிறது. ஆனால் நமது பூர்ண ஆராய்ச்சியோடும், சக்தியோடும், நல்ல எண்ணத்தோடும் ஒரு காரியம் செய்துவிட்ட பிறகு அதன் பயனைப்பற்றிக் கவலைப்படாமல் அதனை மனதிலிருந்து அகற்றிவிடவேண்டும்.

சாந்தி நிலயம்.

15வ. நீயும் நானும் ஒன்றென்று தெரிந்துகொள்ளாமல் "நீ வேறு நான் வேறு" என்று நினைக்கிற வேற்றுமை

உணர்ச்சியாகிய துரபிமானத்தை ஸ்தூலப் பொருள் பேற்றில்
மாத்திரம் அல்லாமல் நற்குணப்பேற்றிலும் மனோ சக்திகளின்
பேற்றிலும் பாராட்டுவதும் கூட ஆத்மாநுசந்தான வாழ்க்
கைக்கு இடையூறாகும்.

மனஸ்தத்வமும் ஆத்மதத்வமும்.

16. இரண்டாவது சாதனம்—வைராக்கியம், ஆசை
யின்மை. இது ஓடிக்கொண்டும் மாறிக்கொண்டும் இருப்ப
வைகளில் பற்றின்மையும் சாசுவதமாய் என்றும் உள்ள அந்த
ஸத்யப்பொருளில் ஏகாக்ர ஆசை உடைமையுமேயாம்.

தீக்ஷாமார்க்கம்.

17. ஈசுவரசங்கற்பத்தை அநுசரித்த "சேவை'
என்னும் கைங்கரியார்த்தமான அந்த ஒரே பலமான இச்சை
மாத்திரமே மனதில் குடிகொள்ளும் வரையில் சூக்ஷ்ம (நல்ல
வைகள்போல் நடித்து வஞ்சிக்கும்) ஆசைகளை அறவே
களைந்து குப்பைத்தொட்டியில் எறிந்துவிடவேண்டும். இவ்
விதம் வைராக்கிய சம்பத்தி அடையப்படுகிறது. இதைத்
தான் புத்தர்கள் "கர்மத்திற்காகத் தயாரித்தல்" என்று விவே
கத்துடன் சொல்லுகிறார்கள்.

சீடமார்க்கம்.

18. ஈசுவரனுடைய உயிரை (சக்தி, பிரக்ஞையை)
மேன்மேலும் உலகுக்கு ஊட்டிவைக்கும் வாய்க்காலாக
சீடன்தான் தன்னை ஆக்கிக்கொள்வதற்கு தக்கப்படி அப்
பேருள் ஜீவியம் பரவும் விசால ஆறாகத்தான் ஆகவேண்டு
மென்பதைத் தவிர வேறொன்றும் கேட்கிறதில்லை. அவனு
டைய ஒரே ஆசை அந்தப் பேருயிர் வெளியே பரவுவதற்குத்
தானே தடையாகாதவண்ணம் ஒரு பெரிய பாத்திரமாக ஆக
வேணுமென்பதே. தான் செய்யும் தொழில்களெல்லாம் உபகா
ரார்த்தமாகவே ஒழிய வேறொன்றுக்கும் அல்ல என்பதுதான்
சீடத்துவ ஜீவியம்.

கர்மா



19. நீ நிறைவேற்றுவதற்காக எடுத்துக்கொண்ட
முயற்சிகள் அழிந்து மண்ணுவதையும், காவலுக்காக எழுப்
பிக்கொண்ட சுவர்கள் உன் காலடியிலேயே இடிந்து விழுவ
தையும் மனக்கிலேசமில்லாமல் உன்னால் பார்க்கமுடியுமா?
முடியாவிட்டால் நீ பலனை உத்தேசித்து வேலைசெய்கிறாய்.
ஜீவகாருண்யத்திற்காகவென்றே வேலைசெய்கிறாயில்லை.

தீக்ஷாமார்க்கம்.

20. இஷ்ட வஸ்துக்களில் விருப்பமும் அநிஷ்ட வஸ்
துக்களில் வெறுப்பும் அடையாமலிருக்கக் கற்கவேண்டும்.
இரண்டையும் ஒரே ஈசுவரனுடைய தோற்றங்களாகப் பார்க்
கவேண்டும். அப்பொழுது இவைகள் அவனை சரியான
வழியில் நடத்திவைக்கும் போதனை காரிகளாகின்றன. அவ்
வனைக் கட்டுப்படுத்தும் விலங்குகளாகிறதில்லை. குழப்பத்தின்
மத்தியில் சாந்த ரூபமான ஈசுவரனிடத்தில் அவன் தங்கி
யிருக்கவேண்டும்.

கீதையின் முகவுரை.

21. சந்தோஷமாவது வருத்தமாவது வருங்கால்
அவன் அதை ஏற்றுக்கொள்ளுவான்; அதை அவன் உணா
ரத்தவராமாட்டான். உலகத்தில் சாதாரண மனிதன் உணர்வ
தைப்பார்க்கிலும் யதார்த்தத்தில் கிரம்பவும் அதிகமாய் உணர்
வான்; ஆனால் அதனதனுடைய யதார்த்த ஸ்தானத்தையும்
அதனதனுடைய உண்மையான யோக்கியதையையும் அறிந்து
பெரும் ஜீவவிகாஸ முறையில் அதற்கு யதார்த்தமாயுள்ள
மதிப்பைக் கொடுப்பான்.

வெளிப் பிராகாரம்.

22. இந்த வைராக்கியம் அதிகரிக்க அதிகரிக்க அவ
னுக்கு உணரும் சக்தி குறைந்துவிடுகிறதென்பதில்லை.
ஏனெனில் அந்தரங்க பகிரங்க உலகங்களில் நிகழும் ஒவ்
வொரு சுக துக்க அதிர்ச்சியையும் அதிக நுட்பமாக உணரு
கிறான். ஆனால் அவைகள் ஒன்றும் அவனை பாதிக்க
முடியாது.

வெளிப் பிராகாரம்.

23வ. மனோதைரியத்தைக் காட்டக்கூடிய அந்த உண்மையும் யதார்த்தமுமான வைராக்கியம் எவ்விதம் விருத்தியடையும்? முதலில் அதனுடைய வாஸ்தவமான அர்த்தத்தைப்பற்றி தினசரி சிந்திப்பதினாலும், அதைப் பூராவும் சரியாக அறிந்துகொள்ளும்வரை சொற்ப சொற்பமாய் அநுபவத்திற்குக் கொண்டுவருவதினாலும், பிறகு நீ உலகத்தாரோடு பழகுகையில் உனது தினசரி வாழ்நாளில் அநுஷ்டிப்பதினாலுமே. இந்த வைராக்கியம் உன்னைக் கடின ஹிருதயமுள்ளவனாகச் செய்துகொள்வதினால் சித்திக்காது. விகாரமடையாத மனச்சமாதானத்தை நழுவவிடாமல் வைத்துக்கொண்டு உலகத்தாருடைய சுகதுக்கங்களுடன் அநுதாபப்படக்கூடிய அநுகூல வாயிலாகச் செய்துகொள்வதினாலும் தான் ஆகும்.

வெளிப் பிராகாரம்.

24வ. ஜீவாத்மா தனக்கு நேரிடும் சுகதுக்கங்களால் பாதிக்கப்படமுடியாத திருடமான சித்த நிலைமையை அடைந்துகொண்டு வருவதை உணர்ந்தும், உலகத்தாருக்கு வரும் ஒவ்வொரு சுகதுக்க நிகழ்ச்சியுடன் அநுதாபம் அடையும் பொழுது தானும் மற்ற ஜீவாத்மாக்களும் வேறல்லவென்ற பாவம் விருத்தியாகியும், தனக்கும் அவர்களுக்கு மிருந்த விரோதபாவம் போய் ஒற்றுமை அதிகரித்தும், மற்ற ஜீவாத்மாக்களின் பிரக்ஞையும் தன் பிரக்ஞையும் ஒன்றென்று சதா உணரும்படியான பிரக்ஞா விசாலமடைந்தும், தான் எந்த பரமாத்மாவினுடைய ஒரு அம்சமோ அவருடன் ஏகத்வ பாவம் சதா விருத்தி அடைந்துகொண்டும் வருவதை அவன் உணருகிறான்.

வெளிப்பிராகாரம்.

25வ. பிருதக்பாவம் (வேற்றுமை உணர்ச்சி) நாளடைவில் குறைவுபடப்பட ஒவ்வொரு வஸ்துவிலும் அந்தராத்மாவாக விருக்கிற ஈசுவரனிடத்திலிருக்கும் ஆனந்தம் ஒருவனுக்கு உண்டாகிறது. சாதாரண மனிதனுக்கு எது வருத்தமாக இருக்கிறதோ அதுவுங்கூட சிஷ்யனுக்கு வருத்தமென்ற தன்மையை இழந்துவிடுகிறது.

வெளிப் பிராகாரம்.



26வ. கர்மபலத்தில் சுயப் பற்றைக் கொள்ளாதே; உன் வாழ்க்கையில் நீ இருக்கும் நிலைமையில் உனக்கு ஏற்பட்ட தினசரிக் கடமையைச் செய். ஏககாலத்தில் பிரபுவாகவும், தர்ம ஸ்வரூபமாகவும் இருக்கிற ஈசுவரன் ஆனந்தத்தையும், அமைதியையும் முடிவாக உடைய அந்த மகத்தான விகாஸ முறையை நடத்தும் கர்த்தாவாக இருக்கிறார் என்று கண்டுகொள்.

கீதையின் முகவுரை.

27வ. ஒவ்வொரு நிமிஷத்திலும் ஆசையைத் தடுப்பதால் நம்மைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்களின் விஷயத்தில் நாம் வைராக்கியத்தை அடைகிறோம்.

யோக பீடிகை.

28வ. இவ்விதமாக மனிதனுடைய செய்கைகள் எல்லாம் யக்ஞத்தின் தன்மையை அடைந்து அவைகளால் கிடைக்கும் பலனை உத்தேசிக்காமல் ஈசுவர ஆக்ஞா சக்ரத்தை சுற்றுவதற்காக அர்பணஞ் செய்யப்படுகின்றன; செய்கை கடமையாகச் செய்யப்படுகிறது. அச்செய்கையின் பலன் மனிதர்களுக்கு உதவி செய்வதற்காக சந்தோஷமாய் கொடுக்கப்படுகிறது. அவனுக்கு அதன் விஷயத்தில் விசாரமில்லை. அது ஈசுவர ஆக்ஞையைச் சேர்ந்த பலனைப் பகுந்து கொடுக்கும் வேலையை அந்த ஆக்ஞைக்கே விட்டுவிடுகிறான்.

கர்மா.

29வ. ஒவ்வொரு காரணமும் அதன் காரியத்துடனும், ஒவ்வொரு செய்கையும் அதன் பலனுடனும் கட்டுப்பட்டிருக்கிறது. அவைகளைச் சேர்க்கும் கயிறும் அவைகளுக்குள் ஊடுருவிச் செல்லும் நூலும் ஆசையே. இதைத் தகித்துவிடக்கூடுமானால் அவைகளுக்குள்ள சம்பந்தம் நீங்கிவிடும். ஹிருதயத்தின் கட்டுகளெல்லாம் அறுபட்டவுடன் ஆத்மா முக்தனாகிறான்.

கர்மா.

30வ. அவன் (சீடன்) தன்னைச் சுற்றிலுமுள்ளவர்கள் எல்லோரையும் தன் அம்சமாகப் பார்த்தும், அவர்கள்

சந்தோஷத்தையும் வியஸனத்தையும் தான் உணர்ந்தும், அவர்கள் எவ்விதமாய் விஷயங்களை பார்ப்பார்களோ அவ்விதம் தான் பார்த்தும், அவர்களின் உணர்ச்சிகளை அறிந்தும், அவர்களுடன் அநுதாபப்பட சக்தி உடையவனாகவும், ஒருவரைக்குறித்தும் குணதோஷ ஆராய்ச்சி செய்யாமலும், ஒருவரையும் பழிக்காமலும் இருக்கவேண்டும். அவர்கள் எல்லாம் தான் தான்; தன்னுடைய சொந்த உயிரின் பாகமென்று உணர்ந்து பேத க்ஞானம் முற்றிலும் போகவேண்டும்.

தீக்ஷாமார்க்கம்.

31வ எவ்விதமான வேலையிலும் நாம் பற்றுதல் உடையவர்களாக இருக்கக் கூடாது. எப்பொழுதும் வேலை செய்ய வேண்டும். ஆனால் ஆத்மாவானது கவலையற்று இருப்பதுடன் குருநாதனுடைய அற்பத் தொனியையும் கவனித்து நடக்க ஜாக்கிரதையுட னிருக்கவேண்டும். அனாதையான ஒருவனுக்கு நம் மூலமாய் உதவி செய்ய நம்முடைய கைங்கரியம் அவருக்கு அவசியமாகும்.

ஹிருதயத்தின் உபதேச முகவுரை.

---

## ஜூன் மாதம்.

## சமம் அல்லது மனதை அடக்கி ஆளுதல்

1வ மனிதன் தன் மனோ வியாபாரத்தால் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தாருக்கு நன்மையோ அல்லது தீமையோ விளைவிக்கக் கூடுமாகையால், உலகத்தாருக்கும் தனக்கும் உள்ள சம்பந்தத்தையும், தன் மனோ வியாபாரத்தினால் உண்டாகும் பலனையும் நன்றாய் அறிந்து, அம்மனோவியாபாரத்தை ஒழுங்கான வழியில் செல்லும்படி ஏற்படுத்திக்கொள்வது தான் சமம் அல்லது மனதை அடக்கி ஆளுதல் எனப்படும்.

சிஷ்யமார்க்கம்.

2வ இவ்விதம் படிப்படியாய் மனதை அடக்கவும், தியானிக்கவும், நற்குணங்களை சம்பாதிக்கவும் கற்றுக்கொண்



டால், குருவானவர் சிஷ்யனுக்கு பிரஸன்னராக சாத்திய மாகும்படி செய்யும் முப்பான்மையான வார்த்தையை (மும் மாத்திரை அடங்கிய பிரணவத்தை) நீ சொன்னதாக ஏற் படும்.

சிஷ்யமார்க்கம்.

3வ மனதை அடக்கப் பழகும் ஜனங்கள் எல்லோரும் மனதில் பிரவேசிக்கும் எண்ணங்கள் விஷயத்தில் இடை விடாது கவனித்துவந்து தகாத எண்ணங்களை விலக்கி நல்ல எண்ணங்களை மாத்திரம் ஸதா தெரிந்தெடுக்கப் பழகவேணும்.

மனோசக்தி.

4வ இச்சைப்படி நினைக்கவும் நினைப்பை நிறுத்தவும் கற்றுக்கொள்வதினால் அதிக மன வலிமையை அடையலாம். நாம் நினைக்கையில் நம்முடைய மனசு பூராவையும் நம்மால் இயன்ற அளவு செலுத்தவேண்டும். ஆனால் நினைக்கும் காரியம் முடிந்தவுடன் நினைவைப் பூராவும் நிறுத்திவிடவேண் டும். ஒரு பாரையைப்போய் மோதும் படகைப்போல் மன தைத் தொட்டும் அதைவிட்டு நீங்கியும் ஸ்திரமன்னியில் அலையும்படி அந்நினைவை விடக்கூடாது.

மனோசக்தி.

5வ நம்முடைய மனதை ஒன்றிலிருந்து மற்றொன் றுக்கு திடீரென்று ஓடும்படி செய்யாமலும் அனேக அற்ப மான எண்ணங்களில் முயற்சியை சிதறவிடாமலும் நாம் உறு தியுடனும் தொடர்ச்சியாகவும் நினைக்க நம்மைப் பழக்கிக் கொள்ளவேண்டும்.

மனிதனும் அவன் சரீரங்களும்.

6வ சாதாரண மனிதன் தன் மனதின் வெளியிலி ருந்து வரும் எண்ணத்திற்கு யாதொரு உதவியும் செய்கிற தில்லை. அவன் அதை ஏற்றுக்கொண்டு தங்க இடங் கொடுக்கிறான். பிறகு அது வெளியே தானே ஓடிப்போய் விடுகிறது. ஆனால் (சிஷ்ய மார்க்கத்திலுள்ள) நாம் அவ்விதம் செய்யாமல் புத்தி பூர்வமாய் நினைத்து தீர்மானித்த காரி

யத்தை நிறைவேற்ற வேண்டுமென்கிற உறுதியுடன் நினைக்க வேண்டும்.

சிஷ்யமார்க்கம்.

7வ. நன்மையானதும் உபகாரமுள்ளதுமான எண்ணங்களை உன் மனதில் நீ வரவேற்றுக்கொள்வதினாலும் கெட்ட எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் தடுப்பதினாலும் உன்மனதில் நல்ல எண்ணங்கள் வெளியிலிருந்து மேம்மேலும் வந்து சேருவதையும் கெட்ட எண்ணங்கள் வருவது வரவரக் குறைவதையும் நீ பார்ப்பாய்.

மனிதனும் அவன் சரீரங்களும்.

8வ. எண்ணத்தினால் ஒரு மனிதன் கொல்லலாம்; எண்ணத்தினால் ஒரு மனிதன் சௌக்கியப்படுத்தக்கூடும்; ஒரு எண்ணத்தினால் மனிதன் ஒரு கூட்டத்தை தன இஷ்டப்படி நடக்கும்படி செய்யலாம்; மற்ற மனிதர்களை வஞ்சித்து அவர்கள் தப்பானவழியில் நடக்கும்படி செய்யக் கூடிய ஒரு மாயாத்தோற்றத்தை எண்ணத்தினால் ஒரு மனிதன் உண்டாக்கலாம். இவ்விதமான அதிக விசேஷ சக்திகள் தன்னைவந்து அடையுமுன் (சிஷ்யன்) தன்னுடைய எண்ணங்களை அடக்கி ஆளவும், எண்ணங்களில் கெடுதலானவைகளை தடுக்கவும் கற்றுக்கொள்வது அவசியம்.

சிஷ்யமார்க்கம்.

9வ. ஒரு மனிதனுடைய நடவடிக்கை (வெளிப்பார்வைக்கு) சரியாக இருப்பதினாலேயே அவன் மனதின் எண்ணங்களும் சரியாக இருக்குமென்று சொல்லமுடியாது. ஆனால் சரியான எண்ணங்களினால் சரியான நடவடிக்கை ஏற்படும். உன் எண்ணங்கள் தான் முக்கியமானது. நீ தப்பிதமாய் நினைத்தால் நீ தவருதலாய் நடப்பாய்; நீ இழிவாய் நினைத்தால் உன்னுடைய நடத்தை அதற்குத் தகுந்தபடி தானிருக்கும்.

உபநிஷத்தின் ஞானம்.

10வ. உன்னுடைய சித்தம் சஞ்சலிக்கும் பொழுதெல்லாம் நீ செய்யவேண்டியது யாது? நீ எந்த லக்ஷியத்தில்



மனதை நிறுத்தவேண்டுமென்று இச்சிக்கிறாயோ அந்த லக்ஷியத்திற்கு அதைத் திருப்பித் திருப்பிக் கொண்டுவா. நீ எந்த விஷயத்தைப்பற்றி நினைக்கத் தொடங்குகிறாயோ அதைப்பற்றியே தொடர்ச்சியாகவும் வேறொன்றிற்கும் இடம் கொடுக்காமலும் நினைக்கக்கடவாய்.

சிஷ்யமார்க்கம்.

11வ. உங்களில் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏதாவதொன்று உங்களை வருத்தப்படுத்திக்கொண்டிருக்கக் கூடும். அந்த வருத்தத்தை பொருட்படுத்தாமல் எதிர்ப்பதாக நினை. அது வரும்பொழுது நீ எவ்விதம் நினைத்துக் கொண்டிருக்கிறாயோ அவ்விதமே இருப்பாய்.

யோகபீடிகை.

12வ. ஆலயத்தில் ஈசுவரனை ஆராதிக்கும் பொழுது மனது பகவானிடத்தில் ஏகாக்ர நிலையை அடைந்திருக்க உங்கள் சரீரங்கள் மாத்திரம் வணங்கி புஷ்பார்ச்சனை செய்வதுபோல லோகோபகாரமாக நிஷ்காமகர்மம் செய்து வரும் பொழுது உங்கள் சரீரங்களும் மனதுகளும் அக்கர்மத்தில் ஈடுபட்டிருக்க ஜீவாத்மாக்களாகிய நீங்கள் பரமாத்மாவின் த்யான ஆராதனைகளில் நிலைத்திருக்கவேண்டும்.

சிஷ்யமார்க்கம்.

13வ. மனக்கவலையால் வருத்தப்படும் ஒரு மனிதன் தினம்தோறும் காலையில் எழுந்திருந்தவுடன் அடியில் வருவதுபோன்ற ஏதாமொரு உயர்வானவும் தைரியத்தைக் கொடுக்கக்கூடியதுமான எண்ணத்தை மூன்று நான்கு நிமிஷம் சிந்திக்கட்டும். "ஆத்மா சாந்தமுள்ளது; அந்த ஆத்மா நான்தான். ஆத்மா பலமுள்ளது. அந்த ஆத்மா நான்தான்." "பாரமார்த்திக நிலையில் நானும் பரமபிதா (பரமாத்மா) வும் ஒன்றே. அந்நிலையில் எனக்கு மரணம் என்பதே இல்லை. நான் மாறுதலற்றவன். நான் பயமற்றவன். நான் முக்தன்.

நான் சாந்தன். நான் பலமுள்ளவன்." இவ்விதமாய் அவன் சிந்திக்கையில் சாந்தி அவனை சுற்றிக்கொள்ள அச்சாந்தியை தன்னுடையதாகவே உணர்வான்.

மனோசக்தி.

14. ஓரே விஷயத்தில் மனதை ஸ்திரமாக நிறுத்தும் சக்தியை அடைவதற்கும், அந்த விஷயத்தின் ஸாராம்சத்தை முழுவதையும் கிரஹிக்கிறதற்கும், நற்குணங்களை சம்பாதிப்பதில் அம்மனதை ஒரு கருவியாக உபயோகப்படுத்துகிறதற்கும் சமம் (மனதை அடக்கி ஆளுதல்) வேண்டும்.

தீக்ஷாமார்க்கம்.

15. ஒரு காரியம் தப்பென்று மனதிற்குத்தெரிந்து பிறகு அதையே செய்வதற்கு மன்னிப்பேகிடையாது. சென்ற காலத்து மனோ வியாபாரத்தினால் ஏற்பட்டு தற்காலத்தில் மனத்தின் வசமில்லாமல் செய்யப்படுகிற காரியங்கள் தான் தடுக்கமுடியாதவைகள்.

தர்மம்.

16. உன்னுடைய ஜாக்ராவஸ்தை (விழிப்பு நேரம்) யில் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் ஏகாக்ர சித்தத்தை அனுஷ்டிக்கவேண்டும். நீ யோசிக்கும் விஷயத்திலிருந்து உன் மனதை அலையவிடாதே. எந்த விஷயமானாலும் சரி; மனதின் நிலைமைதான் முக்கியம்; அது நினைக்கும் விஷயம் முக்கியமல்ல. ஏகாக்ர சித்தத்தை சம்பாதிப்பதற்கு இது தான் வழி.

யோகபீடிகை.

17. தப்பிதமான எண்ணங்களால் ஏற்பட்ட விலங்குகளை உடைப்பதற்கு சரியான எண்ணந்தான் வழி. நம்மை சரீரந்தான் என்று நினைத்துக்கொண்டிருக்கிறவரையில் நாம் சரீரத்தால் கட்டுப்படுவோம்; நாம் மனதென்று நினைத்துக் கொண்டிருக்கிறவரையில் மனதால் கட்டுப்படுவோம். நாம் தாழ்மையாக நினைத்துக்கொண்டிருக்கிறவரையில் நாம் தாழ்-



மையிலேயே இருப்போம். அவ்விதமே நாம் ஆத்மாவாக நினைத்தால் ஆத்மாவாக ஆவோம்.

உபநிஷத்தின் ஞானம்.

18. ஸகுணோபாஸனை (புருஷாகாரமான ஒரு மூர்த்தியினிடத்தில் பக்தியை செலுத்துவது) யால் கலவரப்படாத சித்தவிருத்தியை உடைய ஒருவன் சத்தியம், தயை, பொறுமை முதலான சத்குணங்களில் யாதாமொரு குணத்தை எடுத்துக்கொண்டு தியானிப்பதினால் ஏகாக்ர சித்தத்தை அடையலாம்.

மனோசக்தி.

19. மனதை உறுதியுடன் ஒரே நிலைமையில் நிற்கும்படி செய்யும் ஏகாக்ர சித்தமானது மூளையின் சிறு அணுக்களை வளரும்படி செய்துவரும் காலத்தில் உயர்வான படி நினைக்கத்தகுதியான ஒரு கருவியை உண்டுபண்ணுகிறது.

தற்கால பிரகிருதி சாஸ்திரமும் ஆத்மதத்துவமும்.

20. உயர்வான எண்ணம், உத்ஸாககரமான வார்த்தை, கண்ணியமான வாழ்க்கைக்கு ஹேதுகரமான ஸ்மரணை இவைகளில் யாதாமொன்றை இடைவிடாமல் சிந்திப்பது ஒரு நல்ல உபாயம். ஒவ்வொரு நாளும் மனதைப் பலவிதமாகக் கலவரப்படுத்தக்கூடிய தினசரி வாழ்க்கையில் செல்லுமுன் நம்முடைய நல்ல சிந்தை ஆகிய இந்த கவசத்தால் மனதை காக்கவேண்டும்.

மனோசக்தி.

21. எவ்விதம் ஒரு மனிதன் சுத்தத்தை சம்பாதித்துக் கொள்ளலாமென்றால், காலையில் த்யானம் செய்யும் பொழுது அந்த தியானத்தில் சுத்தத்தை ஒருபாகமாக எடுத்துக்கொண்டு அதன் எதார்த்த அர்த்தம் இன்னதென்பதைத் தெரிந்துகொள்வதனால்தான். ஆனால் அப்பொழுது அசுத்தமான எண்ணம் அவன் மனதில் தோற்றக்கூடாது; அசுத்தமான செய்கையும் அவனைக் களங்கப்படுத்தக்கூடாது.

சிஷ்யமார்க்கம்.

22வ உன்னுடைய மனதில் உள்ள எண்ணங்களை கவனிக்க ஆரம்பி. மனதில் அவைகள் வந்தகாலத்தில் உள்ள நிலைமைக்கும் அவைகள் மனதை விட்டு வெளியேறுகையில் உள்ள ஸ்திதிக்கும் என்ன வித்தியாசம் ஏற்பட்டதென்பதையும்பார். உன்னிடத்தில் அவைகள் தங்கியிருக்கையில் அவைகளுக்கு எதை சேர்த்தாய் என்பதைப் பார்.

மனிதனும் அவன் சரீரங்களும்.

23வ நம்முடைய மானஸீக சரீரத்தை அமைக்கும் சாமான்கள் நம்முடைய எண்ணங்களேயாம். நம்முடைய மனதின் சக்திகளை நாம் பழக்குவதாலும் ரமணீயத்தை உணரும்படியான சாமர்த்தியத்தையும் பிரேமை, பக்தி முதலான உயர்வான குணங்களையும் அபிவிருத்தி செய்வதாலும் நம்முடைய வாழ்க்கையில் இடைவிடாது நம்முடைய மனோ சரீரத்தை நாம் அமைத்துக்கொண்டு வருகிறோம்.

மனிதனும் அவன் சரீரங்களும்.

24வ நீ தற்காலம் செய்யும் வேலையில் உன் மனதை அதிலிருந்து நழுவாமல் நிறுத்து. அந்த வேலை முடிந்தவுடன் அதை விட்டுவிடு. சில மாதங்கள் இவ்விதமாய் இடைவிடாது பழகு. மனதை ஒருமைப்படுத்துவது எவ்வளவு சுளுவு என்பதை நீ உணரும்பொழுது உனக்கே ஆச்சரியமாக யிருக்கும்.

யோகபீடிகை.

25வ மனதை ஒரு எண்ணத்திலிருந்து மற்றொரு எண்ணத்துக்கு மாற்றும்வழி பலவிதமாய் உதவும்படி உபயோகிக்கப்படலாம். ஒரு மனிதனைப்பற்றி பட்சமற்ற எண்ணம் மனதில் வருமானால் அதைத்தள்ளி அந்த இடத்தில் அந்த மனிதனிடமுள்ள யாதாமொரு நற்குணம் அல்லது அவன் ஏதாவது நன்மை செய்திருந்தால் அந்தச் செய்கை இவைகள் விஷயமான எண்ணத்தைக்கொண்டுவந்து வைக்கவேண்டும்.

மனோசக்தி.



26வ நம்மனதைப்பற்றி மற்றவர்கள் கொள்ளும் எண்ணத்தை நாம் தவிர்க்கமுடியாது. நாம் அங்கீகரிக்கக்கூடியது எதுவோ அதையும், தள்ளக்கூடியது எதுவோ அதையும், நாம் தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். நாம் மற்றவர்களை பாதிக்கவும், மற்றவர்களால் பாதிக்கப்படவும் கூடும். ஆனால் மற்றவர்களை நாம் பாதிப்பதில் அது அவர்களுக்கு நன்மை செய்யலாம். தீமையையும் செய்யும். நாமும் நன்மைதீமையால் பாதிக்கப்படுவோம்.

மனோசக்தி.

27வ நீ அபேட்சிக்கும் குணங்கள் உன்னிடம் இருப்பதாகவும், நீ விரும்பாதவைகள் உன்னிடம் இல்லாதுபோலவும் உன் மானஸீக சரீரத்தில் பாவிப்பாயானால் அதை அடைந்தும் அடையாமலுமுள்ள பாதிவழியிலிருப்பாய்.

யோகபீடிகை.

28வ நன்மையும் உபயோகமுமுள்ள எண்ணங்களால் உன் மனதை நிரப்புவதின் பிரயோஜனம், உன்னைச்சுற்றிலும் அவைபோலுள்ள மற்ற எண்ணங்களுக்கு ஒரு காந்தம் போன்று வேலைசெய்யும். கெட்ட எண்ணங்களுக்கு சற்றும் இடங்கொடுக்காமற்போனால் உன்னை அணுகும் அவைகள் மனதின் ஸ்வ சக்தியின்படிக்கு தன்படியே விலகிப்போம்.

மனிதனும் அவன் சரீரங்களும்.

29வ தன்னுடைய நினைப்பால் மற்ற மனிதவாழ்வை உயர்த்தவும், தாழ்த்தவும், ஜன சமூக விருத்திக்கும் ஹானிக்கும், ஆதாரமான ஒரு சக்தி உன்னிடத்தில் உளது என்றாகும், தெரிந்துகொள்வதினால் ஜனசமூக அபிவிருத்திக்கும், அவன் வசிக்கும் உலகில்வசிக்கும் விகாசமுறையிலுமுள்ள சகலஜீவ ராசிகளுக்கும் ஒரு பரோபகாரியாவான்.

திவ்ய மார்க்கம்.

30வ. நம்மனதில் பலமானதாகவும், நல்ல பிராணசக்தி யுள்ளதாகவும், சுறுசுறுப்புள்ளதாகவுமுள்ள உயர்வான எண் ணங்கள் உதிக்கவிரும்பும் பட்சத்தில், ஒழுங்கான எண்ணத் தைக்கொள்வதில் நாம் உறுதியாய் வேலை செய்யவேண்டும். ஏனென்றால் மனதை ஒழுங்கு படுத்திக்கொள்பவரும் சீர் படுத்திக்கொள்பவரும் நாமே.

உபநிஷத்து ஞானம்.

---

## ஜுலை மாதம்.

## தமம் (நடத்தையை அடக்கி ஆளுதல்).

1வ. இவ்வாறு தன் குணங்களை விர்த்திசெய்துகொள் கையில், தன் பேச்சுகளை காக்கக் கற்றுக்கொள்ளுகிறான். சரியாய்ப் பேசுவது என்றால், பேசுவது எல்லாம் யாதொரு கலப்புமில்லாமல் முற்றிலும் உண்மையாகவே இருக்கவேண் டும். உலகத்தார் சாதாரணமாய் உண்மையென்று நினைக்கிற படியல்ல. ஆனால் அதுவும் வேண்டியதுதான். குப்த வித் யா மார்க்கத்தில் செல்லும் சிஷ்யனுக்கு யாதொரு கலப்பு மில்லாத சுத்த உண்மையே மற்ற எக்குணங்களைக்காட்டிலும் அவசியமானது. உலகப்பொருள்களைக் கவனித்து ஆராய் தல், ஞாபகக்குறிப்பு எழுதிவைத்தல், நினைத்தல், பேசுதல், நடந்து கொள்ளுதல் முதலிய ஒவ்வொன்றிலும் பூர்ணமான உண்மை இருக்கவேண்டும்.

வெளிப்பிராகாரம்.

2வ. முதலில் பேச்சு உண்மையானதாகவும், பிற்பாடு மிருதுவானதாகவும் இருக்கவேண்டும். உண்மையும் மிரு துத்வமும் ஒன்றுக்கொன்று விரோதமல்ல. மிருதுவாயும், மரியாதையாயும், பட்சமாயும் பேசுவதால் உண்மைக்கு யாதொரு குறைவும் ஏற்படாது.

வெளிப்பிராகாரம்.



18065? சென்னை-600 008.

3வ. நடவடிக்கைக்குக் காரணங்களான எண்ணமும் மன மும் சுத்தமாக இருந்தால் அவைகளின் காரியமாகிய நடத் தையும் சரியாகவே இருக்கும்.

வெளிப்பிராகாரம்.

4வ. நீ செய்யவேண்டிய காரியங்களில் அனேகம் அற் பமானவைகளாயிருந்தாலும் பாதகமில்லை. சிஷ்யத்தன்மை யை அடைவது, நீ செய்யும் காரியம் பெரிது சிறிது என்கிற விஷயத்தைப் பொறுத்ததல்ல. ஆனால் நீ அந்த காரியத்தை செய்யும் மாதிரியையும், அதில் நீ செலுத்தும் ஊக்கத்தையும், அதை நிறைவேற்றுவதில் நீ உபயோகிக்கும் சக்திகளையும், அதிலிருந்து நீ அடையும் பழக்கத்தையும் பொருத்து இருக் கிறது.

வெளிப்பிராகாரம்.

5வ. உன் வாழ்நாளில் உன்னை பழக்கிக்கொள்வதற் காக ஏற்படுத்திக்கொள்ளும் முறைகள் உன்னைச்சுற்றியுள்ள எவருக்கும் யாதொருவிதமான இடையூறும் விளைவிக்கக் கூடாதனவாய் இருக்கவேண்டும்.

வெளிப்பிராகாரம்.

A:26 N28

6வ. மனிதன் இந்திரிய நிக்கிரகம் செய்ததுபோலவே புத்தியை உபயோகப்படுத்தி சாந்தியைப்பெரும்படி மனோ நிக்கிரகம் செய்யட்டும். அப்பொழுது சாந்தி அடைந்த மனதினால் ஆத்ம தர்சனம் செய்ய ஆரம்பிப்பான்.

இம்மை மறுமை வாழ்க்கை.

7வ. சிஷ்யன் தன் சரீரத்தை தன்னுடையதாக பாவிக் காமல் உலகத்தாருக்கு உதவிசெய்வதற்காக ஈசுவரனால் உப யோகப்படுத்தப்படும் கருவியாக எண்ணுகிறான். தன் பக் திக்கு இடமாகிய ஈசுவரனால் தனக்குக்கொடுக்கப்பட்ட கட மையென்று நினைத்து தன்னுடைய கார்யங்களை செய்கிறான். அவன் சாப்பிடுவது நாக்கை திருப்தி செய்வதற்காக அல்ல. ஆனால் ஈசுவரனுடைய கருவியாகிய சரீரத்தை வேலை செய்வ

திற்கு தகுந்தபடி வைத்துக்கொள்வதற்காக. அவன் சிந்திப்பது தன் மனச்சந்தோஷத்திற்காக அல்ல. ஆனால் ஈசுவரனுடைய வேலை சரியாய் நடைபெறுவதற்காக தான் நேசிக்கும் குருநாதன் பிரக்ஞையுடன் தன்னுடைய உயிரை ஒன்றாக்குகிறான். தன்னுடைய வாழ்க்கையாகிய ஆற்ப அருவியை குருநாதன் பிரக்ஞையாகிய பெரிய ஆற்றுடன் கலந்து, அத்துடன் ஒற்றுமையாய் சிந்திக்கிறான், வேலை செய்கிறான்.

பக்தியின் பிரயோஜனம்.

8. பலனை விரும்பாமல் யக்ஞமாக பாவித்துமட்டும் செய்கைகள் செய்யப்படும் பொழுது செய்கிறவனுக்கு யாதொரு கர்மபந்தமும் ஏற்படுகிறதில்லை. அவைகளினால் ஜனனமரண சக்கிரத்தில் அவன் கட்டப்படுகிறதும் இல்லை.

பக்தியின் பிரயோஜனம்.

9. மனோவாக்கு காயங்களை அடக்குவது உத்தமமான ஈசுவர சேவையிலும் குருநாதன் பாதங்களிலும் சிஷ்யனை சேர்ப்பிக்கும் திருடமான முப்பிறிக்கயறு.

வெளிப்பிராகாரம்.

10. சிஷ்யனுக்கு ஒரு வருத்தம் ஏற்படுவதாக வைத்துக்கொள்வோம்; ஒரு சிநேகிதன் இறந்து போகிறான்; அல்லது தானே ஒரு பெரும் குற்றத்தைச்செய்கிறான். ஆனால் என்ன? அவன் சென்றகாலத்தில் தோஷசிந்தனையை செய்திருக்கலாம். இப்பொழுது அதன் பலனை அவன் அனுபவிக்கிறான். ஆனால் உண்மையில் அவனுடைய சிநேகிதனை அவன் இழந்துவிடவில்லை. அவனை அன்புடன் மாத்திரம் ஸ்மரித்துக்கொண்டேயிருந்தால் தானுமிறந்தபின் அவனை மறுபடி காண்பான். அதுவரையில் தன் சிநேகிதன் உயிருடன் இருந்திருந்தால் அவனுக்கு என்ன கைங்கரியம் செய்திருப்பானோ அவ்வித கைங்கரியங்களை தன்னைச் சுற்றிலும் உள்ள மற்றவர்களுக்குச்செய்யலாம். அப்படிச்செய்வதனால்.



தன்னுடைய கடமைகளை அவன் இனி அசட்டை செய்யமாட்டான். இனிவரும் ஜன்மங்களில் அதேமாதிரி நஷ்டத்தை உண்டுபண்ணும்படியான விதையை விதைக்கவும் மாட்டான்.

கர்மா.

11. நம்முடைய கடமை அல்லாததை நாம் செய்வதினால், நம்முடைய அகந்தையினால் மற்றொருவனை அவன் கடமையை செய்யவொட்டாமல் தடுக்கிறோமேயொழிய வேறில்லை. இந்த வேலையை நம்மைத்தவிர வேறு ஒருவரும் செய்யமுடியாதென்று நாம் நினைப்பதால் நம்முடைய சக்தியை மீறி நடந்து நம்மையே கெடுத்துக்கொள்ளுகிறோம்.

சித்தவிருத்தி விஷயம்.

12. சத்தியப் பொருளாகிய ஆத்மாவை தரிசனம் செய்துவிட்டால் அசத்தியமாகிய பிரபஞ்சம் சாரமற்றதாகிவிடுகிறது. ஒரு நிமிஷமாவது நித்திய வஸ்துவை உணருவோமானால் அநித்திய விஷயத்தில் பிரயத்தனப்படுவது பிரயோஜனமே இல்லையென்று தோன்றும்

சிஷ்ய மார்க்கம்.

13. உன்னுடைய செய்கையைப் பார்க்கிலும் அதைத்
தூண்டும் உட்கருத்தை அதிகமாக நீ கவனிக்கவேண்டுமென்
பதைத் தெரிந்துகொள். உன்னுடைய செய்கைகளை கூடு
மானவரை விவேகத்துடன் செய். ஒரு காரியத்தைச் செய்
யுமுன் அது சரியானதாவென்று உன்னால் இயன்றளவு தீர்க்
காலோசனைசெய்து ஆராய்ச்சியுடன் நிதானித்துச் செய்.
ஆனால் விவேகத்துடன் ஆராய்ந்து அறிவதென்றால் சாதாரண
மாய் உலகத்தார் பார்ப்பது போல் வெளித் தோற்றத்தைப்
பார்த்து தீர்மானிபபதல்ல; மனிதனுடைய உட்கருத்தைச்
சோதித்து அறிவது தான்.

தீக்ஷா மார்க்கம்.

14வ சென்ற காலத்தில் மனதில் ஏற்பட்ட சித்த விருத்திகள் தற்காலத்தில் செய்கைகளாக ஏற்படுகின்றன. முக்கியமாய் கவனிக்கவேண்டியது அச்செய்கைகளைத் தூண்டிய உட்கருத்துகள் தான்

தீக்ஷா மார்க்கம்.

15வ ஒரு மனிதன் பலா அபேக்ஷை அன்றி கர்மத்தைச்செய்ய பழக்கிக்கொள்ள ஆரம்பிக்கவேண்டும். எவ்விதமான சுயநலத்தையும் கருதாமல் கடமையாக பாவித்து அவன் காரியத்தைச் செய்யத் தன்னை பழக்கிக்கொள்ளவேண்டும்.

சிஷ்ய மார்க்கம்.

16வ எண்ணம் சரியாகயிருந்தால் நடத்தை அவசியம் சுத்தமுள்ளதாகவே இருக்கும். எண்ணம் ஒழுங்குப்படுத்தப்பட்டால் நிச்சயமாய் நடத்தையை வசப்படுத்தவும் ஆளவும் கூடும்.

சிஷ்ய மார்க்கம்.

17வ இந்த ஜன்மத்தில் நம்மைச்சுற்றி யுள்ளவர்களிடத்தில் நாம் நடந்துகொள்ளுகிறதற்குத் தக்கபடி வரும் ஜன்மத்தில் பாஹ்ய சௌகரியங்கள் நமக்கு ஏற்படும். நம்மைச் சுற்றியுள்ள ஒவ்வொருவருடனும் நாம்எப்படிபழகுகிறோமோ அதற்குத்தக்கபடி அவர்களுடன் பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளுகிறோம். உபகாரத்தினால் ஸ்நேக பந்தமாகிய தங்க விலங்குகளும் அபகாரத்தினால் பகையாகிய இரும்பு விலங்குகளும் ஏற்படுகின்றன.

சிஷ்ய மார்க்கம்.

18வ ஒரு ஆற்றின் குருக்கே கட்டப்பட்ட அணை போல் உள்ளது வியாகூலம். சிஷ்யன் மூலமாய் குருநாதனுடைய சக்தி இரங்கி ஓடிவருவதற்கு தடைகளை உண்டாக்கக் கூடாது. சரியாகவும், பக்ஷமாகவும் அன்புடனும் நினைப்பதும் செய்வதுமாகிய சமம், தமம் என்ற குணங்கள் ஏற்பட வேண்டும்

தீக்ஷா மார்க்கம்.



19வ ஈசுவரனுடைய கருணையாகிய சமுத்திரத்தில் முழுகியிருக்கும் பிரபஞ்சத்திலுள்ள நாமும் நம்முடைய அல்ப சக்திக்கு இயன்றமட்டில் உலகத்தாருக்கு கருணையைக்காட்டுவோம். நீ உன் சகோதரனுக்கு உதவி செய்வதும் உன்னுடைய தேவைகளை கவனிக்காமல் அவனுடைய தேவைகளை கவனிப்பதும் ஒருக்காலும் தவரான காரியம் ஆகாது.

உயர்வாழ்வின் தர்மங்கள்.

20வ நாம் எல்லோருக்கும் எல்லா சமயத்திலும்இளகிய மனதுள்ளவர்களாகவும், பொருமையுள்ளவர்களாகவும், மிருதுஸ்வபாவமுள்ளவர்களாகவும், உபகாரமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும் மற்றவர்களுக்கு மனக்குழப்பம் உண்டாகும்படி நம்முடைய தினசரி நடத்தையில் நல்மனதுள்ளவர்களாயிருக்கக்கூடாது. ஏற்கனவே உலகத்தில் போதுமான துன்பமிருக்கிறது. ஆத்மஞானி உலகத்தாருக்கு ஆறுதலையும் சமாதானத்தையும் உண்டுபண்ணுகிறவனாயிருக்க வேண்டும். அவருடைய ஆத்மசக்தி செல்லும் வரம்புக்குள் வருகிறவர்களுக்கெல்லாம் அவர்கள் சரியாய் நடக்கும்பொருட்டு அவர் ஒரு தீபம்போல் இருக்கவேண்டும்.

உயர்வாழ்வின் தர்மங்கள்.

21வ நம்முடைய ஞானம் அதிகரிக்க அதிகரிக்க, நம்முடைய மனச்சாட்சி விருத்தியடைகிறது; நம்முடைய புத்திக்கு எட்டியமட்டில் நல்லதென்று தோன்றுகிறபடி நாம் நடந்துகொண்டால் நம்முடைய சிரவண மனன சக்திகளின் கூர்மையும் தெளிவும் அதிகரிக்கும்.

சன்மார்க்கத்தின் ஆதாரம்.

22வ முதலில் மனிதன் தான் செய்யும் வேலையை யக்ஞரூபமாகிய கடமையாகவும் அவனிருக்கும் உலகத்திற்கு தான் செலுத்தவேண்டிய கடனை திருப்பிக் கொடுப்பதாக-

அதாவது, பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் தான் அடைந்தவைகளை திருப்பிச்செலுத்துவதாகவும் செய்யக்கற்றுக்கொள்ளுகிறான்.

### சிஷ்ய மார்க்கம்.

23வ. சரியாக தீர்மானி; உன்னுடைய ஹிருதயத்தில் யாதொரு பயமும் பிரவேசிக்கவேண்டாம். நீ தவறலாம்; தப்பிதங்கள் செய்யலாம்; அடிக்கடி அபஜயமடையலாம். ஆனால் சீக்கிரத்தில் நீ கடமைகளை சரிவர செய்கிறவனாய் (நிஷ்காம கர்மம் செய்கிறவனாய்) ஆகி சாச்வதமான சாந்தியை பெறுவாய்.

### உயர்வாழ்வின் கர்மங்கள்.

24வ. ஒரு ஜீவன் விகாசமுறையில் மிகவும் தாழ்வான படியிலிருக்கையில் அநேக கார்யங்கள் அதற்கு சரியானதாயிருக்கும். ஏனெனில் அது அந்த ஜீவனை ஒரு படிமேல் கொண்டுபோகிறது. அந்தப்படி ஏறின பிற்பாடு அந்தச் செய்கையே தப்பிதமாகிறது. உயர்த்தும் சக்திகளெல்லாம் சரியானவைகள்; கீழ் இழுக்கும் சக்திகள் பிசகானவைகள்.

### வாழ்வின் சில விசாரங்கள்,
(ஆலோசித்து தீர்மானிக்கவேண்டியவைகள்)

25வ. தனக்கு ஏற்படும் நிகழ்ச்சிகளை (கஷ்டங்களை) மாற்ற பிடிவாதமாய் முயல்கிறதுமில்லை; கர்மபலன்களை அனுபவிக்கையில் அவைகளின் வேகத்தைத் தணிக்க புது காரணங்களை உண்டுபண்ணவும் முயல்கிறதில்லை. தான் கார்யங்களின் கர்த்தாவல்ல, ஒரு கருவியே; அவைகளுக்கு உத்பத்திஸ்தானமல்ல, அவைகள் ஓடிச்செல்வதற்கு ஏற்பட்ட ஒரு வாய்க்காலே; எஜமானனல்ல, வேலையாளே; என்று உணர்ந்து, ஈசுவர சங்கல்பம் இன்னதென்று கண்டுபிடித்து அதற்கிணங்க நடந்துகொள்ள முயல்கிறான்.

### குப்த கிரிஸ்துவ மதம்.



26வ. சிஷ்யன் தன் கடமைகளை செய்துவருகையில் யாதேனும் மனச்சஞ்சலம் அல்லது குழப்பம் ஏற்பட்டால் சாந்தஸ்வரூபியான ஈசுவரனிடத்தில் தன் மனதை நிலைநிறுத்தி அக்கடமைகளை முற்றிலும் செய்து முடிக்கவேண்டும். ஏனென்றால் அவன் கர்மபலனை எதிர்பார்க்கிறதில்லை அவன் கர்மத்தை கடமையாகவே செய்கிறவன்.

### கீதையின் முகவுரை.

27வ. என்னை நல்வழியிலோ தீய வழியிலோ நடத்தி சுவர்க்கத்திற்கோ நரகத்திற்கோ கொண்டு போய் சேர்த்தாலும் எனக்குள் இருக்கும் என் பரமகுருவான மனச்சாக்ஷியை நான் பின்பற்றுவேனென்றும் இன்று அது என்னை தவறுதலான வழியில் நடத்தினாலும் என்னுடைய பிசகின் பலானுபவத்தால் நாளையதினம் சரியான மார்க்கத்தை அறிந்துகொள்வேன் என்றும் நீ சொல்லிக்கொள்ள சக்தி அடையும் காலம் வரும்.

### பிர்ம்மஞானமும் வாழ்வின் ஆழ்ந்த விசாரங்களும்
(ஆராய்ச்சிகளும்.)

23வ. ஒரு காரியத்தை செய்யத்தொடங்குமுன் உன்னால் இயன்ற அளவு தீர்க்கமாய் ஆலோசனை செய். பிறகு அவ்வாறு செய்யத்துணிந்து அக்காரியத்தை செய். நீ செய்யக்கூடியதெல்லாம் செய்தாய்விட்டது. காரியபலன் எப்படி ஏற்படுகிறதென்று கவனித்துப்பார். அப்பொழுது நீ செய்த தீர்மானம் சரியா தப்பா என்று நீ கண்டுகொள்வாய். தப்பென்று தெரிந்தால் துக்கப்படாதே. ஏனென்றால் உன் தப்பினால் நீ ஒருபுதிய அனுபவத்தை கற்றுக்கொண்டாய். அவ்வனுபவம் இனிமேல் உனக்கு உதவியாயிருக்கும்.

### பிர்ம்மஞானமும் வாழ்வின் ஆழ்ந்த விசாரங்களும்.
(ஆராய்ச்சிகளும்.)

29வ. நீ யாதாமொரு வேலையைச்செய்யவேண்டி வரும் பொழுது முதலில் உன்புத்திக்கு எட்டியமட்டில் தீர்க்கமாய் ஆலோசித்துச்செய். உன் மனச்சார்பினால் ஏற்படக்கூடிய பக்ஷபாதத்திற்கு இடம்கொடாதே. சுயலாபம் சுயநஷ்டம் இவைகளை கவனியாமல் மார்க்கத்தில் செல்ல முயல்.

பிர்ம்மஞானமும் வாழ்வின் ஆழ்ந்த விசாரங்களும்,
(ஆராய்ச்சிகளும்).

30வ. குருவானவர் ஒருவனை சிஷ்யனாக அங்கீகரிக்கும் காலத்தில் அவன் செய்வதையெல்லாம் முற்றிலும் நன்றாய் செய்துமுடிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறதில்லை. அவன் பிரயத்தனம் செய்கிறானா என்றுமட்டும் பார்க்கிறாரே யொழிய பூர்த்தியாய் செய்துமுடிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறதில்லை. சிஷ்யன் சிரத்தையுள்ளவனாகவும், அவன் முயற்சி தொடர்ச்சியானதாகவும், அவன் மனம் மாறாததாகவும், லட்சியத்தைவிட்டு விலகாததாகவும் இருந்தால் போதும்.

சிஷ்ய மார்க்கம்.

31வ. பாட்டுக்கச்சேரியில் எல்லா வாத்தியங்களையும் ஒரே ஸ்வரத்தில் சுருதிப்படுத்த வேண்டியது போல் மேல் லோகத்திலிருந்து கீழ் லோகத்திற்கு ஆத்ம சக்தி தடைபடாது வந்துசேரும்படியாக உன்னுடைய பல சரீரங்களையும் அமைத்துக்கொள்ளவேண்டும்.

பிர்ம்ம ஞானமும் பிர்ம்மஞான சபையும்

---

## ஆகஸ்டு மாதம்.
## உபரதி (மதசமரசம்)

1வ. மிகவும் சாதாரணமானதும், மிகவும் அற்பமானதும், அதிகமாய் பாவியிருப்பதுமான ஒரு விஷயத்தை, அதாவது, சரீரவர்ணத்தால் ஏற்படுவதும் தேசஜாதி பேதத்தால் விளைகிறதுமான வெறுப்பை எடுத்துக்கொள்ளுவோம். கிரிஸ்துநாதர் கருப்பு மனிதனுடைய சரீரத்தில் அவதாரம்



செய்தால் அவரை பரமகுருவாக நீ ஒத்துக்கொள்ள சம்மதிப்பாயா? ஏன் என்பாயோ! நீங்கள் நூதனமாய் குடியேறின தேசங்களுக்கு அவர்போகமுடியாது; ஆஸ்திரேலியா, கனடா, தென்ஆப்பிரிகா இவைகளில் செல்லவொட்டாமல் தடுக்கப்படுவார். தங்கள் சொந்த ஜனங்களில் ஒருவராகிய கிரிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதபடி தடுத்த யூதர்களின் துவேஷபுத்தியைப் பார்க்கிலும் மேற்சொன்ன துவேஷ புத்தி ஆச்சரியமானதல்ல.

அடுத்துவரும் காலம்.

2வ. நம்முடைய கீழான (மனோவாக்காயங்களாகிய திருகாணங்களின்) ஸ்வபாவத்துடன் நம்முடைய சகோதரனுக்கு உதவிசெய்ய வேண்டியிருப்பதால், நம் சகோதரன் அவனுடைய பிரதிபந்தங்கள், விருப்பு வெறுப்புகள், விபரீத நோக்கங்கள் இவைகளுடன் விஷயங்களை எவ்விதம் பார்ப்பானோ அவ்விதமே நாமும் பார்த்து, உணர்ந்து, அனுதாபப்படுவதனால் தான் அவனுக்கு உண்மையில் உபயோகமாகும்படி நாம் உதவி புரிகிறவர்களாவோம்.

ஹிருதயதத்துவத்தின் முகவுரை.

3வ. மற்றவர்களின் மத ஆசாரங்களை நீ பரிசீலித்து அறியாவிட்டால் அவர்களுக்கு நீ உதவிசெய்ய முடியாதென்று குருநாதர் சொல்லுகிறார்.

சிஷ்ய மார்க்கம்

4வ. பிறருக்கு உதவி புரிவதற்காக நாம் அறிவை சம்பாதிக்கவேண்டியது நமது கடமை. உன் அபிப்பிராயத்தையே வற்புறுத்தாமல் பிறருடைய அபிப்பிராயங்களை அனுஸரித்து அனுதாபத்துடன்பேசுவதால் அவர்களுடைய ஹிருதயத்தை கவரலாம்.

சிஷ்ய மார்க்கம்.

5வ- மற்றொருவனுடைய நிலையிலிருந்து ஒரு காரியத்தைப்பார்த்து அவனுக்கு உதவி புரிவதற்காக அந்நிலையிலிருந்தே பேசுவதுதான் யதார்த்தமாய் உபரதி அடைந்தவனுக்கு அடையாளம்.

சிஷ்ய மார்க்கம்.

6வ- உன்னுடைய சொந்த லட்சியம் உயர்வாகவேயிருக்கவேண்டும். பிறர் குணதோஷங்களை ஆராய்வதில் அன்பை உபயோகிக்கவேண்டும். உன்னுடைய லட்சியங்கள் உன்னை உயர்த்தும். உன்னுடைய அன்பானது உன் கீழ்பட்ட சகோதரர்களை உயர்த்தும். ஏனெனில் ஒரு மனிதன் மிதிக்கப்படுவதால் ஒருக்காலும் உயர்த்தப்படுவதில்லை. மனிதன் அவன் பாபங்களுக்கும் தவருதல்களுக்கும் மத்தியில் நேசிக்கப்படுவதால் மட்டும் விருத்தியடைகிறான். நாம் நம்முடைய இளைய சகோதரர்களை நடத்துவதுபோலவேதான் (நம்முடைய மூத்த சகோதரர்களும்) நமக்கு மேல்படிகளில் இருப்பவர்களும் நம்மை நடத்துவார்கள்.

உபநிஷத்தின் ஞானம்.

7வ- மதவெறிகொண்டவனும், குறுகியமனதை உடையவனும், உதாரகுணமில்லாதவனும் நாம் தேடும் ஞானமார்க்கத்தில் பிரவேசிக்கமுடியாது.

தீக்ஷா மார்க்கம்.

8வ- ஈசுவரஸங்கல்பத்தை அனுசரித்து தான் நடக்கவேண்டிய மார்க்கம் இன்னதென்று தெரிந்துகொண்டு நடக்கிறவன் ஒவ்வொருவருடைய ஹிருதயத்திலும் ஈசுவரன் தானிருக்கிறானென்று உணருவதினால்தான் சரியானஉபரதியை அடைகிறான். இவ்வாறு உபரதி அடைந்தவன் யாரையும் இன்ன விதமாய்த்தான் ஒழுகவேண்டுமென்று நிர்பந்தப்படுத்தவாவது, அவர்கள் அபிப்பிராயப்படி நடப்பதற்கு எவ்விதமான இடையூறுகளும் செய்யவாவது விரும்பமாட்டான்.

தீக்ஷா மார்க்கம்.



9வ- உன்னுடைய அபிப்பிராயத்தில் நிலைகொண்டும், பிறர் அதைத்தெரிந்துகொள்ள அபேக்ஷித்தால் அவர்களுக்கு எடுத்துச்சொல்லவும்சம்மதமுடையவனாய்இருந்துகொண்டும், ஆனால் எப்பொழுதும் மற்றவர்களை கட்டாயப் படுத்தவாவது எதிர்க்கவாவது மனமில்லாமல் இருப்பதுதான் உபரதியென்று சொல்வது.

தீக்ஷா மார்க்கம்

10வ- ஒவ்வொருவனுக்கும் எது நன்மையோ அதை அவன் இருக்கும் இடத்திலேயே இருந்து செய்யும்படிக்கும், அவன்ஸ்வபாவம் எதை செய்யும்படி தூண்டுகிறதோ அதை செய்யும்படிக்கும் அவனுக்கு உதவிபுரியும் உபரதியை கற்றுக்கொள். அவன் நிலைமையிலேயே அவனை நிறுத்தி அவனுக்கு உதவிசெய்.

தர்மம்.

11வ- எவனிடத்திலிருந்தும் அவன் சக்திக்குமேல் எதையும் எதிர்பார்க்கக்கூடாது என்கிற விவேகத்துடன், எதுவும் பக்குவகாலம் வந்தால் அப்பொழுது பக்குவமாகும். அதுவரையிலும் பொறுத்துத்தான் அவசரப்படக்கூடாது. அதுவரையிலும் பொறுத்துத்தான் இருக்கவேண்டும் மிகவும் மேலான பொறுமைதான் உபரதி என்பப்படுவது.

சிஷ்ய மார்க்கம்.

12வ- உனக்கு உபகாரம் செய்கிறவர்கள் உன் அபிப்பிராயத்துடன் இணங்குகிறவர்களல்ல, ஆனால் உன் அபிப்பிராயத்திற்கு இணங்காதவர்களே என்பதை ஞாபகம் வைத்துக்கொள். உன்னைப்போல் நினைக்கிறவர்களால் உன் அபிப்பிராயங்கள் பலப்படுத்தப்பட்டாலும், நீ உன்னுடன் இணங்காதவர்களின் மத்தியில் இருந்து வருகையில் உன் மனதுக்கு இன்னும் நன்றாகவும் பூர்ணமாகவும் ஆலோசிக்கும் சக்தி ஏற்படுகிறது. அவர்கள் உன்னை தொந்திரவு செய்ய

முடியாத ஸ்திதியை நீ அடைகையிலும் அவர்கள் பேரில் கோபிக்கவேண்டும் என்ற எண்ணம் உன்னிடம் குறையும் பொழுதும் நீ அவர்களை சிரேஷ்டமான போதகர்களாக பார்ப்பாய்.

ஒரு உபந்யாஸம்.

13வ ஒவ்வொருவரிடமும் ஆத்மாவைப் பார்த்தும் அந்த ஆத்மாவின் சொந்த சம்ஸ்காரங்களையும் சக்திகளையும் விருத்தி செய்வதற்காக அந்த ஆத்மா அனுசரிக்கும் வழியை மாற்ற இஷ்டப்படாமலும் இருப்பதுதான் எதார்த்தமான உபரதி என்று நான் நினைக்கிறேன். ஒவ்வொரு ஆத்மாவுக்கும் விகாஸமுறையில் விருத்தி அடையத்தக்க வழி ஏற்பட்டிருக்கிறது. ஒருவனிடம் உனக்கு ஏற்படும் சம்பந்தமானது அந்த ஆத்மாவுக்கு உதவிசெய்யும் தன்மையதாக இருக்க வேண்டுமே ஒழிய, அவர்களை ஒருக்காலும் எவ்விதத்திலும் நிர்பந்திக்கக்கூடியதாக இருக்கக்கூடாது.

ஒரு உபந்யாஸம்.

14வ ஒவ்வொருவருடைய ஆத்மாவினிடத்திலும் கௌரவம் பாராட்டுவதுதான் உபரதி. நிவிருத்தி மார்க்கத்தில் எதார்த்தத்தில் அதிகமாக விருத்தி அடைந்தவர்களின் உயர்ந்த லட்சணங்களில் இது ஒன்று.

ஷை உபந்யாஸம்.

15வ திருஷ்டாந்தமாக உனக்கு அதிருஷ்டவசத்தால் ஒரு குருநாதருடைய சம்மந்தம் ஏற்பட்டால் அவரைச் சுற்றிலுமுள்ள விகாஸமுறையில் தேர்ச்சிக் குறைவானவர்களுடைய பிரதிபந்தங்களை எவ்வளவுதூரம் அவர் சகித்துக் கொள்ளுகிறாரென்று காண்பாய். வெளி உலகத்தை தான் எவ்விதம் மதிப்பாரோ அவ்விதமே பார்க்கும்படி மற்றவர்களை துரிதப்படுத்தவாவது, வற்புறுத்தவாவது, இனிய சொற்களால் அவர்கள் பார்வையை மாற்றவாவது இஷ்டப்பட



மாட்டார்; மற்றொருவனுடைய நிலைமையை உணர்ந்து அவன் நினைக்கும் வழிக்கு மரியாதையை காண்பிப்பார்.

1919-௵ அக்டோபர்௴ 15வ உபந்யாஸம்.

16வ கிலேசம், கவலை, பாபம் முதலிவையால் பீடிக்கப்பட்டு, தன் குடும்பத்திலும் சுற்றுப்பக்கத்திலுமிருந்து, நாடிவருவோர்க்கு அபயம்கூர்ந்து உதவிபுரிய, குப்தவித்தியார்த்தி ஸஜ்ஜனாயிருக்கவேண்டும். குரூபி, மந்தன், மூடன், த்யக்தனும்கூட இவன் ஒரு நண்பன் என்று உணரவேண்டும்.

ஹிருதய தத்துவத்தின் முகவுரை.

17வ நமது சங்கத்தினரனைவரும், ஸ்வஸ்வமதப்படி நடக்கவேண்டும். லோகோபகாரமாய் நாம் உழைக்கக் கோறினால், இன்னார் இன்னார் இன்ன இன்னவிதமான கொள்கையைத்தான் கொள்ளவேண்டுமென்ற நிர்ப்பந்த ஸம்பிரதாயத்தை வளர விடக்கூடாது. ஏனெனில், எவ்வளவு குற்றங்கள் நிறைந்தவனும் தன்னிலும் பெரியோர் காணாத தத்துவ உண்மையை அறிந்துள்ளவனாகவிருக்கலாம் என்பதை ஞாபகத்தில் வைப்பது நல்லது.

ப்ளா வட்ஸ்கியம்மை உபந்நியாஸம் லண்டன். 1921

18வ அதிக திதிட்சையும் கூடாது, அதற்கு இடம் கொடுத்தால் இஷ்டப்படி பேற்றி விடுவார்கள் என்பது சிலர் அபிப்பிராயம். அப்படியல்ல. தீரவிசாரித்தறிந்த தத்துவஞ்ஞர்கள், தமது கொள்கையிலுள்ள குற்றம் குறைகளை அறிவார்கள். ஆதலால், பிறர் விசாரணைக்கு பாதகம் ஒன்றும் செய்யலாகாது.

லண்டன் கன்வென்ஷன் உபந்நியாஸ முடிவு, 1921

19வ ஒரு உலகத்தை உண்டாக்க சகலவகைகளும் வேண்டும்; அதாவது நாமிருவரும் புத்தி பூர்வமாக ஒப்புக்

கொள்ளுகிறவைகளும் இல்லாமல் புத்தி பூர்வமாக இணங்குபவைகளும்கூட ஒவ்வொரு வகையான குணபாகங்களும் வேண்டும். ஆகையால்தான் இவ்விதமான விநோதமுறண்பாடுகள் அடைகிறோம். அவைகள் எல்லாம் ஈசுவர சைதன்னியத்தின் தோற்றங்கள். நவீன திட்டத்தை உருவமாக்குவதில் அவைகளுக்கு இடம் ஏற்பட்டுள்ளது.

காலமும் வேலையும்.

20வ. திதிக்ஷை (Tolerance) என்பது எல்லோரிடத்தும் ஈஸ்வரத்வம் இருப்பதாயும் அப்படிப்பட்ட ஈஸ்வர தத்துவத்தால்தான் அவனவன் மார்க்கத்தில் அவனவன் நடந்துகொள்ளுகிறானென்றும் அறிவதே ஒழிய ஈசுவரஸாயுஜ்யராஜமார்க்கம் இன்னதென்று நிர்ணயிக்க உன்னை கேட்டு ஆகவேண்டுமென்பதல்ல. தான் நினைப்பதும் செல்வதும், நடப்பதும், தனது அதீனமாயிருக்கவேண்டுமேயொழிய பிறரை கேட்டாவதில்லை. அவனவன் சரிதைமுழுதும் அவனவன் அந்தர்யாமியான ஈசுவர சங்கல்பத்தாலேயே அமர்ந்திருக்கின்றது.

கால-கர்மம்

21வ. குப்தவித்வான் ஒருவரையும் இகழலாகாது. அதி வர்ணாசிரமியாயினும் பிறரது வர்ணாசிரமங்களை இகழ்ந்து பேசலாகாது. வர்ணாஸ்ரமங்கள் பலவாயினும் ஞானம்ஒன்றுதான். ஆத்மஸாதகம் ஞானம் தேகா பாதங்கள் வர்ணாசிரமாதி தர்மங்கள்.

உபதேசம்

22வ. திதிக்ஷை பிறரது வெளித்தோற்றத்தை கவனியாது உட்கருத்தை யறிந்து அவனவன் முறைப்படி அவனவன் நடக்க இடங்கொடுப்பதே திதிக்ஷை. பாஷ்ய க்ஷுத்ர ஆசாரங்களைக்கவனியாது மனப்பான்மையை மாத்திரம் கவனிக்கவேண்டும்.

சிஷ்யமார்க்கம்



23வ. பலவகை மதங்களையும், ஆசாரங்களையும் ஐதிஹ்யங்களையும் சமமாய்ப்பாராட்டவேண்டும்.

சிஷ்யமார்க்கம்

24வ. ஈஸ்வரன் சர்வபிராணிகளிலும் அந்தர்யாமியாயிருந்து அவனவனை நடத்தி அவனை ஆதரிப்பதாய் எண்ணி பாபியினிடத்தும் பொறுமை பாராட்டவேண்டும். பொறுமைக்கு எதிரி ஒன்றுமல்ல.

தர்மம்

25வ. உனது சகோதரரின் மெய்க்கருத்தையுமறிய முயலவேண்டும். அவன் கருத்து விரஸமாகவாவது குற்றமாகவாவது தென்பட்டாலும், பாதகமில்லை. பொறுமையுடன் கவனித்து அவன் கருத்தையும் அறிந்துகொள். சில சமயங்களில் உனக்குத் தென்படாத சில தத்வங்கள் அவனுக்கு தென்பட்டிருக்கலாம். அதிகப்பொறுமையுள்ளவன் என்று என்னை சிலர் கூறுகிறார்கள். அதிதிதிக்ஷுவாய் ஒருவனும் இருக்கமுடியாது.

1921 லண்டன் கன்வென்ஷன் உபந்யாஸ முடிவுரை.

26வ. வேற்றுமைகளை விலக்கி ஒற்றுமையை நாடி ஸோதர்ய பாவத்தையும் நாட்டவேண்டும். நமது செய்கைகள் ஜனங்களை வேற்றுமைப்படுத்துகின்றனவா அல்லது ஒற்றுமைப்படுத்துகின்றனவா என்பதை கவனித்துச் செய்யவேண்டும். பரஸ்பரதோஷமின்றி பரஸ்பர அன்பை வளர்க்க இதுதான் முறை.

அத்யயனம் அநுஷ்டானம்

27வ. குற்றத்தை உபேக்ஷிக்கவும் வேண்டாம். குற்றத்தை குணமென்றாவது நன்மையை தீமையென்றாவது கூறவும் வேண்டாம். இப்படி கூறுவதைப்போல் பரம பாதக

யில்லை. இதனால் முன்னேற்றமே குன்றி விடுகின்றது. குற்றத்தை அறிந்துகொள். ஆனால் குற்றவாளி மீது கோபங் கொள்ளாதே. உனது ஆத்மாவும் அவனது ஆத்மாவும் ஒன்று தானே. பேதபுத்தி கொள்ளலாகாது.

மகான்கள்.

28௳ ஈஸ்வரன் ஏதோ ஒரு மதத்தை மாத்திரம் அதிலும் கனிஷ்ட மதத்தை அபிமானிக்கிறார் என்று கூறுவது, ஈஸ்வரனிடம் பக்ஷபாத பழி சாற்றுவது போலாகும். தமக்கு மாத்திரம் ஈஸ்வரன் அருள் புரிவார். ஸர்வலோக நாதன் பிதா மற்றவர்களைக் கவனியாது நரகத்துக் குள்ளாக்கி விடுகிறார் என்று கூறுவது ஈஸ்வர அபசாரமல்லவா?

நான்கு மஹா மதங்கள்.

29௳ இவ்வித ஒற்றுமை வந்தால் மதம்விட்டு மதம் மாறுவதும் போய்விடும். புறமதஸ்தரை தன் மதத்தில் சேர்க்க ஒருவனும் முயலமாட்டான். ஈசுவர ஸ்வரூபத்தைப் பற்றிப்புறமத அபிப்பிராயங்களையும் அறிந்துகொள்வான். ஒவ்வொரு மதமும் ஈசுவர கிரணங்களில் ஒன்று. பல கிரண மிச்ரத்தால் தான் சுத்த ஸ்வேத ஜோதி புலப்படும். பேத புத்தி யுள்ளவன் அவனவன் காணும் கிரணவர்ணமே ஈஸ்வர தேஜோ வர்ணமென நினைக்கிறான்.

நான்கு மஹா மதங்கள்.

30௳ சர்வமதங்களையும் அறிந்து சர்வமதாபிமானிகள் ஆத்யந்தமான மூல காரணத்தைச் சேர்வார்கள்.

31௳ தம்மைப்போலவே பிறரும் ஈஸ்வரனது அன்பும் அருளும் ப்ரவாஹிக்கத்தக்கவாஹினிகள் எனகருதவேண்டும். அந்நிலைமையில்தான் சாந்தாகாரமான அபேதபுத்திஉண்டாம். அந்நிலைமையில்தான் ஸாரூப்யத்திலும் சிறந்த ஸாயூஜ்யப்ராப்தி யுண்டாம்.

நான்கு மஹா மதங்கள்.



## செப்டம்பர்

### க்ஷமா

1௳ அந்தக் கர்ணம் முழுதும் சித்தம் ஸ்வாஸத்தையு மடைந்து சுகதுக்கம், லாப நஷ்டம் எனும்த்வந்த மற்று உத்திஷ்ய மார்க்கத்தில் செல்லவேண்டும். அந்நிலைமையில் தான் ஈஸ்வர ஸங்கல் பவசனுவாய்.

பரிணமலோகம்.

2௳ உனக்கு விஹிதமான ஸ்வல்ப ஆயுஷ் காலத்தில் உனது ஸஞ்சித கர்மங்கள் தானே க்ஷயிக்குமாறு பல துன்பங்கள் ஏற்படலாம். அத்துன்ப மத்தியில் க்ஷமையையும் அப்யஸிக்கவேண்டும்.

தீக்ஷா.

3௳ துன்பத்தைத் தண்டனை யெனக்கருதாது இன்ப மெனவே கருதவேண்டும். உனது தீனமானப்ரார்த்தனையைக் கேட்ட தர்ம தேவதைகள் மனமிரங்கி உனது பூர்வ துஷ்கர்மங்கள் கூடிய சீக்கிரம் க்ஷயிக்குமாறு அக்கர்ம பலன்களை உனக்கு அளிக்கிறார்கள்.

தீக்ஷா.

4௳ ஸந்தோஷமா யனுபவிக்கவேண்டும். துக்கமாவது அதிருப்தியாவது இருக்கலாகாது. அக்னிவசங்கதனை மகாத்மா ஒருவர் அவ்வக்னி பரலோகா ரோஹண ரதமென, சந்தோஷமாய்க் கூறினரென கேட்டிருக்கிறோமல்லவா?

தீக்ஷா.

5௳ விரஸமான துன்பங்கள் நேரிடுங்கால் அவை யெலாம் அன்புமயமான ஈசன் செயலெனவே கருதவேண்டும். அவைகளை பொறுமையுடன் அனுபவிப்பவர் அதி சீக்கிரம் முக்தி மார்க்கத்தைக் கடப்பார்கள்.

ஈசன்செயல்.

6. ஆருருக்ஷுக்களனைவரும் (aspirant to risan) ஆருடர் (the risan) ஆவார்கள். பக்தனைப் பக்தபராதீனன் கைவிடான். கஷ்டத்துக்குத் தக்கவாறு ஆத்ம சக்தியும் வளர்கின்றது. கஷ்டப்பட்டவர்தான், கடைசியில் சுகமடைவார்கள்.

அந்தராத்ம விக்னங்கள்.

7. துன்பத்தைப் பாபமெனக் கூறுவதுண்டு. துன்பம் இனிதல்ல. ஆனால் துன்பம் பாபமுமல்ல (சிலசமயங்களில்) துன்பம் சேர்ந்து விலகுவதுதான் உசிதம். அப்போதுதான் (பக்தவதை) சித்தசுத்தி ஏற்படும்.

துன்பத்தின் பயன்

8. கர்த்தவ்யம் இன்னதென்று தீர்மானித்த பிறகு அதைத்தவிர வேறொன்றும் செய்யாமலிருக்கத்தக்க திடச்சித்தம் வேண்டும். இதுதான் ஜ்ஞானானுசரிக்கத்தக்க நல்வழி குருகைங்கர்ய பரனாயிருப்பவன் முறை தவறலாகாது

குணபாவம்.

9. கோபதாபமன்னியில் வருவனவற்றை யெல்லாம் பொறுமையுடன் அனுபவிப்பதே அடுத்தபடியான மானவசாதனம்.

சிஷ்ய மார்க்கம்.

10. இச்சாதனத்தை அப்யசிப்பவன், நாளடைவில் என்ன நேரிடினும் எவரிடத்தும் எவ்வஸ்துவினிடத்தும் கோபம் கொள்ளான். காரணமென்ன? உண்மையை அறிந்தவர் உலககதியையும் அறிவாரல்லவா?

சிஷ்ய மார்க்கம்.

11. பிறர் தனக்கு என்ன செய்தாலும், அவர்கள் தன்னையறியாமல் ஜகத் (லோகநாதன்) தர்மவசப்பாய்ச் செல்கின்றார்கள் என்றும் தனக்கு நேர்வன யாவும், தனது பூர்வகர்மப் பயனெனவும் அறிந்துகொள்வான்,

சிஷ்ய மார்க்கம்.



12. (கார்ய காரணமுறையறிந்த) கர்மஜ்ஞர் கோபம் கொள்ளவே மாட்டார்கள். தனக்கு நேர்வனவெல்லாம் தன் முன்ஜென்ம வினைப்பயனெனவே அறிவார்களல்லவா?

சிஷ்ய மார்க்கம்.

13. பொறுமை என்பது ஒன்பதாவது ரத்தினம். எத்தகைய இடையூறுகளையும்போக்கி, தைசோராது முமுக்ஷுக்களைக்கடைத்தேற்றுவது பொறுமையே.

சிஷ்ய மார்க்கம்.

14. மௌனமாதம், மௌன நிலையில் நான் தனிக்கும் ராகத்வேஷாதிகளனைத்தையும் ஒழிக்கவேண்டும். அப்போதுதான் இந்திரியங்களும் மனமும் அடங்கி பரமாத்மசாக்ஷாத்காரமுண்டாம். ஏகாந்தமெனும் ஆகாயத்தில் தான் பரமாத்ம தேஜோமயமான சூரியன் பூரணமாய் பிரகாசிப்பான். பேதமெனும் விஷயபேதங்கள் ஒழிந்தபிறகு ஞானசூரியன் உதிப்பார். குட்டித்தேவதைகள் போனபிறகு தான் பரமேஸ்வரன் ப்ரஸன்னமாவார். பாஹ்ய தேவதை மறைந்தபிறகுதான் அந்தர்யாமி ஆவிர்ப்பவிப்பார்.

சிவ ஆதாரம்.

15. துன்பமே பரமதேசிகர். இம்மையில் யாம் அறியத்தக்கவைகளால் சிரத்தையாயும் துன்பத்தாலே யல்லாது இன்பத்தாலல்ல.

போத தீபிகை.

16. அஞ்ஞானத்தால் வருந்துவோரிடத்து யாம் இரக்கங்கொள்ள வேண்டும்; ஏனென்றால் அவ்வஞ்ஞானிகள் தமது துயரின் காரண காரியங்களை அறியாதவர். சற்று நமது அறிவும் மென்மேலும் அறிந்துகொண்டிருக்கும் நமது போன்றவர்மீது இரக்கப்படவேண்டியதொன்றுமில்லை. ஆத்மீயார முறைகளையும், ஜகத் அனுதன தர்மங்களையும் அறிந்த யாம் அறியாப்பவர்க்கு அறிவிக்கவேண்டும்.

காலம்—தர்மம்.

17உ ஆத்மசக்திக்கு தக்கவாறு ப்ரயாஸமும்குறையும் பாஷ்ய விக்னங்களும் பாதிக்கமாட்டா.

பாஹ்யரங்கம்.

18உ உலகப்பற்றொழிந்த உன்னை இப்பால் உள்ள உன் நண்பர் கைவிட்டுவிடுவார்கள். உலகமே மாறினாலும் அப்பாலுள்ள நண்பர் கைவிடவே மாட்டார்கள். தைர்யமாய் ஏகாந்த இருளில் ஸஞ்சரிக்கலாம். ஏகாந்தமேபரமமோஹனம். அவ்விருளை மெய்யொளி. மெய்யொளியைக்கண்டோர் அதை மீதும் பிரிய விடுப்பார்.

பாஹ்யரங்கம்.

19உ ஆதியில் கஷ்டமானாலும் அந்தத்தில் சுகமாய் முடிவதால் ஸபலமாகக்கூடிய ஸ்ரமம் அனுபவிக்கத்தக்கது தான் என்றும் முயற்சி துன்பமானாலும் முடிவு இன்பமானதால், எப்படியாவதுமுயற்சிக்கவேண்டுமென்ற புத்தி அபக்வ நிலையாலேயே தோன்றும்.

பாஹ்யரங்கம்.

20உ புனர்ஜன்மம் / அவதாரம் உலகிலேயிருந்து உலகில் அறிய வேண்டிய யாவையும் அறிந்து தமது அந்தராத்ம சக்தியை வ்யக்தமாக்கி, தாம் அறிந்தனயாவையும் தமது பின்னவர்க்கும் அறிவித்து உதவிபுரியுமாறு, மஹான்கள் பற்பல தேசங்களில் சஞ்சரிக்கின்றனர். இதுதான்—அவதாரம் என்பது.

பிர்ம்மஞான அவதாரிகை.

21உ பாபமென இகழப்படும் இத்துன்பங்கள் அநித்யமான சிற்றின்பத்தினின்று நித்யானந்தமார்க்கம் அடைவிக்கத்தக்க ஈஸ்வரானுக்ரஹமென்றே கருதவேண்டும்.

துன்பப்பயன்.

22உ ஸம்ஸாரத்தை அறிந்தவர்க்கு ஸம்ஸாரத்தில் கஷ்டமேயில்லை. அதை அறியாதவர்க்கு ஸம்ஸாரம் ஒரு



பெரும்பாரமாகவே புலப்படும். அறிஞர்க்கு இவ்வெண்ணமெல்லாம் மாறிவிடும்.

பிர்ம்மஞானிகளின் கர்ம மார்க்கம்.

23உ க்ஷமை என்பது ஸகலத்தையும் பொறுக்கக்கூடிய பலிஷ்டகுணம். துன்பமத்தியில் தைரியமாய், நிற்பயமாய் நின்று துன்பங்களுக்கும் விக்னங்களுக்கும் போராடி அவைகளைவென்று முன்செல்வதே க்ஷமையின் லக்ஷணம். க்ஷமையெனும் வீரஸம் ஒவ்வொருசாதகனிடத்தும் இருக்க வேண்டும்.

மகான்களும் அவர் மார்க்கமும்.

24உ பிறர் கஷ்டங்களை அறிந்து அவைகளைத் தனது கஷ்டங்களாகவே பாராட்டவேண்டும். தன்மீது கடினசித்தனாயும், பிறர் மீது இரக்கமுள்ளவனாயிருக்கவேண்டும். பிறர் கஷ்டத்தை தன் கஷ்டமாய்ப் பாராட்டுவோர்க்கு தன் கஷ்டத்தைக் கவனிக்க அவகாசமாவது துக்கிக்கப்போதுமான பலமாவது இராது.

மஹான்கள்.

25உ நமது அன்பர்க்காக படும் துன்பம் அதனால் ஏற்படும் இன்பத்தால் மறைந்துபோம். ஆத்மானந்த ருசிகண்டவன் அதன் இடையூறுகளை ஒழிக்கஸர்வ த்யாகமும் செய்வானல்லவா!

பக்தியின் பெருமை.

26உ அத்ருஸ்ய தரிசனார்த்தமாய் செல்லும் வழியானது பலதுன்பங்களும், விக்னங்களும் நிறைந்துள்ளது. அம்மார்க்கிகள் பொறுமையை அப்யஸிக்கவேண்டும்.

கிறிஸ்தவர் குப்தார்த்தம்.

27உ துன்பமுறும்போது இத்துன்பத்தால் எவ்வளவு உண்மையான துன்பம் எவ்வளவு ஸ்தூல சரீரத்தைச்

சார்ந்தது என்று கவனிக்கவேண்டும். பூர்வ துக்கவாஸனைகள் மரண வேதனையால் உள்ள துக்கத்தை நீயே பன்மடங்குப் படுத்திக்கொள்ளுகின்றாய். மனம்பதறாமல் சந்துஷ்டியுடன் வருவனவற்றை அநுபவி. இதற்கும் கேவலமான ஸ்திதி வரலாமல்லவா? என்று எண்ணிக்கொள்.

1921, லண்டன் நகர் கன்வென்ஷன் முடிவு.

28௳ துன்பத்தால் மனமிடிந்து, மதிகலங்கி முகம் கருக்கலாகாது. துன்பத்தையே அடிக்கடி நினைத்து வருந்தலாகாது. துன்பம் வந்துற்றகாலையில் அதைத் துச்சமாய் இகழ்ந்து சற்று உபேக்ஷையாயிருப்பாயாகில் துன்பம் வந்த வழியே சென்று மறையும்.

ஷை

29௳ இருக்கும் ஆதாரங்கள் இடியலாம். புதிய ஆதாரங்கள் பலமாய் ஏற்படலாம். ஜீரண ஆலயங்கள் இடிந்து, இதிலும் சிறந்த ஆலயங்கள் நிர்மாணமாகலாம். தேவ ரிஷிகள் ஆங்காங்கு சஞ்சரிக்கையில் மனிதர் கலக்கமுற காரணமென்னை ?

தீக்ஷா.

30௳ நிரபேக்ஷையாய் எல்லாவற்றையும் பிரகாசிக்கச் செய்யும் நக்ஷத்திரம்போலும், ஸஸ்யவிருத்தியின் பொருட்டு படையைத் தாங்கும் பனிக்கட்டி போலும், பாபமணுகாது மனிதரைக்காப்பதற்காக, மஹான்கள் மனிதர்க்கும் பாபத்துக்கும் மத்தியில் தோன்றுகின்றனர்.

மஹான்கள்.



## அக்டோபர் மாதம்.

1௳ ஸத்யவ்ரதம்பூண்ட ஜீவரனைவர்க்கும் ஞானோதயமாவதுண்டு. அஸத்யத்தை யொழித்த அஞ்ஞானிக்கும் ஞானமும் பக்தியும் ஒருங்கே உதயமாகும். ஜீவன் ஸத்ய தர்ம வ்ரதனானவனாய் இருப்பான். இச்சொற்ப ஜீவகாலத்திலேயே மெய்ஞ்ஞான உதயமானாலும் ஆகாவிடினும் பாதகமில்லை.

ஜீவிய ப்ரச்னை.

2௳ அத்யாத்ம ஸ்வபாவம் க்ரியாம்சையில் பரிணமிக்கவேண்டும். ஜீவன் மென்மேலும் பரிசுத்தனாகவேண்டும். ஹிருதய கமலத்தில் வசிக்கும் ஈசுவராம்சமான நெருப்புப் பொறி ஞானஜ்வாலையாய் ஜ்வலிக்கவேண்டும். இதுதான் முமுக்ஷுக்களின் பரமார்த்தம்.

ஜீவிய ப்ரச்னை.

3௳ ஈசுவரனை ஸ்வானுபூதியாலறியலாமே யொழிய, கேவலம் குருசிக்ஷையாலறிய முடியாது.

ஜீவியப்ரசனை.

4௳ நித்தியஸூரிகளான பரமாசார்யர்களை, பக்தி சிரத்தையுடன் உபாசித்து, அவருபதேசப்படி நடப்பவன் மெய்ஞ்ஞானியாவான்.

மகான்கள்.

5௳ கிறிஸ்துவர்களே! உங்கள் மதத்துக்கு விரோதமாய் நீங்கள் நடக்கலாகாது. கிறிஸ்து நித்யஸத்யமல்ல. கேவலம் நம்பிக்கையைச் சார்ந்தவர் என்று உங்களில் பலர் எண்ணுகின்றனர். அப்படி எண்ணலாகாது. நாமரூபங்கள் எப்படியிருப்பினும் உண்மை ஒன்றுதான்.

மகான்கள்.

6வ பக்தியென்பது (பரமாசார்யரிடத்திலும் தன்னி லும் உள்ள பக்தியே) குருபக்தி—ஆத்மபக்தி.

சிஷ்யமார்க்கம்.

7வ ஈசுவரனை ஈசுவராம்சரான அனைவரும் சக்ஷுஸ் சுரோத்ராதிகளாலறியலாம்.

லண்டன் பிரசங்கம்.

8வ பேரறிஞர் கூடதான் ஸாநுபூதியால் கண்டறிந்த மெய்யொளியின்பெருமையை, தாமே வர்ணிக்க வல்லவரல்ல. நம்போன்ற சிற்றறிஞரின் சித்தாந்தங்களைப்பற்றிக்கூறுவ தென்? பக்தி சிரத்தையுடன் புரமதங்களையும் ஸ்மர்சித் தறிந்து கொள்ளவேண்டும்.

ஜீவிய ப்ரச்னை.

9வ பக்தியிற் சிறந்தது ஆத்மபக்தி. அந்தர்யாமியான பரமாத்மா பக்தியே "ஆத்மபக்தி" எனப்படும்.

கிறிஸ்தவ குப்தார்த்தம்.

10வ பக்தி தர்க்கமுறைகளால் நிரூபிக்கத்தக்கதல்ல. தன்னைத்தானே அறியும் ஆத்மஞானமே உண்மையானபக்தி. தனது ஹிருதய கமலத்தில், பரமாத்மா அந்தர்யாமியாய் இருப்பதாயறிவதே பராசக்தி—பரமபக்தி.

யோகபீடிகை.

11வ தற்செயலாய் திடீரென் றுதிக்கும் தோற்றத்தா லல்லாது அனவ்ரத த்தியானத்தால் உதிக்கும் ஆத்மஞானமே யோகத்தின் முடிவு. நிச்சலமான திடச்சித்தத்தால் ஆத்ம ஞானோதயமாகவேண்டும். ஈசுவரனொருவனுண்டா! என்ற சங்கை ஆத்மஞானிகளுக்கு ஏற்படவே மாட்டாது.

யோக பீடிகை.

12வ தமது ஹிருதய கமலத்திலுள்ள ஆத்மஸாக்ஷாத் காரமே யோகிகள் அறியும் ஈசுவர ஸத்வ நிரூபணம், விஷய



பற்றுகளெல்லாமொழிந்து சித்தசுத்தி யடைவதே யோகிகள் கோறும் ஆத்ம சாக்ஷாத்காரம். அந்நிலைமையில் நிர்வாணம் எனும் மெல்லிய கோசமொன்றைத்தவிர வேறொரு ப்ரதி பாதகமுமிராது. அந்நிலைமையில்தான் ஈசுவர சாக்ஷாத்கார முண்டாகும்.

யோக பீடிகை.

13வ குரு:—குருபக்தி ஆத்மஞானம்
சிஷ்யன்:—ஆத்ம பக்தியாவது என்னைப்பற்றி
எனக்கு நன்றாய்த்தெரியுமே!
குரு:—அல்ல! உன்னைப்பற்றி நீயே அறியாய்
நீ அறிவதாய்ச்சொல்வது உனது ஸ்தூல
கோசமே. அக்கோசத்துக்குள் அக்ஷயமாயும்
அஜேயமாயுமுள்ள ஆத்மா வொன்றிருக்கின்
றது.

சிஷ்ய மார்க்கம்.

14வ மெய்ப்பொருளை யறியக்கூடியவர்க்கு அப்பொ ருள் தன்படியே சித்திக்கும். ஞான லோகத்திலும் பர ஸூக்ஷ்மலோகத்திலும் வித்தியாசமே இடையாது. ஞான சக்தியே அடையத்தக்கப் பக்குவதை ஆகையால், ஞான சக் தியே முக்கிய லக்ஷியமாய்க்கொள்ளவேண்டும்.

லண்டன் பிரசங்கம்.

15வ ஆத்ம பக்தி என்றால் ஸ்தூலசரீர பக்தி என்ப தல்ல. ஜிதேந்திரியனுக்கு ஸ்தூல சரீரப்பற்றே யிராது. அந்தர்யாமியின் ஆத்மசக்தியை அறிய விரும்பும் ஜிக்ஞாஸு வின் பக்தியே ஆத்ம பக்தி.

சிஷ்ய மார்க்கம்.

16வ அந்தர்யாமியான ஆத்மஜ்யோதி நமதுள்ளத்தில் எப்போதும் ஜ்வலித்துக்கொண்டே யிருக்கின்றது. நாமும் தன்மயமான அஜ்ஜோதிரம்சந்தான். நாம் நேரில் அறியாவி

டினும், வெளிச்சம், இருட்டு என்ற வித்தியாசமின்றி திட பக்தியுடன் நம்புவதே நலம்.

வாழ்வில் கஷ்டங்கள்.

17உ உண்மையான பக்தர்கள் மேன்மேலும் ஆத்ம சக்தியும் ஆத்ம பலமும் அடையுமாறு தனக்கு மேலோரையே உபாசிப்பார்கள். தாமறிந்ததை மற்றோர்க்கும் அறிவிப்பார்கள்.

பக்திஞான வாழ்வு.

18உ ஆத்மஞானமடைய விரும்புவோர்க்கு, தன்னில் அந்தர்யாமியான ஆத்மா ஒன்றுண்டென்ற திடபக்தியே ப்ரதானமானது. இதுதான் பக்தியென புகழத்தக்கது.

யோக பீடிகை.

19உ வாதமுறையால் ஆத்மஞானமுண்டாகாது. ஆத்மாவே தானிருப்பதற்கு தக்க சாக்ஷி. இவ்வித திட நம்பிக்கையே, ஆத்மஞானத்திற்கு முக்கிய சாதனம்.

யோக பீடிகை.

20உ பக்தி அவசியம். பக்தியில்லோர்க்கு சித்தக் கலக்கமுண்டாகும். அடிக்கடி நேரிடும் இடையூறுகளால் தைரியமும் ஆத்மஞான முயற்சியும் குன்றும்.

யோக பீடிகை.

21உ ஞான மார்க்கத்தில் அஞ்ஞானமெனும் இருண்டகாடொன்றிருக்கின்றது. ஆத்மா ஒருவர் உளர் என்ற திடபக்திதான் அவ்வரண்ய மத்தியில் தவிக்கும் ஸாதகனை உத்ஸாகப்படுத்தி அக்காட்டைக்கடந்து, ஞான மார்க்கம் அடைவிக்கின்றது.

யோக பீடிகை.

22உ ஆசார்ய உபாசனை இன்னதென்றும், நம்மை உயர்பதவிக்குக் கொண்டுவரத்தக்க, அவரது ஆத்ம மந்திர



சக்தி இன்னதென்றும் நம்மில் சிலர் அறிவார்கள். வாக் உபதேசமின்றி கேவலம் அவரது தர்சனமே போதுமானது. அவர்களைத் தர்சித்து, பிறகு ஸ்தூல லோகத்திற்கு வருவோமானால், அவரது பெருமையும், இவ்வுலகின் சிறுமையும் நன்கு விளங்கும். அவரது தர்சனத்தாலுண்டான மெய்யறிவு எப்போதும் நமது சித்தத்தை விட்டகலாது.

பரிணாமலோகம்.

23உ நானே சச்சிதானந்தன், நானே ஜீவன், பக்தன், பரஞ்ஜோதி. நானும் ஈசுவரமயன். இதை யறியச்செய்யும் முயற்சிதான், மெய்யறிவுக்கு ஸாதகமானது. அந்தர்யாமி ராகத்வேஷாதிகளற்ற சுத்த சாந்த ஸ்வரூபி. அந்தர்யாமியே ஆத்மா. அந்தர்யாமியை இன்னும் அடையவில்லை. அதையடையத்தான் முயற்சிக்கின்றோம்.

வாழ்வில் கஷ்டங்கள்.

24உ இருதய குறையால்தான் நித்யஸத்யனை ஆத்மாவைப் பார்க்கலாம். நித்யனை ஆத்மாவை யறிந்து அத்துடன் ஏகிபாவம் கொள்ளுபவன்தான் சாந்தநிலை யடைகிறான்.

சாந்திசாஸ்திரத்தின் பீடிகை.

25உ புறமதத்தில் சேர்க்கவேண்டுமென்பது ப்ரம்மஞானஸமாஜத்தாரின் கொள்கையல்ல. ஸர்வஜனங்களின் ஸ்வபாவங்களை அறிந்து,தாமறிந்ததைப் பிறர்க்குப்போதித்து, அவனவனுக்கு அவனவன் மதத்திலே திடப்பக்தி வளரச் செய்து ஸர்வமதங்களுக்கும் ஆதாரமான தத்துவம் ஒன்றே! என்று உபதேசிப்பதே ப்ரம்மஞான ஸமாஜத்தார் கொள்கை.

நான்கு மஹா மதங்கள்.

26உ ஈசுவரனைப்பற்றிய பின்ன மதங்களால் நன்மையேயொழிய தீமையில்லை. ஒவ்வொரு மதமும் ஓர் ஈசுவராம்சம். பல மதங்களின் ஸமஷ்டியால் ஈசுவரனது பூர்ணம்சமும் அறியலாம்.

நான்கு மஹா மதங்கள்.

27வ ஆத்மஞானம் உதயமாக, உதயமாக, பேதபுத்தியும் குறைந்து வருகின்றது. உபாஸக — உபாஸ்யன் என்பது இரண்டல்ல. ஒன்றுதான் என்ற அறிவுண்டாகின்றது. பூர்ண பக்தனது அஞ்ஞான மொழிந்து ஞானம் முதிர்ச்சியடைகின்றது. அந்நிலைமையில் நான் வேறு ஈசுவரன் வேறு என்ற பேதபுத்தி ஒழிந்து, நானே அவன் அவனே நான் என்ற அபேதபுத்தி உண்டாகின்றது.

நான்கு மஹா மதங்கள்.

28வ ஈசுவரன் ஜகத்பிதாவா? அல்லது கிறிஸ்துவர்க்கு மாத்திரம் பிதாவா! தன்மையையும் ஒற்றுமையையும் அறிந்தவர்கள் மத பரிவர்த்தனைக்கு முயற்சிக்க மாட்டார்கள். மதமாறுபாடும் உண்டாகாது பிறர் அறிந்த ஈசுவரகுணவிசயங்களை அவரிடமிருந்து தாமும் கற்றுக்கொள்வார்கள்.

நான்கு மஹா மதங்கள்.

29வ சரீரமனோதர்மங்கள் எப்படியிருப்பினும் ஜீவன் எப்போதும் பரமாத்மத்யானபரனாகவே யிருக்கின்றான். அனவரத பரமாத்மத்யான உபாஸனாதி வரதனாய் உபாஸகன் காலங்கழிக்கவேண்டும். ஜீவன் இவ்வாறிருக்கையில்உள்ளமும் உடலும் பரோபகாரார்த்தமாய்ப் பாடுபடவேண்டும்.

வெளிப்பிரகாரம்.

30வ தான் காணும் கனவெலாம் மெய்பொருளின் ஏதோ ஒரு லவாம் சந்தான் என்ற எண்ணத்துடன், உபாஸகன், தனது உத்திஸ்யமான சுத்த ஸத்வத்தையடைய முயல்கின்றான்.

வெளிப் பிரகாரம்.

31வ மனமெனும் கண்ணாடியில், பரமாத்மா ஜீவாத்மஸ்வரூபியாய் ப்ரதிபிம்பிக்கின்றார். கண்ணாடியிற்காணும் பரமாத்மாவின் திவ்யப்ரதி பிம்பதர்சனத்தால் நாமும் அப்பிம்பாகாரம் அடைகின்றோம். அப்பிம்பாகாரமான ஜீவனும், பரமாத்ம தர்சனத்தால் பரமாத்ம ஸ்வரூபியாகின்றான்.

வெளிப் பிரகாரம்



## நவம்பர் மாதம்

---

1வ விதிகளை யறிந்து அவைகளைச் சமயத்துக்குத் தக்கவாறு ப்ரயோகிப்பதுதான் ஸ்திரத்துவம்.

யுத்தமும் அதின் மூலம் ஸோதரத்துவத்துக்கு
உண்டான தெளிவும்.

2வ ஏகம்ஸத் என்பதே மெய்யறிவு, புருஷன் வேறு ஜீவன் வேறு எனின் புருஷன் இருப்பதுண்மையா? ஜீவ புருஷ ஸம்பந்தம் யாதென்ற சங்கையைத்தீர்க்க யாராலுமியலாது.

ஜீவியபிரசனம்.

3வ இந்நிலைமையில் சாஸ்திரங்களும், ஆசாரங்களும் பாரம்பரவைரிகளா யிருக்கின்றன. அவைகளை ஒழுங்குபடுத்தி சமுதாய முறைகளை சீர்படுத்துவதே பெருதவிஞான சம்பந்தமான கொள்கை.

ஜீவியபிரசனம்.

4வ இனி புதிய மனுஷ்யவர்க்கம் ஒன்று உதயமாகப் போகின்றது. இவ்வுண்மையறிந்து, அதற்குத் தக்கபடி யனுஷ்டிக்கும் தேசத்தாரே, இவ்விப்ரமுகர்களாயிருப்பார்கள். மற்றவர்கள் (அத்தேசத்தார்க்குக்) கீழ்பட்டிருப்பார்கள் என்ற தத்வமே மனுஷ்ய ஒற்றுமைக்கு மூலாதாரமான கொள்கை. அத்தத்வ ஞானிகளின் உபதேசம் தற்போது பயன் பெறாவிடினும் இறுதியில் வயலமாகுமென்பது நிச்சயம்.

ஜீவியபிரசனம்.

5வ இதுவரை மனிதர்க்குள் பரவியுள்ள பரஸ்பரத் வேஷத்தை ரேஸிமெனும் சஸ்த்ரத்தால் வேரறுத்து அது மறுபடிவேருன்றாய் பலப்படுத்தலாம்.

கர்மம்.

6உ சஞ்சித கர்மத்தை முற்றிலும் பழிக்கமுடியாது. ஆனால் அவைகள் பலிக்கா. உண்மைப்ரதிகிரிகைகள் செய்யலாம்.

கர்மம்.

7உ. ஸூக்ஷ்மலோகத்தைப்பற்றி மோசகரமான சிலப் பொய்க் கொள்கைகள் பிரசுரித்துக் கொண்டிருக்கின்றனர். அவைகளை மாற்ற, அறிஞர் மெய்யுபதேசம் செய்து வருகின்றனர். சௌசத்தால் அசுசியும் தர்மத்தால் பேராசையும் நாசமாகும். அறிவு முத்திமுத்தி ருஜுமார்க்கத்தில் ஸாத்தமான கர்மங்கள் செய்யப்படும். பரமசங்கல்பத்துடன் பரமார்த்தத்தை நாடியே இக்கொள்கையுமிருக்கின்றது.

கர்மம்.

8உ நிச்சலமான ஏரியில் சந்திரனும் நக்ஷத்திரங்களும், பூர்ணமாய் ப்ரதிபிம்பிக்கின்றன. அதே ஏரி வாயு வசத்தால் சஞ்சரிக்குமானால், பின்ன பிம்பங்கள் காணப்படும். அங்ஙனமே ஸாமான்யர்கள் திடமனஸ்தராய் நிரபேக்ஷையாயும் சாந்தமாயும் கர்மாக்களைச் செய்வாராகில், பரமபொருளின் பிரதிபிம்பத்தை தன்னிடத்திலேயே காண்பார்கள். அங்ஙனமே சிஷ்யரும் தமது ஆசார்ய பிரதிபிம்பத்தைப் பார்ப்பார்கள்.

பரிணாமலோகம்.

9உ இரு கக்ஷியிலுமுள்ள குற்றங்களையும் அதன் காரணங்களையு மறியவேண்டும். பாபத்தையும் பிறர் குற்றங்களையும் இகழத்தான்வேண்டும். அதேமாதிரி இரு கட்சியிலும் நன்மை தீமைகளையும் கவனிக்கவேண்டும். காலகதியைப்பற்றி நம்மா லியன்றவளவு நம்மவர்க்குச் சொல்லவேண்டும். பொறுமையுடன் இதைச் செய்யவேண்டும். பொய்க் கொள்கையாயினும் கோபதாபத்துடன் கண்டிக்கலாகாது.

குப்தவித்தியார்த்தியும் யுத்தமும்.



10உ மனம் சஞ்சலிக்கலாகாது. இரு கட்சியையும் அறியவேண்டும். துஷ்கரமான எண்ணங்களைத் தவிர்க்கவேண்டும். கோபதாபங்கூடாது. குற்றங் குறைகள் ஸ்மர்த்திக்கலாகாது. மெய்யும் பொய்யும் கலக்கலாகாது. இயற்கனவேயுள்ள தீமைகளை விர்த்திசெய்யலாகாது. காலகதிக்கு அநுகுணமான சித்தசமாதி யடையவேண்டும். இவைதான் ப்ரம்மஞானிகள் அறிந்துகொள்ளவேண்டிய முறைகள்.

குப்தவித்தியார்த்தியும்-யுத்தமும்.

11உ கோபதாபத்தால் பிறர்குணங்களை யறிய மார்க்கமில்லாமல்போய்விடும். வித்யார்த்தியானவன் கோபதாப மன்னியில் ஸத்ய நிரூபண மத்யஸ்தலமாய் விளங்கவேண்டும். மனுஷ்ய விருத்திக்கு இரு கட்சியும் அவசியமென்ற உண்மையை யவனறிந்துகொள்ள வேண்டும்.

ஷை

12உ ஆனால் சமாதி உள்ளேயிருந்து வெளிநோக்கி வளர்கையில் அது ப்ரஸரித்து பிரகிருதி முழுவதும் வியாபிக்கிறது. ஸமாதியின் ஹ்ருதயந்தான் மௌனத்தின் ஹ்ருதயம், அதுதான் மறைந்திருக்கும் ஈசுவரன் ஹ்ருதயம். மௌனவாக்கில்மட்டுந்தான் வல்லமையான ரஹஸ்யவார்த்தை பலனுடன் கேட்கக்கூடும். அது வெளிப்படையான சலனங்களை சமாதியடையச் செய்கிறது.

சாந்திசாஸ்திர பீடிகை.

13உ ஆத்ம வித்யார்த்த ஸன்யாசியா யிருக்கவேண்டியதவசியமல்ல, உலகவாழ்விலிருந்தே ஈசுவர ஸாக்ஷாத்காரம் அடையலாம். ஈசுவரஸாக்ஷாத்காரத்துக்கு இடையூறுகள் நம்மிடமே யிருக்கின்றனவே யொழிய பாஹ்யலோகத்திலல்ல. இதுதான் பகவத்கீதாஸாரம்.

கீதை முகவுரை.

14உ ஜீவபரமாத்ம ஐக்யமே யோகம். அதாவது ஜீவாத்மாவிஷயப்பற்று அற்றது. பரமாத்மாவுடன் ஸாரூப்ய ஸாயுஜ்ய

பதவியடைவதுதான் சுகதுக்கம், ராகத்வேஷம் என்ற த்வந்த வாதீதமான சித்த சமாதியே யோகத்துக்கு முக்கிய ஸாதனம்.

கீதை முகவுரை.

15வ. தன்னையும், தன் குழந்தையையும், தன் சுற்றத்தாரையும் போல எல்லோரையும் பாராட்டவேண்டும். அப்போதுதான் ஆத்மாபிமானது ஸர்வாபிமானி என்ற ஜகத்தர்மமாக மாறும். அன்பே ஸர்வ தர்மங்களுக்கும் மூலாதாரம். த்வேஷமே சர்வ பாவங்களுக்கும் விபத்காரமான பரம பாதகங்களுக்குக் காரணம்.

பிர்ம்மஞானச் சுருக்கம்,

16வ. (ஞானோதயத்துக்குக் காலாவதி கிடையாது). முதுமையில் ஞானோதயமானது ஆகா! "முதுமையில் வந்ததே இளமையில் வந்தால் எவ்வளவு செய்திருப்பேன்" என்று ஏக்கங்கொள்ளலாகாது. உண்மையில் ஞானமார்க்கமும் ஒன்று, ஜீவனுமொன்று. ஜீவகாலத்திலேயே வழியைக் கடக்கவேண்டும். ஆதலால் எத்தசையில் எவ்வளவு வழி கடந்தாலென்ன!

வாழ்வினுள்ள கஷ்டம்.

17வ. கர்மலோகத்தில் போல மனவுலகிலும் புசல்கள் சஞ்சரிக்கின்றன. ஜனன மரணம்போல, சுக துக்கங்களும் மாறி மாறி வருகின்றன. இது கேவலம், சித்தாந்தம் மாத்திரமல்ல. அநுபவஸ்தர் யாவரும் அறிவார்.

வாழ்வினுள்ள கஷ்டம்.

18வ. ஞானோவிகாரங்களால் சித்தயமார்க்கம் பாதகமில்லை. இவ்வறிவுதான் சித்த சமாதிக்கு முதற்படி. இச்சொல் சற்று குயுக்தியாய் தோன்றலாம். உயர்வுக்கும் உணர்ச்சிக்கும் ஒரு சம்மந்தமுமில்லை. இன்பத்தால் உயர்வுமில்லை. துன்பத்தால் தாழ்வுமில்லை.

வாழ்வினுள்ள கஷ்டம்.



19வ. கிறிஸ்து அவதரிக்கையில் அவரைக்காணவிரும்புவோர் சீலம், க்ஷமை முதலான உத்தம புருஷ லக்ஷணங்களும் ராகத்வேஷமில்லாமல் ஸர்வ ப்ராணிகளிடத்தும் அன்பு, இவைகள் வாய்ந்தவராயிருக்கவேண்டும். அஞ்ஞரிடத்திலும் அசடுகளிடத்திலும் அதிகப்பொறுமை யிருக்கவேண்டும். துக்கம் வந்தபோது அதை அனுபவித்தறியவேண்டும். கொடுக்கத்தக்கதைக் கொடுக்கவேண்டும்.

அடுத்துவரும் வேளை.

20வ. போட்டியில்லாமல் விருத்தியுமில்லை வளர்ச்சியுமில்லை.

துன்பத்தின் பயன்.

21வ. சுக துக்க தத்வத்தை அறிந்த மெஞ்ஞானிக்கு சுகமுமில்லை துக்கமுமில்லை.

யோக பீடிகை.

22வ. சுகம் வந்தாலும் அனுபவிக்கவேண்டும். துக்கம் வந்தாலும் அனுபவிக்கவேண்டும். வந்ததில் வெறுப்பும் வாராததில் விருப்புமற்ற இச்சிப்பு ஹந்துஷ்டர் வாழ்வே நல்வாழ்வு.

யோக பீடிகை.

23வ. ஸமஸ்தர் நியமமென்பதே கீதையின் முக்கியமான கருத்து. மனிதன் தனது ஸர்வ அம்சங்களையும், ஏக ஸத்வனை பரமாத்ம அம்சங்களுடன் ஒருமைப்படுத்த வேண்டும்.

கீதை பீடிகை.

24வ. மகான்களின் வாழ்வு அதிகக் கஷ்டமானது. அதாவது உலக வாழ்க்கையிலேயே உதாஸின புத்தியுடனிருந்து, செல்வம், வறுமை, சுகதுக்கம், புகழ்ச்சி, இகழ்ச்சி இவைகளில் பாராட்டாது நித்யதிருப்தனாய் நித்யசாரனாயிருப்பதே.

மும்மார்க்கம்.

25வ முற்கூறிய குணங்களால்சித்தஸமாதியும், திடசித்தமும், சாந்தியும் ஏற்படும். இதனல் ப்ரம அப்யாஸ மார்க்கம் கடந்ததாகும்.

சிஷ்ய மார்க்கம்.

26வ எல்லாவற்றிற்கும் 'அதி' என்பது ஒன்றுண்டு. காயக்லேசத்தால் ஆத்மவஸ்யதை ஏற்படாது. காயபோகத்தாலும் ஏற்படாது.

மேனேக்க விதிகள்.

27வ பரமாத்மாவிடம் அனன்ய பக்தி, சுத்தசித்த ஸமாதி, புத்தி சித்தங்கள் ஞான முறையால் நல்வழிப்படுத்துவது இதுதான், இவ்வுலகில் ஜிக்ஞாஸுக்கள் செல்லத்தக்கமார்க்கம். சௌசம், தயை, மிருதுத்வம் இவைகள் பொருந்தியிருக்கவேண்டும். அழகன், குரூர உயர்வு, தாழ்வு என்ற வித்தியாஸமன்னியில் எங்கும் பரமாத்ம ஸ்வரூபமாய் அறியவேண்டும்.

மேனேக்க விதிகள்.

28வ குருவினிடம் ஏகாக்ர பக்தியுடனிருக்கவேண்டும். அவ்வித பக்தியினின்றும் சற்றேனும் விலகலாகாது.

தீட்சை.

29வ பலாத்காரமாய் இழுத்தாலொழிய வசிக்காந்தம் உத்தரத்வத்தையே (நார்துபோல்) காட்டுவதுபோல ஜீவ ராசிகளின் மோக்ஷார்த்த கைங்கர்யமே, உனது பரமார்த்தமாகக் கொள்ளவேண்டும்.

தீட்சை.

30வ அகங்காரமோ நமது அதிகாரி, தர்மமோ நமது உபதேசிகள், இத்தர்மசங்கடத்து யாம் என்ன் செய்வது? நமது குற்றங்குறைகள் நமக்கு எப்படி புலப்படும்? சரிதான்—எனது ஆத்மசக்தியை நான் சாந்தியுடன் நாடவேண்டும், ஆசையை யொழிக்கவேண்டும். அகங்காரத்தைச்



சற்று பஹிஷ்கரித்து, எனது ஆசார்யனை தியானித்து எனது சங்கைகளைத் தெளிவுற நானே தீர்த்துக்கொள்ளவேண்டும்.

மேனேக்க விதிகள்.

---

## டிசம்பர் மாதம்.

1வ ஒரே ஊற்றிலிருந்துதான் ஸன்மதங்கள் யாவும் உண்டாயிருக்கின்றன. நித்யஸூரிகளும் முக்தர்கள் யாவரும் ஒரே கோஷ்டிதான். இவர்கள்தான் ஜகத்தர்ம பாலர்கள், ப்ரம்மஞானமெனும் பரமாத்னம், அவர்களாதீனத்தில் இருக்கின்றது. அந்தந்த தேசத்தார்க்கும் ஜாதியார்க்கும் தக்கபடி அவ்வறிய அறிவை அவர்கள் அளித்து வருகின்றனர்.

மதசம்மந்தமான பிரம்மஞ்ஞானம்.

2வ மாயையைக்கடந்து, தனது அந்தர்யாமியான பரமாத்ம திவ்ய தரிசனத்தைக் கண்டுகளிக்க விரும்புவோனை யாரால் தவிர்க்கமுடியும்?

குப்த கிருஸ்துவ மதம்.

3வ அந்தராத்ம ஞானிக்கு அஸ்திரமான சிற்றின்பத்தால் திருப்தியடையான். பரமாத்ம சாயுஜ்யமே அவனது பரமார்த்தம். இவ்வித திடசங்கல்பத்துடன் அவன் முயர்ச்சிக்கின்றான்.

குப்த கிருஸ்துவ மதம்.

4வ பேதபுத்தி யொழிந்ததும், கிறிஸ்து உன்னிடம் அவதரித்துவிட்டார். அவ்வாறு அவதரித்தவுடன் நீயும் கிருஸ்து ஸ்வரூபியாய் விட்டாய்.

மனோதத்துவமும், ஆத்மார்த்தமும்.

5வ ஏறினவழியே ஏறுவோம். மண்ணிலிருந்து வந்தயாம் (நக்ஷத்திரகசிதமான) விண்ணுக்குச்செல்வோம்.

அந்தராத்மாவுக்கு காலதேச அவதி கிடையாது. இதுவரையுள்ள நமது முன்னேற்றம் ஒருமடங்கு. இனி நாம் அடையப்போவது பன்மடங்கு.

பரிணாமலோகம்.

6௨ ஆத்மஞானியாய், ஆத்ம பரமாத்ம ஸம்பந்தத்தையறிந்து விஷயப்பற்றுக்களை ஒழிக்க முயல்பவனே, அப்போது அவன் ஜகத்க்ஷேமபரனாகிறான்.

பிர்ம்மஞானியின் சரிதை.

7௨ முக்தன் இவ்வுலகுக்கே திரும்பி வரான் என்பதல்ல. திரும்பி வரவேண்டிய அவசியமில்லை என்பதுதான். முக்தன் ஜனனமரண வர்ஜிதன், முக்தன் தன் இஷ்டப்படி எங்கும் சஞ்சரிக்கலாம். மண்ணுலகோர் கோரிக்கைப்படி இஷ்டமுண்டானால் இங்கு வருவான். அதாவது அர்த்திகளை அனுக்ரஹிக்கவேண்டுமென்ற இடமெல்லாம் முக்தர் செல்வார்கள்.

பிர்ம்மஞானியின் சரிதை.

8௨ ஈசுவரனுடைய ஸ்வாம்சமானது (மனிதரின்) ஜீவனைப் பரிணமிக்கின்றது. ஜனன மரண ஸம்ஸாரத்தில் முளைத்துத் தர்விக்கின்றது. அவ்யக்த ப்ரம்மஸ்வரூபம் வ்யக்த (மனுஷ்ய) ஜீவரூபமாகின்றது—இதுதான் ப்ரபஞ்ச ஸாரம்.

ஜீவிய ப்ரச்னம்.

9௨ தேவரிஷிகள் ஜீவன் முக்தர்கள் நமக்குதவிபுரிய நம தருகிலேயே வஸிக்கின்றனர். அவர் உபதேசத்தால் நமது குப்தஞானமானது வ்யக்தமாகின்றது. அவரது தத்வ உபதேசம் பெற்றவர்கள், விரைவில் ஜோதிமார்க்கம் ஏறுவார்கள்.

ஜீவிய ப்ரச்னம்.

10௨ எல்லாம் அவருடையதே! அவருக்கு வுரியவையாவும் மற்றவர்க்குமுரியது. அவர் சுத்தன்—அவரைச்சார்ந்தவரும் சுத்தர்கள். அவரே சக்தன். அவரை அந்தர்யாமியாயுள்ளவர்க்கு அசக்தியுமுண்டோ? தாம் உத்தம பதவியடைந்து, தனதடியார்க்கும் அப்பதவியை வர்ஷிக்கின்றார். தனது பேரின்பத்தைப் பிறர்க்கும் பங்கிட்டுக் கொடுப்பதற்காகவே அவர் உயிருடனிருக்கின்றார். அவர் தன்னுடன் தனது உயர்பதவிக்கு தமதடியாரனைவரையும் அழைத்துச் செல்லுகிறார். அவர் சென்ற மார்க்கமானதால், அவ்வழியில் மற்றவரும் செல்ல எளிதாயிருக்கின்றன.



ஜீவிய பிரச்னம்.

11௨ ஸர்வபிராணிகளையும் உஜ்ஜீவிக்கும் ஜீவசக்தி அந்த குப்தசக்தியை வ்யக்த சக்தியாக்குவதற்கு அவசியமானது ஒன்றுதான். ஆத்மா, தனது அச்சக்தியை தனது உள்ளத்தில் புகச்செய்யவேண்டும், ஸர்வவ்யாபியாயினும் தனது சகோதரன் இச்சைக்கு விரோதமாய் நடப்பானா? இதர மனுஷ்ய சங்கல்பமானது ஸத்வ சங்கல்பத்தையும் இதர மனுஷ்யர் ஸங்கல்பத்தையும், எதிர்த்து நிற்கக்கூடும். விகாஸக்ரமமாய் ஜீவன் தானே ஈசுவர ஸாயுஜ்ய மடையலாமேயொழிய, பலாத்காரமாய் அடைவிக்க இயலாது.

ஜீவிய பிரச்னம்.

12௨ ஸங்கல்பத்தால் தனது வாசலைத் திறந்து, ஜீவசக்தியை ஜீவாத்மாமீது வர்ஷிக்கவேண்டும். வாசல் மூடியிருக்கையில், ஜீவசக்தியின் வாசனை மாத்திரம் உட்புகும், தார்க்கத்திலும் ஜீவசக்தி ப்ரஸரிக்கவல்லது.

ஜீவிய பிரச்னம்.

13௨ அன்பும் பரோபகாரமு முள்ளவர்கள் ஈசுவரானுக்ரஹவாஹினிகள், அவர்கள் மேலுலகம் சென்று ஞான முதிர்ச்சியடைந்ததும், யோகிகள் கோருவதும் யோகாரூடர் அடைந்ததும் இன்னதென்றறிவார்கள். ஈசுவரத்வமே தனது ஜீவன் என்றுணர்ந்து, ஈசுவர பரிமளத்தையும் அனுபவிப்பார்கள்.

ஜீவிய பிரச்னம்.

14உ காந்தஊசி வடதிசையையே நோக்குவதுபோல, பரோபகாரபரராய் இருப்பவர் சீலமும் தெய்வபாவத்தையடைகின்றது. மனிதரின் ஈசுவரத்வம் ஸ்ரேஷ்டத்வத்தத்தையே நாடுகின்றது. ஸர்வஜித் ஆனதால், இனி ஜயிக்க வேண்டியதொன்றுமில்லை, ஸ்ரமப்பட வேண்டியதுமில்லை. ஜனனமரணாதிஸர்வமும் ஜயித்து ஸர்வஜித் என்ற பதவியடைந்தபிறகுதான், கிறிஸ்துநாதர் சுத்ததெய்வஸ்வரூபியானார்.

மஹான்கள்.

15உ மோக்ஷ ஆசையென ஹிந்துக்களும் பௌத்தரும் கூறுகின்றனர். ஆசார்யாள் அதையே ஜீவாத்மயோகமெனக் கூறுகிறார்; பரமாத்மாவோ. அன்புமயமானவர். ஆதலால் அத்தன்மையை மண்ணுலகிலுள்ள ஜீவகோடிகளுக்கும் அளிக்கின்றார்.

தீட்சை.

16உ ஸம்பரதாயம் / பூர்வாசாரம் ஐதிஷ்யம், நிர்விசாரணை, அனுஷ்டானம்—இவைகளால் ஏற்பட்ட இடையூறுகளைக் கடக்க வேண்டும். செம்மட்டியால் இடித்தால் இவைகள் தன்படியே விலகிக்கொள்ளும் (அவைகளுக்கு) அப்பால் பரந்தாமனைக் காணலாம். கைங்கர்யமே சுத்த மோக்ஷமென்றும், குருசந்நதியே பேரின்பமென்றும் அறிந்துகொள்ளவேண்டும்.

தீட்சை.

17உ பாஹ்யபந்தமில்லாமையே முக்தி. தைவானுக்கிரஹமே சக்தி.

பிர்ம்மஞ்ஞானியின் சரியை.

18உ மதநாசமே ஆசார்யர் உபதேசித்த பந்தவிமோசனம். இதுதான் ஸநாதனவிதி. தான் ஸ்தாபித்த வித்யாபீடங்கள் (அவஸ்யமில்லாமல்) அழியும்வரை ஆசார்யாள் மனுஷ்யவர்க்கத்தினரை கைவிடமாட்டார்.

லண்டன் பிரசங்கம்.



19உ மிருதுஸ்வபாவம், பலம், சந்துஷ்டி - நிச்சஞ்சலமானதும் அபாரிதமாயுள்ள திடசாந்தி—இவைகள் பரமார்த்த அம்சங்கள். ஒருகாலத்தில் யாவரும் அடைவார்கள்.

20உ மனிதன் உள்ளத்திலுள்ள ஈசுவர மயமான ஞானாக்னியும், அன்பும் பெருகப் பெருக பந்தங்கள் எல்லாம் எரிந்து தன்மயமாய் ஈசுவர சக்தியும் ஈசுவர தேஜஸும் உதயமாகும்.

வெளிப் பிராகாரம்

21உ அன்பெனும் அக்னிமயமாயும், ஞானமயமாயும் விளங்கும் ஆத்மா, மனுஷ்யலோகத்தில் வ்யக்தமாகையில், ஸ்தூல பாசங்கள் எரிந்து ஸூக்ஷ்மசக்தி வெளிப்படும். ஸ்தூலம் எரிவதால் ஸூக்ஷ்ம ஜீவன் முக்தனென்கிறான். பக்தன் முக்தன் ஆகிறான். ஸ்தூலசரீரமழிந்ததும் ஜீவனுக்கு சம்சாரபந்தமே கிடையாது.

வெளிப்பிராகாரம்.

22உ இதனால்தான் ஞானோதயத்தால் முக்தியுண்டாகும் எனக் கூறப்படுகின்றது. முக்தனுடையவும் ஹ்ருதயமும், ஆனந்தமும் தெய்வபாவமடைகின்றன. பரஞ்ஜோதியால், ஜீவாத்மாவும் ப்ரகாசிக்கின்றார். அப்போதுதான் அவர் ப்ரம்மஞானியாகிறார். ப்ரம்மஞானிகளுக்கு சோகமே கிடையாது. திவ்யஜ்யோதியால் ப்ரகாசிக்கும் ஜீவனது சோகமெல்லாம் ஸர்வதா நாசமடையும்.

வெளிப்பிராகாரம்.

23உ ஸந்த தத்வஞானிகளான ஜீவர்களுக்கு சங்கையே ஏற்படாது. ஆதலால் ஞானப்ராப்தி என்பது ஜீவவிருத்தியெனவும் ஞானமெனும் நதி ஜிக்ஞாஸுக்கள் உள்ளத்தில் எப்போதும் ப்ரவஹித்துக்கொண்டேயிருக்கின்றது எனவும் பொருள்படும்.

வெளிப்பிராகாரம்.

24வ. ஜீவாத்மா கேவலம் ஸாக்ஷி பூதயாயிருக்கின்றது உள்ளமும் உடலும் கர்மத்தை அனுபவிக்கின்றன. கர்ம முடிவில் ஜீவன் ஈசுவர ஸாக்ஷாத்தியமடைகிறான்.

வெளிப்ராகாரம்.

25வ. ஈசுவர ஸாக்ஷாத்காரமடைந்தவனுக்கு இம்மைப் பற்றே கிடையாது. ஜீவர்களின் மோக்ஷார்த்தமாய் கண்டிப்பதைத் தவிர வேறு சிற்றின்ப இச்சையே அவனுக்குமிராது.

வெளிப்ராகாரம்.

26வ. பரமார்த்தத்தை நாடும் ஜீவன், தான்நாடியதைக் கிட்டும்வரை, க்ஷணமேனும் ஓய்வு ஒழிவு கொள்ளான். திருப்தியடையான். திவ்யஸூரிகள் அடைந்த திவ்ய தேஜஸ் தன்னிடம் பிரகாசிக்கும்வரை இங்ஙனமிருப்பான்.

வெளிப்ராகாரம்.

27வ. அதாவது நிர்பலரின் கிர்பயமும், பலிஷ்டரின் பலமும், பாபிஷ்டரின் பாபமும், சுத்தர்களின் சுத்தமும் குற்றவாளிகளின் குற்றமும், முனிவரின் நிஷ்களங்கமும், தனது பாராட்டச்செய்யும் வாக்குறுதி ஸாம்யபாவமே கிறிஸ்தவ பாவம்.

தீட்சை.

28வ. மனிதரின் நிர்பலமும், சஞ்சலமும் குறைந்து, நிச்சலமான தயையும், நிஷ்களங்கமான சுத்தமும், விவேகமும் தெய்வ பாவமும் ஒருங்கே வரக்கூடிய காலமுமுளது. அப்போதுதான் சாதகன் மோக்ஷ வாசனை யடைந்தான் என்பது.

நடந்துள்ளவையும் நோக்கமுமாக மஹான்கள்.

29வ. ஸ்வல்ப சுத்தர்களான பலர் பல்வேறு சமயங்களில் செய்யக்கூடியவற்றை கிறிஸ்து ஏக காலத்தில் ஒருங்கே



செய்கின்றார். இதனால்தான் இவரை ஸர்வஜித் என்றும் ரக்ஷகர் என்றும், நித்யசுத்தர் என்றும் கூறுகிறார்கள். அவர் நமக்கு ப்ரதிநிதியுமல்லாது நம்மோடு சேர்ந்து வாழ்பவர். அவர் ஞானி. அவர் ஞானோபதேசத்தால் மற்றவரும் ஞானிகளாகின்றனர். அவர் ஜீவனே மனிதர் ஹிருதயத்திலும் நாடிகளிலும் ப்ரவஹித்துக்கொண்டிருக்கிறது.

பரிபூர்ண மானுஷன்.

30வ. அசத்தனையும், நீசனையும், அஞ்ஞானனையும், பாபியானையும்—ஈசுவரபுத்ரன் உபதேசம் பெற்றவர் யாவரும் ஜ்யோதிமார்க்கத்தைச் சற்றுவது கடக்கின்றார்கள்.

பரிபூர்ண மானுஷன்.

31வ. ஈசுவரத்வமறிந்த ஜீவர்களனைவரும், ரக்ஷகர் வரவையும் அவரருளையும் பெறவேண்டுமென்று நம்புகின்றனர். கிறிஸ்து சொற்பகாலமாயினும் இஜ்ஜீவன் நடிக்கும்வரை ஸ்மரணை இருந்து கொண்டே யிருக்கும். ஏனென்றால் கிறிஸ்துநாதர் அவதாரகாலமும் அவரருளால் மனுஷ்யத்வம் மலரத்தக்க காலமும் நெருங்கிவிட்டது.

பரிபூர்ண மானுஷன்.

முற்றிற்று.

சென்னை-600 006.

Sri Ramakrishna Press, Madura.

## இம்மொழி பெயர்ப்பு செய்தவரின் மற்றைய தமிழ் பிரசுரங்கள்.

1. குருவுபதேசம்—புஸ்தகத்திலிருந்து வருஷம் ஒவ்வொரு தினத்துக்கும் ஒரு உயர்ந்த எண்ணம்வீதம் பிரசுரம் செய்யப்பட்டது.
2. ஸௌந்தர்ய ஜனனி—இதில் மேற்கூறியவாரே.
3. சர்வ சமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப் பற்றியும் ஒரு சம்பாஷணை.
4. விக்கிரஹாராதனை—ஒரு சம்பாஷணை.
5. எல்லாம்வல்ல ஈசன்—ஒரு சம்பாஷணை.
6. ஸந்தியாவந்தனம்—ஒரு சம்பாஷணை.

இவைகள் மதுரை பிரம்மஞான சபையில் விலைக்குக் கிடைக்கும். விலை விபரம் அதின் ஸிகரடெரியிடம் தெரிந்து கொள்ளலாம்.